பொங்கல் வெளியீடு!
குலமகளின் திலகமென
ஒளிவீசிய உத்தமியின்
சரிதம்...
இ.எம்.பிலிம்ஸ்
அளிக்கும்
கோகுல் புரொடக்ஷன்ஸ்
சதி துளஸி
தமிழ்
டைரக்ஷன்...வி.மதுஸுதனராவ்
PRASADS
RAMDASK
எஸ்.வரலக்ஷ்மி *கிருஷ்ணகுமாரி*கும்மடி
சேலம் :
சேலம் - 2.
கோயம்புத்தூர் & நீலகிரி :
பிலிம்ஸ், கோயம்புத்தூர்.
ஸ்ரீ இ.எம். பிலிம்ஸ், 158, லாயிட்ஸ் ரோட், சென்னை-14

89697

For Particulars :

The Vauhini Pictures (Private) Ltd.,

T. Nagar Madras - 17.

படம் 18

காட்சி 5

பேசும் படம்

★ ஜனவரி - 1960 ★

பொருளடக்கம் பக்கம்

1. புதிய வெளியீடுகள் ... 5
2. செய்திப் படங்கள் ... 9
3. 1959 - வெளியீடுகள் ... 15
4. ராகினி ... 17
5. ''வைஜயந்திமாலா'' படத்தில் எம். என். ராஜம் ... 18
6. ''தாய் மகளுக்கு கட்டிய தாலி'' படத்தில் எம். ஜி. ஆர். - ஜமுனா ... 19
7. ''வடிவுக்கு வளைக்காப்''பில் சிவாஜி கணேசன் ... 20
8. ஜெமினி கணேசன் - பத்மினி ... 21
9. காகா ராதாகிருஷ்ணன் - எம். சரோஜா ... 22
10. சந்திரகாந்தா ... 23
11. ரேலங்கி (வர்ணப் போட்டோக்கள்) ... 24
12. செய்திச் சுருள் ... 25
13. ஸ்டுடியோ விஜயம் ... 29
14. புத்துணர்ச்சி பெற்ற புது மனிதர் ... 34
15. அன்று நினைத்தேன் இன்று நடந்தது - ஸ்ரீதர் ... 39
16. வேட்டை நக்ஷத்திரங்கள் ... 49
17. ''பேசும்-படம்'' காலண்டர் ... 57
18. ''ஜீவபூமி'' (வெளிப்புறக் காட்சிகள்) ... 69
19. ''பொன்னு விளையும் பூமி'' (கதை-வசனம்) ... 73
20. ''பாலநாகம்மா'' (படக்காட்சிகள்) ... 89
21. கேள்வி - பதில் ... 97
22. தபால் பெட்டி ... 106
23. நான் ரசித்த காட்சி ... 114
24. வெட்டுங்கள் வெட்டுங்கள் ... 120
25. எம். ஏ. கணபதி (அறிமுகம்) ... 123
26. நக்ஷத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள் ... 125

★ EIGHTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.


சபாஷ், கொத்தனாரே
உங்களுக்கு
இப்போது ஒரு கப் டீ
தேவைதான்!
நான்தான் டீ -
உங்கள் வேலையில்
ஊக்க மளிக்க
உத்தமமான பானம்
TEA BOARD INDIA
PST 216

புதிய வெளியீடுகள்

யானை வளர்த்த வானம்பாடி

தயாரிப்பு: நீலா புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன்: பி. சுப்ரமண்யம்
வசனம்: எம். சோமசுந்தரம்
நீளம்: 15,569 அடி
வெளியிட்ட தேதி: 27-11-59
நடிகர்கள்: ஸ்ரீராம், குமாரி, கே. வி. சாந்தி, கே. ராமசாமி, டி. பாலசுப்ரமண்யம்.

விமானம் நொறுங்கி விழுகிறது. அதிலிருந்த பிரயாணிகள் அனைவரும் மாள்கின்றனர். ஆனால் தெய்வாதீனமாக ஒரு பச்சிளங் குழந்தை உயிர் தப்பி பயங்கரக் காட்டில் யானை ஒன்றால் காப்பாற்றப்படுகிறது. அந்தக் காட்டில் பற்றற்ற தர்மராஜன் என்பவரும் ஒரு கொள்ளைக் கூட்டத்தினரும் வசித்து வருகின்றனர். தர்மராஜன் அந்த யானையையும் ஒரு குரங்கையும் வளர்த்து வருவதுடன் இக் குழந்தையையும் வளர்க்க ஆரம்பிக்கிறார். குழந்தை வளர்ந்து அழகிய மங்கையாகிறாள்.

கொள்ளைக் கூட்டத்தினரைப் பிடிக்க வரும் சேகர் அவர்களை மட்டும் பிடித்துப் போகாமல் அந்த மங்கையையும் பிடித்து தன் மனைவியாக்கிக் கொள்கிறான்.

படத்தில் வரும் குரங்கு அற்புதமாக நடித்திருக்கிறது. வனக்காட்சிகள் மனதைக் கவரும் முறையில் படமாக்கப்பட்டிருக்கின்றன. இதர அம்சங்கள் சாதாரணமானவை.

அமுதவல்லி

தயாரிப்பு: ஜூபிடர் பிக்சர்ஸ்
டைரக்ஷன்: ஏ. கே. சேகர்
கதை, வசனம்: அரு. ராமநாதன்
நீளம்: 17,867 அடி
வெளியிட்ட தேதி: 27.11-59
நடிகர்கள்: டி. ஆர். மகாலிங்கம், எம். எம். ராஜம், என். லலிதா.

மன்னர் மகள் அமுதவல்லியை தன் அசட்டு மகனுக்கு மணமுடித்து அரசைக் கைப்பற்ற முயற்சிக்கிறான் மந்திரி. அசட்டு மகனும் கவி பாடும் இளைஞனும் உருவத்தில் ஒரே மாதிரி இருக்கின்றனர். கவிஞனே அமுதவல்லிக்கு தாலி கட்டுகிறான். மந்திரியின் சதி வெளிப்பட்டுவிடவே ஏற்கனவே காதலர்களான கவிஞனும் அமுதவல்லியும் ஒன்று சேர்கின்றனர். கதை பூலோகத்தில் ஆரம்பித்து நாகலோகத்தில் முடிவடைகிறது.

பிரபல ஆர்ட் டைரக்டரான சேகர் நெடுநாளைக்கு முன்பே டைரக்டர் ஸ்தானம் வகித்திருக்க வேண்டியவர். பல காரணங்களால் இந்நிலை தாமதப்பட்டு, இப்பொழுது அவரது டைரக்ஷனில் இப்படம் வெளிவந்திருக்கிறது. பல இடங்களில் அவரது அருமையான கலைத்திறன் வெளிப்பட்டிருக்கிறது. இப்படம் நாம் இருவர், சிட்டாடல் ஞானசௌந்தரி போன்ற மகாலிங்கத்தின் வெற்றிப் படங்கள் வெளிவந்த சமயத்தில் வந்திருந்தால் ரஸிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றிருக்கும்.

வீர கடோத்கஜன்

தயாரிப்பு: பசந்த் பிக்சர்ஸ்
டைரக்ஷன்: பாபுபாய் மிஸ்திரி
வசனம்: ஆரூர்தாஸ்
நீளம்: 13,534 அடி
வெளியிட்ட தேதி: 27-11-59
நடிகர்கள்: அனிதாகுஹா, மஹிபால்

மகாபார கடோத்கஜன் கதையாவரும் அறிந்ததுதான். இதில் வரும் தந்திரக் காட்சிகள் பிரமாதமாக இருப்பதால், நடிகர்கள் அறிமுகமற்றவர்களானாலும் அலுப்புத்தட்டவில்லை. 'இது நடக்குமா?' என்ற கேள்விக்கு, 'ஏன் நடக்காது?' என்று பதில்கூறும் விதத்தில் தந்திரக் காட்சிகள் அமைந்திருப்பதால் எல்லாப் பருவத்தினருக்கும் சுவாரஸ்யம் தருவதாக இருக்கிறது. டப்பிங் சுமார்.

எங்கள் குலதேவி

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : ஏ. சுப்பாராவ்
கதை, வசனம் : எம். கே. நாதன்
நீளம் . 15,170 அடி
வெளியிட்ட தேதி : 4-12-59

நடிகர்கள் : பாலாஜி, ஜாவர் சீதாராமன், வி. ஆர். ராஜகோபால், ஏ. கருணாநிதி, பண்டரிபாய், மைனாவதி, சூர்யகலா.

சபாபதி என்பவருக்கு மூத்த மனைவி மூலம் மீனா என்ற பெண்ணும் இளைய மனைவி மூலம் சாந்தி என்ற பெண்ணும் பிறக்கின்றனர். பெரிய பெண்ணை ஒரு தீப்பெட்டி கம்பெனி மானேஜருக்கு திருமணம் முடிக்கப் படுகிறது. இது இளையதாரத்துக்குப் பிடிக்கவில்லை. மூத்தபெண்ணுக்கு விஷம் கொடுக்க முயற்சிக்கிருள். இதில் தோல்வியடையவே பிள்ளை பிறப்புக்கு பிறந்தவீடு வந்தவளுக்கு மருந்து வைத்துப் பைத்தியமாக்கு கிருள். சதி தெரிந்த கணவன் மீனாவை அழைத்துச்செல்லும் போது அவள் காணுமற்போய் இறந்து போனதாகத் தகவல் கிடைக்கிறது. குழந்தையை வளர்ப் பதற்காக சாந்தியை மறுமணம் செய்து கொள்கிருன். பைத்தியம் தெளிவடைந்த மீனா கணவன் வீட் டுக்குவந்து நடந்துபோன விஷயங் களை அறிகிருள். சாந்தியின் சந்தோ ஷத்தைக் கெடுக்க விரும்பாமல் அதே ஊரில் சினேகிதி வீட்டில் தங்கியிருக்கிருள். தீப்பெட்டி கம்பெனியில் திருட்டு நடத்திய சாணக்கியன் தன் தவறை மறைக்க தீ வைத்து விடுகிருன். இதன் காரணமாக எல்லோரும் ஒன்று கூடு கின்றனர். தீ விபத்தில் சாந்தி மடிகிருள்.

ஆரம்பத்திலிருந்து கடைசிவரை கதை தள்ளுநடை போட்டுக் கொண்டே போகிறது. குடும்ப நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட இப்படத்தில் புதுமை எதுவுமே இல்லை.

சபாஷ் ராமு

தயாரிப்பு : ராஜஸ்ரீ புரொடக் ஷன்ஸ்
டைரக்ஷன் : ஸி. எஸ். ராவ்
வசனம் : உதயகுமார்
நீளம் : 16,136 அடி
வெளியிட்ட தேதி : 27-11-59

நடிகர்கள் : என். டி. ராமராவ், ரேலங்கி, தேவிகா, எம். என். ராஜம், மாலினி.

அதிகாரத்திலிருப்பவர்கள் எப்படி நடந்து கொள்ளக்கூடாது, எப்படி நடந்து கொள்ளவேண்டும் என் பதை வலியுறுத்தும் வகையில் சபாஷ் ராமு கதை அமைக்கப்பட் டிருக்கிறது. நேர்மையான போலீஸ் கமிஷனருக்கு அக்ரமக்கார மகன் ஒருவன், தன் தம்பியை கண்ணிமை போல் காத்து போலீஸ் ஆபீசராக் கும் அண்ணன், ஒரு கொலைகாரக் கூட்டம் இவர்கள் கதையின் பாத் திரங்கள்.

பலே ராமுடு என்ற தெலுங்கு வெற்றிப் படத்தின் தமிழாக்கம் இது. அவசர அவசரமாக இப் படத்தை வெளியிட்டு விடவேண் டும் என்ற ஆர்வத்தில் தமிழ் ரஸி கர்களின் போக்கை அறியாமல் படத்தை சரியாக உருவாக்கத் தவறிவிட்டார்கள் இதன் தயாரிப் பாளர்கள். படத்தின் சிறந்த லட்சி யம் இதன் காரணமாக மங்கிவிட் டது.

அருமை மகள் அபிராமி

தயாரிப்பு: அரவிந்த் பிக்சர்ஸ்
டைரக்ஷன்: வி. கிருஷ்ணன்
வெளியிட்டதேதி: 29-11-59
நீளம்: 16,430 அடி
நடிகர்கள்: ராஜசுலோசனா, பிரேம் நசீர், மாலதி, சகஸ்ரநாமம், டி. எஸ். துரைராஜ், ஓ. ஏ. கே. தேவர்.

மிராசுதார் பொன்னம்பலத்தின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தோடு, அவரைக் கொலைக்குற்றவாளியாக்குகிறான் நாகலிங்கம் என்ற கொடியவன். ஆனால் அவர் மனைவி திலகவதி அக்குற்றத்தை தான் ஏற்று மரண தண்டனை பெற்று போலீஸ் லாரியில் போகும்போது தப்பி, தன் மகள் அபிராமியுடன், காட்டுக்குச் சென்று மாறு பெயரில் ஒரு பாதிரியின் ஆதரவில் வாழுகிறாள். காசிம் என்ற கொள்ளைக்காரனைத் தேடிவரும் இன்ஸ்பெக்டர் பாண்டித்துரை வள்ளி என்ற பெயரில் வளர்ந்திருக்கும் அபிராமியைக் கண்டு காதலிக்கிறான். அவள் தாய் மரண தண்டனையிலிருந்து தப்பியவள் என்பதறிந்து கைதாக்கி, பிறகு அபிராமியுடன் உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடித்துக் கடைசியில் அபிராமியை அடைகிறான்.

போலீஸ் இன்ஸ்பெக்டரொருவர் தன் கடமையைப் புறக்கணித்து காதலில் ஈடுபடுகிறார் என்ற கருத்து காவலர் தொழிலுக்கு இழிவு படுத்துவதாகும். பயன்படக்கூடிய எந்த விதமான புதிய கருத்தும் இப்படத்தில் இல்லை. இப்படத்திலுள்ள இதர அம்சங்களும் சுமாராகத்தான் இருக்கிறது.

சகோதரி

தயாரிப்பு: ஜி.கே. புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன்: பீம்சிங்
மூலக்கதை: கிருஷ்ணமூர்த்தி புராணிக்
வசனம்: மாறன்
நீளம்: 17,450 அடி
வெளியிட்ட தேதி: 11-12-59
நடிகர்கள்: பாலாஜி, பிரேம்நசீர், சந்திரபாபு, ராஜசுலோசனா, தேவிகா, என். லலிதா.

கைப்பிடித்த கணவன் கயவர்களுடன் சேர்ந்து கள்குடித்து கண்ட பெண்களின் பேரில் கைவைக்கும் கசடனாயிருந்தும் அவனைப்போற்றி வணங்கும் ஆதர்ச இந்தியப் பெண்மணி ஒருவளது கதை; பட்டணப் படிப்பால் பெற்றோரது சம்மதமில்லாமல் காதல் கல்யாணத்தில் ஈடுபட்டுப் பல வகையில் துன்புறும் கதை; தான் மணமுடிக்கவிருந்த பெண் ஒருத்தி வழிதவறி நடப்பதைக்கண்டு அவளைத் தன் சகோதரியாகப் பாவித்து, பலருக்கும் உதவி செய்யும் பரோபகாரி ஒருவளின் கதை - இம்மாதிரியாக மூன்று அல்லது நான்கு சிறு கதைகளை ஒன்றோடொன்று பின்னிப் பிணைத்து 'சகோதரி'யை உருவாக்கி யிருக்கின்றனர். படத்தின் தலைப்புக்கேற்ற விஷயம் எங்கே யிருக்கிறது என்று தேடிப் பிடிக்க வேண்டும்.

கதையின் முடிவு சோகமாக இருப்பது பலருக்குப் பிடிக்காது. சந்திரபாபுவின் ஹாஸ்ய விருந்து இப்படத்தின் சிறந்த அம்சம்.

பொன்னு விளையும் பூமி

தயாரிப்பு : ஓரியண்டல் மூவீஸ்
டைரக்ஷன் : பீம்சிங்
கதை, வசனம் : இராம. அரங்கண்ணல்
நீளம் : 17,150 அடி
வெளியிட்ட தேதி : 11-12-59
நடிகர்கள் : ஜெமினி கணேசன், பாலய்யா, எஸ். வி. சுப்பய்யா, டி. பாலசுப்ரமண்யம், பத்மினி, ராகினி, சுகுமாரி.

கிராமம் ஒருஸ்வர்க்கம்; நகரம் ஒரு நரகம் என்ற அடிப்படையில தொகுக்கப்பட்ட கதை பொன்னு விளையும் பூமி. பட்டணப் பிரவேசம் செய்யும் ஒரு கிராமத்தானை ரௌடிகள் சூழ்ந்துகொண்டு படாதபாடு படுத்துகின்றனர்; பட்டணத்து பெரிய மனிதர்களெல்லாம் அக்கிரம வழியிலேயே பணம் சம்பாதிக்க முயலுகின்றனர்; பட்டணத்துப் பெண்கள் மேனாட்டு முறையில் ஆடிப்பாடி அமர்க்களப்படுத்துகின்றனர். இவைதான் பொன்னு விளையும்பூமி நமக்குக்கூறும் பாடம்.

இந்த தோரணையிலே பிரசாரம் செய்யும் இப்படத்தால் நாட்டுக்கு ஒரு நலனும் காணமுடியாது.

ஜெமினி கணேஷ் குடியானவன் வேஷத்தில் திறம்பட நடித்திருக்கிறார். சந்திரபாபுவை சரியானபடி உபயோகப்படுத்தவில்லை. சில இடங்களில் மட்டும் பத்மினியின் நடிப்பு அவரது வழக்கமான தரத்தில் இருக்கிறது.

வீட்டில் சினிமா புரொஜக்டர்



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி. அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினுல் இருக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், வித வித வர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனம். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் விலை ரூ. 15.50 வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 4.50. தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரூ. 3.

Anand Industries
Mandi Ramdas, Mathura.

அழகர் மலைக்கள்வன்

தயாரிப்பு : கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன் : கெம்பராஜ்
வசனம் : புரட்சிதாசன்
நீளம் : 15,432 அடி
வெளியிட்ட தேதி : 4-12-59
நடிகர்கள் : பாலாஜி, கெம்பராஜ், வி. கோபாலகிருஷ்ணன், காகா ராதாகிருஷ்ணன், மாலினி, விஜயகுமாரி, மனேரமா.

புராணங்களை இதுவரைத் தஞ்சமடைந்திருந்த தயாரிப்பாளர் நடிகர் கெம்பராஜ், தற்போது சமூகக் கதையைத் தஞ்சமடைந்திருக்கிறார்; இது ஓரளவுக்கு அவருக்கு வெற்றியைத் தந்தாலும், "அழகர்மலைக் கள்வன்" விளக்கும் கதை, தயாரிப்பாளருக்குப் புதுமையாக இருந்தாலும், திரையுலகுக்குப் பலமுறை அறிமுகமானதே. கொடுமையுள்ளம் படைத்த ஜமீன்தார், எதிர்த்துப் புறப்படும் புரட்சிக்கும்பல், அவர்களைப் பழிவாங்கும் வகையில் அப்புரட்சிக்கும்பலின் தலைவனுக்கு இழைக்கும் அநீதி, பழிவாங்க அவன் ஜமீன்தாரின் மகனைக் கடத்திப் போவது, அவன் புரட்சித் தலைவனைத் தன் தந்தை என நினைப்பது, ஜமீன்தாரைப் பழிவாங்கப் புறப்படுவது இவை சலித்துப்போன அம்சங்கள் தான். ஆனல் உண்மையில் அழகர்மலைக் கள்வன்யார் என்பதை வெளிப்படுத்தும்வரைக்காப்பாற்றப் பட்டிருக்கும் 'மர்மம்' படம் பார்ப்பவர்களைப் பிடித்திழுத்து உட்கார வைக்கிறது.

செய்திப் படங்கள்



செங்கற்பட்டில் 24-11-59 அன்று கதாசிரியர் டைரக்டர் ஸ்ரீதருக்கு பாராட்டு விழா நடைபெற்ற போது எடுத்த படங்கள் 1. மந்திரி எம். பக்தவத்சலம் 2. ஸ்ரீதர். 3. ஜெமினி. 4. ஸ்ரீதருக்கு பரிசு வழங்கும் ஜெமினி கணேசன். 5. தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தினர் கொடுத்த வரவேற்பில் ஸ்ரீதர்.

நடிகர் தின விழா

கோல்டன் ஸ்டுடியோவில் நடந்த நடிகர் தின விழாவில் எடுத்த படங்கள் 1. தலைமை வகித்த மந்திரி கக்கன். 2. விளையாட்டுப் போட்டியில் நடிகைகள். 3. பொம்மைகளை ரசிக்கிறார்கள் எம். என். ராஜமும், சாவித்திரியும். 4. கயிறு இழுக்கும் போட்டியில் ராகினி, அஞ்சலிதேவி, ஜி. சகுந்தலா. 5-6. விழாவிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கடைகள்.

1. எம். ஜி. ஆர்., என். டி. ஆர்., நம்பியார் முதலா னோருடன் உபநடிகர்கள். 2-3. காரியதரிசி நாராயணசாமி வரவேற்கிறார். 4. விழாவில் சாவித்திரி, எம். என். ராஜம், ஜெமினி. 5. நடிகர் சங்கத்தலைவி அஞ்சலிதேவி. 6. காரியதரிசி நாராயணசாமி. 7. எஸ். எஸ். ஆர். 8. எம். ஜி. ஆர்.

போட்டோக்கள்:
டி. ஜ. சந்தாமியான்





1. அகிலனின் 'பாவை விளக்கு' படப்பிற்கு ஆக்ரா சென்றிருந்த சிவாஜி தம்பதிகளுடன் தயாரிப்பாளர் கோபண்ணா.

2. குதுப்பினார் உச்சியில் சிவாஜியும் எம். என். ராஜமும்.

3. ஆக்ரா கோட்டையில் சிவாஜியும் ராஜமும்.

4. 'பாவை விளக்கு' கலைஞர்கள்.





ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் 'வடிவுக்கு வளைகாப்'பில் 1. சாவித்திரி. 2. ஏ.பி.என். 3. சிவாஜி-சாவித்திரி. 4. ஜெமினி கணேசன் பிறந்த நாளை ஒட்டி தில்லியில் சாவித்திரி 'தூந்பேடா' வழங்குகிறார். 5. ஒளி, ஒலிப்பதிவு சாதனங்கள்.



1. எம். ஜி. ராமச்சந்திரன் தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர்களுக்கு கொடுத்த விருந்தில் வீரப்பன் வரவேற்கிறார். 2. கேமிரா நிபுணர் -டைரக்டரான பாபுபாய் மிஸ்திரிக்கு பிலிம் சென்டர் மஜித் கொடுத்த வரவேற்பில் ரவி. எம். தலைமை வகித்தார். 3. ரஷ்ய கலாசாரப் பிரதிநிதிகளுக்கு 'மேக்கப் சிவராமன் கொடுத்த வரவேற்பில் எடுத்தபடம்.

1959 வெளியீடுகள்

தமிழ்

1. அபலை அஞ்சுகம். 2. அவள் யார். 3. அமுதவல்லி. 4. அழகர் மலைக் கள்வன். 5. அல்லி பெற்ற பிள்ளை. 6. அருமை மகள் அபிராமி. 7. அதிசயப் பெண். 8. பாகப் பிரிவினை. 9. பாக்ய தேவதை. 10. தெய்வமே துணை. 11. தெய்வ பலம். 12. எங்கள் குலதேவி 13. கண் திறந்தது. 14. கலைவாணன். 15. கல்யாணிக்கு கல்யாணம். 16. கல்யாண பரிசு. 17. கூடிவாழ்ந்தால் கோடி நன்மை. 18. காவேரியின் கணவன். 19. மணிமேகலை. 20. மனைவியே மனிதனின் மாணிக்கம். 21. மரகதம். 22. மஞ்சள் மகிமை. 23. மாலா ஒரு மங்கல விளக்கு. 24. மாமியார் மெச்சிய மருமகள். 25. மாதவி. 26. மின்னல் வீரன். 27. நல்லதீர்ப்பு. 28. நாலுவேலி நிலம். 29. நாட்டுக்கொரு நல்லவள். 30. நான் சொல்லும் ரகசியம். 31. ஒரே வழி. 32. ஓடிவிளையாடு பாப்பா. 33. பத்தரை மாத்து தங்கம். 34. பாஞ்சாலி. 35. பாண்டித்தேவன். 36. பிரசிடெண்ட் பஞ்சாட்சரம். 37. புதுமை பெண். 38. பெண்குலத்தின் பொன் விளக்கு. 38. பொன் விளையும் பூமி. 30. ராஜ சேவை. 41. ராஜா மலையசிம்மன். 42. சகோதரி. 43. சிவகெங்கைச் சீமை. 44. சுமங்கலி. 45. சொல்லு தம்பி சொல்லு. 46. தாய் மகளுக்கு கட்டிய தாலி. 47. தலை கொடுத்தான் தம்பி. 48. தங்கப் பதுமை. 49. தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை. 50. தாமரைக் குளம். 51. உலகம் சிரிக்கிறது. 52. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். 53. வண்ணக்கிளி. 54. வாழ்க்கை ஒப்பந்தம். 55. வாழவைத்த தெய்வம். 56. வீரபாண்டிய கட்டபொம்மன். 57. யானை வளர்த்த வானம்பாடி. — தமிழ் (டப்பிங்): 1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். 2. சர்க்கஸ் சுந்தரி. 3. ஜெய வீரன். 4. கல்யாணப் பெண். 5. கண்ணிறைந்த கணவன். 6. மனசுக்கேத்த மாப்பிள்ளை. 7. நாரதர் கல்யாணம். 8. நள தமயந்தி. 9. பச்சைமலைக் குறத்தி. 10. சதிசுலோசனா. 11. சபாஷ் ராமு. 12. வினாயக சதுர்த்தி. 13. வீர கடோத்கஜன். — தெலுங்கு 1. அப்பு சேஸி பப்பு கூடு. 2. ஆலு மகலு. 3. பக்த அம்பரீஷ. 4. பண்டராமுடு. 5. பாக்ய தேவதா 6. பால நாகம்மா. 7. தெய்வ பலம். 8. இல்லரிகம். 9. ஜய விஜய. 10. ஜெயபேரி. 11. கிருஷ்ண லீலலு. 12. கூதுரு காபுரம். 13. மனோரமா. 14. மாங்கல்ய பலம். 15. மா இண்டி மஹாலக்ஷ்மி. 16. பெள்ளி மீத பெள்ளி. 17. பெள்ளி சந்தடி. 18. ராஜா மலய சிம்ஹா. 19. ரேசுக்கா பகடி சுக்கா. 20. சதி சுகன்யா. 21. சதி துளசி. 22. சபாஷ் ராமுடு. 23. சிப்பராய் கூதுரு. 23. வச்சினகோடலு நச்சிந்தி. 25. வீர பாஸ்கருடு.—தெலுங்கு (டப்பிங்) 1. அந்தா பெத்தலே. 2. அனக அனகா ஒக ராஜு. 3. காந்தாரி கர்வபங்கம். 4. கொப்ப இண்டி அம்மாயி. 5. அனுமான் பாதாள விஜயம். 6. இல்லாலி அதிர்ஷ்டமே இண்டிகி பாக்யம். 7. மஹிஷாசுர மர்தனி. 8. மந்திரவாதி. 9. பெத்த கோடலு. 10. சபாஷ் பில்லா. 11. சம்பூர்ண ராமாயணம். 12. சௌ பாக்யவதி. 13. வீரபாண்டிய கட்டப்ராஹ்மன. 14. வீர கடோத்கஜன். 15. வீர சிம்ஹா. 16. ஜிம்போ. 17. செவிலோ ரஹஸ்யம் 18. ஸ்த்ரீ சபதம். 19. மஹாலக்ஷ்மி மஹிமா.— கன்னடம் 1. அப்பா ஆ உடுகி. 2. தர்ம விஜயா. 3. ஜகத்ஜோதி பஸ்வேஸ்வர. 4. மஹிஷாசுர மர்தனி. 5. மனகே பண்ட மஹாலக்ஷ்மி.— கன்னடம் (டப்பிங்) 1. அத்தி கே.— மலையாளம் 1. சதுரங்கம். 2. மின்னல் படையாளி. 3. நாடோடிகள்.-- ஹிந்தி 1. அமர்தீப். 2. பாப் பேடே. 3. பைகாம். 4. ஸ்கூல் மாஸ்டர்.— சிங்களம் 1. சிஹினியா. 2. சிரே மள்ளே. 3. சுபத்ரா.— சிங்களம் (டப்பிங்) 1. அஹிம்ஸக ப்ரயோகக.

டிசம்பர் 31 உ முதல்
சென்னை
ஸ்ரீ கிருஷ்ணா · பாரகன் · உமா
மற்றும் தென்னாடெங்கும்
கல்பனா கலா மந்திர்
தாய் மகளுக்குக் கட்டிய தாலி
புரட்சி நடிகர்....
M.G.ராமச்சந்திரன் நடித்தது
கதை....
அறிஞர் அண்ணா M.A.M.L.A.
தயாரிப்பு & டைரக்ஷன்....
R.R.சந்திரன்
வசனம் : ராம.அரங்கண்ணல்
சங்கீதம் : T.R.பாபா
ஆர்ட் : C.ராகவன்
ஸ்டுடியோ : விஜயா & வாஹினி
உலக உரிமையாளர்கள் : டி.T.N.K.கோவிந்தராஜ் செட்டி, சென்னை-3.
ARUNA

வெளி வந்து வெற்றியுடன் ஓடிக் கொண்டிருக்கும், ஓரியண்டல் மூவிஸாரின் ''பொன்னு விளையும் பூமி''யில் ராகினி. இதன் வசனங்களை ராம. அரங்கண்ணல் எழுதியிருக்கிறார். பீம்சிங் இதன் டைரக்டர்.



அவர்கள் குடித்தவர் போன்ற நிலையிலிருப்ப
தால் அவளுக்குப் பதில் அந்தச் சிலையைப்
பிடிக்கிறார்! - மதுரம் பிக்சர்ஸ் ''மீண்ட ஸ்வர்
கம்'' படத்தில் ஜெமினி கணேசன் - பத்மினி.

இந்த ராஜா - ராணி எந்த நாட்டையும் சேர்ந்தவர்கள் அல்ல! வேடமணிந்தவர்கள்! ரங்கா பிக்சர்ஸ் ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' படத்தில் காகா ராதாகிருஷ்ணன் - எம். சரோஜா.

இவள் அலங்காரத்தையும் முகபாவத்தையும் கண்டால் இவள் ''தர்மபத்தினி''யாக இருக்க முடியாது என்று தெரிகிறதே! ஆர். எஸ். ஆர். மூவிடோன் ''தர்மபத்தினி''யில் சந்திரகாந்தா.

சங்கீதா புரொடக்ஷன்ஸாரின் ''மாமனுக்
கேற்ற மாப்பிள்ளை'' தமிழ்ப் படத்தில்
நடிகர் ரேலங்கி இப்படித் தோன்றுகிறர்.

செய்திச் சுருள்

தினகரனின் திரைப்படம்

'ஆஸ்திக்கொரு ஆணும் ஆசைக்கொரு பெண்ணும்' என்ற பெயரில் ஒரு சுவையான சமூகச் சித்திரத்தை தினகரன் பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள். அன்றாட குடும்ப நிகழ்ச்சிகளைக் கோர்வைப் படுத்தி, ஏ. பி. நாகராஜன் கதை-வசனம் அமைத்திருக்கும் இதில், எம். என். ராஜம், பிரேம்நசீர் இருவரும் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்கள். ஏ. பி. என். யூனிட்டைச் சேர்ந்த கே. சோமு படத்தை டைரக்ட் செய்கிறார்; கே. வி. மகாதேவன் இசை அமைத்து வருகிறார்; மருதகாசி பாடல்களை எழுதியிருக்கிறார். பிலிம் சென்டரில் படம் தயாராகிறது.

'பாலநாகம்மா' வருகிறாள்

என். டி. ராமராவ், ரங்கராவ், அஞ்சலிதேவி, ராஜசுலோசனா முதலியோர் நடித்திருக்கும் 'பாலநாகம்மா' தமிழ் பேசிக்கொண்டு விரைவிலேயே தமிழகமெங்கும் வரப்போகிறாள். ஒரு மாந்திரீகனின் சுயநலப் பித்தையும், ஒரு ராஜகுமாரனின் தாயன்பையும் படம்பிடித்துக் காட்டும் இப்படக்கதை மிகப் பிரபலமானது. ஏராளமான பொருட் செலவில் தயாராகியிருக்கும் இப்படம் பொழுது போக்குக்கேற்ற படமாக இருக்கும்.

ஜெமினியின் 'இரும்புத்திரை'

பொங்கற் புது நாளன்று, தமிழகத்தின் வெள்ளித் திரைகளை 'இரும்புத்திரை' அலங்கரிக்கப் போகிறது. நீண்ட நாட்களாக தயாராகி வந்த சமூகப் படத்திற்குத்தான் 'இரும்புத்திரை' என்ற பரபரப்பூட்டும் பெயரை வைத்திருக்கிறார்கள் ஜெமினி ஸ்தாபனத்தார். சிவாஜி கணேசன்-வைஜயந்திமாலா இருவரும் முதன் முறையாக இதில் பிரதம பாகத்தில் நடிக்கிறார்கள். நீண்ட நாட்களுக்குப்பின் வசுந்தரா தேவி, (வைஜயந்தியின் அன்னையாக) இதில் தோன்றி நடிக்கிறார். மற்றும் பி. சரோஜாதேவி, வனஜா, எஸ். வி. சுப்பய்யா, ரங்கராவ் தங்கவேலு, துரைராஜ், கே. கண்ணன் முதலியோர் நடிக்கும் இப்படத்தை எஸ். எஸ். வாஸன் டைரக்ட் செய்து வருகிறார். கடமையையும் உரிமையையும் காக்கப் புறப்படும் ஒரு தொழிற்சங்கத் தலைவனின் வாழ்க்கையை அடிப்படையில் வைத்து பின்னப்பட்ட படம் இது.

அஞ்சலி பிக்சர்ஸ் "அடுத்த வீட்டுப் பெண்" படத்தில் குமாரி மாதுரி நடித்து வருகிறார்.



சென்னை கோபாலபுரத்தில் சர். சி.பி. ராமசாமி அய்யருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் சிவாஜி கணேசன் கலந்து கொண்டார்.

பொன்னித் திருநாள்

கதாசிரியர், டைரக்டர் ஏ. கே. வேலன் தமது அடுத்த தயாரிப்பாக 'பொன்னித் திருநாள்' என்ற படத்தை அறிவித்திருக்கிருர். அவரேகதை-வசனம் எழுதி, டைரக்ட் செய்யும் இதில் ராஜசுலோசனு, மனேரமா, முத்துகிருஷ்ணன், பக்கிரிசாமி முதலியோர் நடிக்கிருர்கள். கே. வி. மகாதேவன் இதற்கு இசை அமைக்கிருர்.

காவேரியின் தயாரிப்பு

'பெண்ணுக்குக் கணவனே கண்ணு' என்ற படத்தை காவேரி பிலிம்சார் தயாரிக்கப் போகிருர்கள். ராமமூர்த்தி டைரக்ட் செய்யும் இதில் நடிக்க தேவிகா, மனேரமா, சூர்யகலா, எம். ஆர். ராதா, நரசிம்மபாரதி, எஸ். வி. சுப்பய்யா முதலியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

அருணுசலத்தில் 'சீர்வரிசை'

சுப்பு ஆறுமுகம் கதை வசனம் எழுதியுள்ள 'சீர்வரிசை' என்ற படத்தை திரு பிலிம்சார் தயாரித்து வருகிருர்கள். ஏ. கே. வேலனுக்கு சொந்தமான அருணுசலம் ஸ்டுடியோவில் இப்படம் தயாராகி வருகிறது.

பாட்டாளியின் வெற்றி

ஏ. சுப்பராவ் டைரக்ஷனில், சம்பு பிலிம்சார் தயாரித்து வரும் 'பாட்டாளியின் வெற்றி' விரைவில் வரப்போகிறது. சாவித்திரி, ஏ. நாகேஸ்வரராவ் பிரதம பாகத்தில் நடித்து வரும் இதன் கதை-வசனங்களை ரா. வே. எழுதியிருக்கிருர். 'உண்மை உழைப்பாளியின் உறுதுணை வெற்றிதான்' என்பதைச் சுவைபட எடுத்துச் சொல்லும் இதில் பாலய்யா, கே. ஏ. தங்கவேலு, ரங்கராவ், கே. சாரங்கபாணி, கிரிஜா முதலியோரும் நடிக்கிருர்கள்.



பாலையா சுடப் போவது பறவையையா மனிதனையா? சம்பு பிலிம்ஸ் தயாரித்து வரும் "பாட்டாளியின் வெற்றி" படத்தில்.

கொட்டு மேளம்

சென்ற மாதம் 14-ம் தேதி யன்று கோல்டன் ஸ்டுடியோ வில் கெட்டி மேளம் முழங்க, 'கொட்டு மேளம்' படத்தின் 'ஆரம்ப விழா நடைபெற்றது. செட்டியார் பைனன்ஷியர்ஸ் முத்துராமன் படப்பிடிப்பைத் துவக்கி வைத்தார். தேவிகா, லட்சுமிராஜ்யம், மனோரமா, முத்துகிருஷ்ணன், அசோகன், பக்கிரிசாமி முதலியோர் நடிக் கும் இப்படத்தின் டைரக்ஷனை ஒளிப்பதிவாளர் வி. ராமமூர்த் தியும், இசை அமைப்பை டி. ஜி. லிங்கப்பாவும் செய்து வருகிறார் கள். படத்தின் கதை, வசனத் தை வித்வான் வே. லட்சுமணன் எழுதியிருக்கிறார்.

ஏ.எல்.எஸ். புரொடக்ஷன்ஸ் ''சங்கிலித் தேவன்'' படத்தில் எஸ். எஸ். ஆரும் ராஜசுலோசனவும்

கடவுளின் குழந்தைகள்

'வீரசிவாஜி' படத்தைத் தயாரிக் கப் போவதாக அறிவித்து அதற் கான ஆரம்ப விழாவையும் கொண் டாடிய 'வெற்றிவேல் பிக்சர்ஸார்' அந்தப் படத்தை தயாரிப்பதைக் கைவிட்டு விட்டார்கள். பதிலாக 'கடவுளின் குழந்தைகள்' என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். காந்திமகா னின் போதனையைப் பின்பற்றி இப் படம் அமைக்கப்படும் என்று தெரி கிறது.

சதி துளசி

இ. எம். பிலிம்சார் அளிக்கும் 'சதிதுளசி' தமிழ்ப்படம் விரைவில் வெளிவரப் போகிறது. எஸ். வர லக்ஷ்மி, கிருஷ்ணகுமாரி, கும்மிடி முதலியோர் நடித்துள்ள இப் படத்தை மதுசூதனராவ் டைரக்ட் செய்திருக்கிறார்.

கைதி கண்ணாயிரம்

'கைதி 911' என்ற ஹிந்திப் படத் தைத் தழுவி, மாடர்ன் தியேட்டர் சார் படமாக்கப் போகும் தமிழ்ப் படத்திற்கு 'கைதி கண்ணாயிரம்' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ஷனில் வளரப்போகும் படம் இது.

'வீரசிவாஜி'யை பிரம்மாண்ட அளவில் தங்கள் லக்ஷியத் தயா ரிப்பாக உருவாக்கப் போவதாக ஏ. எல். எஸ்.-பத்மினி பிக்சர்ஸ் ஸ்தாபனத்தார் சொன் னதன் விளைவாகவே, வெற்றிவேல் பிக்சர் ஸார் இதைக் கை விட்டு விட்டார்கள். வண்ணப் படமாக வெளிவரப் போகும் சிவாஜியின் வரலாற் றுப் படத்தில் 'நடிகர் திலகம்' கணேசன் சிவாஜியாக நடிப்பார் என்று தெரிகிறது.



இளம் நடிகர் ரணதீர், தேவிகா இருவரும் ''இவன் அவனேதான்'' படத்தில் இப்படித் தோன்றுகிறார்கள்.



ஸ்டுடியோ விஜயம்

அவள் ரஜபுத்ர வாலிபர்களின் உள்ளத்திலே காதல் சூருவளியைக் கிளப்பிவிட்ட அழகி. இளமை, அழகு, அன்புள்ளம், பொறுமை இவை யனைத்தும் கொண்ட அந்தக் கட்டழகியின் பெயர் அகிலா. அவள் ரஜபுத்ர இளம் இதயங்களில் தேவியாகக் கொலு வீற்றிருப்பதால்தான் அகிலாதேவி என்று அழைக்கப்படுகிறளோ என்னவோ? "இது எங்கள் 'ஜீவபூமி'. இதை விட்டுக்கொடுக்க மாட்டோம். விட்டுக் கொடுக்கும் யாரும் இந்த நாட்டின் அசல் வித்தாக இருக்க மாட்டான்" என்று கர்ஜித்த சிம்மக்குரலோன் கட்டபொம்மனுக்குக் கிடைத்த வடநாட்டுத் தம்பியோ என்று யாரும் நினைக்கும் வண்ணம் வீறு கொண்டெழுகிறன் ரஜபுத்ர காளை ரதன் சந்தாவத். அவன் மொகலராயர்களிடம் அடிபட்டு விழுகிறன். அகிலாவின் கைப்பட்டு எழுகிறன்.

வடநாட்டிலே சமீபத்தில் "ஜீவபூமி" படத்தின் வெளிப்புறக் காட்சியின்போது படமாக்கப்பட்ட சம்பவங்களின் ஒரு பகுதிதான் உங்களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. சரோஜாதேவி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இருவரும் முறையே அகிலாதேவியாகவும் ரதன் சந்தாவத்தாகவும் நடித்தார்கள். அப்போது எடுக்கப்பட்ட சரோஜாதேவியின் படத்தைத்தான் நீங்கள் இங்கே பார்க்கிறீர்கள். இவர் சாய்ந்து படுத்திருக்கும் நிலையில் ரதன் சந்தாவத் என்ன, வாலிப மனம் படைத்த வயோதிகர்கள் கூட ஆசைப்படத்தானே செய்வார்கள்! ஸ்ரீராம் புரொடக்ஷன்ஸார் ஏராளமான பொருட்செலவில் தயாரிக்கும் "ஜீவபூமி"யின் கதையை சாண்டில்யன் எழுதி யிருக்கிறர். ஏ.பி. நாகராஜன் திரைக்கதை வசனங்களை எழுதி யிருக்கிறர். கே. சோமு டைரக்ட் செய்கிறர். இவர்களுடன் எம். ஆர். ராதா, 'குல தெய்வம்' ராஜகோபால், மனோரமா, டி. எஸ். பாலையா, அசோகன், டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி, கே. சாரங்கபாணி, ஸ்ரீராம் முதலியோர் நடத்துவரும் 'ஜீவபூமி' ஒரு மகத்தான படமாக இருக்குமென்பது நிச்சயம்.

* * *

நிர்மலா ஒரு நடனப் பள்ளியில் நடனம் பயிலுகிறள். அதற்குக் காரணமாக இருக்கும் சேகர் அவளிடம் அன்பு கொள்கிறன். அவள்



தன் வாழ்வின் சிறப்பே அவளை மணப்பதில்தான் இருக்கிறது என்று நம்புகிறாள். ஆனால் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் உலகிலே வேறென்ன இருக்கிறது? தெய்வமேது, தேவாதியேது? நடன ஆசிரியர் குமரய்யா, ''அவள் நடனக் கலைக்காக அர்ப்பணிக்கப்பட வேண்டிய பிறவி மேதை. அவள் அறியாமல் அவள் உள்ளத்திலே இருந்த கலை விளக்கின் திரியைத் தூண்டி விட்டுக் கலை விளக்கை ஜோதி விடும்படிச் செய்த பெருமை உனக்கு வேண்டும். அவள் நடனகலாவல்லியாகப் புகழ் பெறுவதைக் கண்டு பூரிக்கும் நிலை எனக்கு வேண்டும். ஆகவே அவளை மறந்துவிடு. உனக்கு மனைவியாக யாரை வேண்டுமானாலும் மணந்துகொள்,' அவளைத்தவிர. கலைக்குக் கிடைக்கமாட்டார்கள் எனக்கு அவளைத்தவிர,'' என்கிறார் குமரய்யா. சேகர் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அவள் நல்வாழ்வை விரும்பும் உத்தமமான எண்ணத்தை ஏற்படுத்திக்கொண்டு பிரதிபாவுக்கு மாலையிடுகிறான். நிர்மலா தன் கலை, தன் உடல், தன் பொருள், தன் ஜீவன் எல்லாவற்றையும் சேகர் ஒருவனுக்காக மட்டுமே வளர்த்து வருகிறாள். அவன் தன்னுடையவன் அல்ல என்ற ஒரே காரணத்திற்காக அவள் இவை அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்து விடுகிறாள். ஆனால் அவளுக்கு வெறுப்பு ஏற்படுவதெல்லாம் கலையின்மீது தான். அவளுடைய அபிப்பிராயத்தில்—அவள் வாழ்வை - மனக் கோட்டையைச் சிதற அடித்தது அந்தப்பாழும் கலை தானே? உடனே அந்தக் கன்னி சபதம் செய்கிறாள், இனி நடனமாடுவதில்லை என்று. அவள் உள்ளத்தில் கொண்டிருந்த ஆசைக் கோட்டையின் கற்கள் சிதறுகின்றன. ஆகவே அவள் கால்சலங்கை மணிகளும் சிதறுகின்றன. அவள் நடைப்பிணமாகிறாள். அவன் உடலை அவளால் அணைக்க முடியாது. ஆனால் அவன் நினைவை— அவள் உள்ளத்திலிருந்து அவனைப் பிரிக்க முடியாது. அவனை அவளால் அடிக்கடிப் பார்க்க முடியாது. ஆனால் அவனைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியாது. ஆகவே அவன் படத்தை வைத்துப் பூஜிக்கிறாள்.

' ''பேசும் பட'த்தில் சிறு கதைகள் வெளியிடப்படுகின்றனவா என்ன?'' என்று சந்தேகப் படாதீர்கள்! படப்பிடிப்பின் முன் சம்பவங்களைக் கொடுத்து 'நீங்கள் அடுத்து பார்க்

கப் போகும் காட்சியுடன் தொடர்பு கொள்ளவே இதை எழுதினேன். வாருங்கள், படப்பிடிப்பைப் பார்க்கலாம்.

"அதோ வருகிருளே, அவள்தான் பிரதிபா. பணத்தால் பெரியவளும் குணத்தால் சிறியவளுமான அவள் தான் சேகரின் மனைவி. உத்தமமான தன் கணவனையும், நிர்மலமான இதயம் கொண்ட நிர்மலாவையும் அனுவசியமாக மனப்பேயின் தூண்டுதலால் இணைத்துப் பார்த்துப் பொருமை கொண்டவள் அவள்.

"என் கணவன் படம் உனக்கெதுக்கடி?" என்கிருள். "அவர் இங்கு வருவதில்லை. அவர் படம் மட்டும் இங்கிருக்கிறது. எனக்கு அவர் கிடைக்கவில்லை. அவர் நினைவாக உள்ள படமாவது இங்கே இருக்கட்டும்" என்று கெஞ்சுகிருள் நிர்மலா. மிஞ்சுகிருள் பிரதிபா. பலன்...? கணவனின் படம் என்றும் பாராமல், இன்னொருத்தி வைத்திருக்கிருள் என்ற ஒரே காரணத்துக்காக, அதை உடைத்து விட்டுப் போகிருள் பிரதிபா.

"ஐயோ! என் உள்ளமும் மணிகளும் சிதறியபோதுகூட எனக்கு இந்தக் கஷ்டம் வரவில்லையே. இப்போது அவரே சுக்கு நூருக உடைந்து விட்டாரே" என்று கதறிக் கண்ணீர் வடித்து, வெறும் சட்டத்தோடிருக்கும் சேகரின் படத்தை அப்படியே எடுத்து அணைத்துக் கொள்ளுகிருள் நிர்மலா. சேகரின் உடம்பில் தூசி படுவதைக்கூட விரும்பாதவளாயிற்றே அவள்.

இனி ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்காமல் விவரம்கூறி விடுகிறேன். கூறித்தானே ஆகவேண்டும்?

மதுரம் பிக்சர்ஸாரின் "மீண்ட ஸ்வர்கம்" (இப்படிப் படத்தின் பெயரை எழுதுவது எனக்கு வருத்தமாகத்தானிருக்கிறது!) படத்திற்காக இந்தக் காட்சி சென்ற மாத மத்தியில் படமாக்கப்பட்டது. நடனக்கலையில் தேர்ந்து அதை வெறுத்த நிர்மலாவாக பத்மினியும், நடனமாடத் தெரியாமலேயே ஊழிக் கூத்தாடிய பிரதிபாவாக என். லலிதாவும் நடித்தனர். 'கல்யாண பரிசு' வெற்றிப் படத்தை டைரக்ட் செய்த இளம் கதாசிரியர், வசனகர்த்தா, டைரக்டர் ஸ்ரீதர் இப்படத்தை டைரக்ட் செய்து வருகிருர். சேகராக ஜெமினி கணேசனும் குமரய்யாவாக கே. நடராஜனும் இதில் நடித்து வருகிருர்கள்.

* * *

பாரமவுண்ட் ஸ்டுடியோவுக்குள்— இல்லை யில்லை மெஜஸ்டிக் ஸ்டுடியோவுக்குள் (பாரமவுண்ட் ஸ்டுடியோவுக்கு இப்போது மெஜஸ்டிக் ஸ்டுடியோ என்று பெயர். பாரமவுண்ட் என்ற பெயரில் வேறு ஒரு கம்பெனி இயங்கி வருவதால் இந்த ஸ்டுடியோவின் பெயர் மாற்றப்பட்டிருக்கிறது) நுழைந்தேன். சிவாஜி கணேசன் ஒரு பாடலுக்கு வாயசைக்கும் காட்சியொன்று படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் காட்சி முடிய விருந்தது. சிவாஜி கணேசனை சட்டென்று படம் பிடித்துக் கொண்டேன். காட்சியும் முடிவுற்றது. தயாரிப்பாளர், டைரக்டர்


'மீண்ட ஸ்வர்கம்' - சேகர்

கதை—வசனகர்த்தா ஏ.டி. கிருஷ்ண சாமி நின்று கொண்டிருந்தார். "நான் வருவதற்குள் முடித்து விட்டீர்களே! காட்சியின் விவரம் என்ன? சிவாஜி கணேசன் பாடிய இக்காட்சியின் விவரம் என்ன?" என்று கேட்டேன்.

அவன் ஒரு சீர்திருத்தவாதி. எல்லாவற்றிலும் புதுமை காணும் புரட்சி மனப்பான்மை கொண்டவன். கிராமத்துப் பழமை விரும்பிகளின் கோணத்திலிருந்து பார்த்தால் அவன் ஒரு பைத்தியக்காரன்; கிராமத்தைக் குட்டிச்சுவராக்க வந்தவன். ஆனால் அவன் அவசரக்காரன் அல்ல. வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் விஷயத்தை விளக்கி இளம் உள்ளங்களைத் தன்பால் இழுப்பவன். அவன் அந்தக் கிராமத்தைச் சீர்திருத்த எண்ணுகிறான். அவன் பேச்சில் மயங்கிய வாலிபர்களும் அவன் போக்கை

நடிகர் திலகம் "வணக்கம்" என்று யாரிடம் கூறுகிறார்? ஏ.டி.கே. யின் "அறிவாளி" தமிழ்ப் படத்தில்.

விரும்பி அவன் பாதையில் போக விரும்புகிறார்கள். பட்டணம் போய்த் திரும்பிய அவன் பகட்டுக்காரி யொருத்தியை மணக்க விரும்புகிறான். அவன் நண்பர்கள் அவனுக்குப் புத்திமதி கூறுகிறார்கள். அப்போதுதான் அவன் பாடுகிறான். ஏ. டி. கே. புரொடக்‌ஷன்ஸார் தயாரித்துவரும் "அறிவாளி" படத்திற்காகத்தான் இந்தக் காட்சி சுடப்பட்டது.

* * *

சென்ற மாத மத்தியில் ஒருநாள் ஆர். எஸ். ஆர். மூவிடோனின் "தர்மபத்தினி"க்காக ஒரு நடனக் காட்சி படமாக்கப்பட விருப்பதாகச் செய்தி வந்தது. சாயி-சுப்புலக்ஷ்மி., இ. வி. சரோஜா போன்ற யாருடைய நடனக்காட்சி படமாக்கப்பட விருக்கிறதோ என்று நினைத்து ஆசையுடன் கிளம்பினேன்; செட்டுக்குப் போனேன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! பாலையா நடனமாடப் போகிறார் என்ற செய்தி பின்னே எப்படியிருக்கும்? பாலையாவும்

மின்சாரம் & ரேடியோ

அட்டவணை

117 படங்கள் கொண்ட அட்டவணை மூலம் நீங்கள் மெகானிக் ஆகலாம். நீங்கள் ரூ. 15/-க்கு ஒரு ரேடியோ தயார் செய்து மின்சாரத்தைப்பற்றி நன்கு அறியலாம். ரேடியோ ரிப்பேரிங், வயரிங், எலக்டிரிகல் மெகானிசம் இன்னும் பல விஷயங்கள் அடங்கியது. விரிவான புதிய பிரசுரம் ரூ. 5/- டெய்லரிங், கட்டிங் (படங்களுடன்) ரூ. 4/- சோப்பும் வாசனை திரவியங்கள் செய்யும் விதம் ரூ. 4/50- போட்டோ கலை ரூ. 3/- செக்ஸ் வியாதிகளும் அதன் நிவாரணமும் ரூ. 3/50. இந்திய செக்ஸ் வாழ்க்கை ரூ. 3/50. மறைமுகமான செக்ஸ் விஞ்ஞானம் ரூ. 4/- செக்ஸ் பிரயாண அட்டவணை ரூ. 4/- வி. பி. சிலவு 1 முதல் 3 புத்தகங்கள் வரை ரூ. 1/25.

TARUN TRADERS (N. D. 1.)
Post Beat, 19
ALIGARH.

சந்திரகாந்தாவும் நடனமாடினர்கள்! இந்த நடனம், அதைக் குறிப்பிடும் பாடல் இரண்டும் சேர்ந்து சபையிலே ஓரே கலகலப்பை ஏற்படுத்தப்போகின்றன.

கடன் கொடுத்தவர் அதைத் திருப்பிக் கேட்கக் கூடாது என்ற கொள்கையுடையவர், கடன் வாங்கியே காலம் தள்ளும் ஒரு பேர்வழி. ஆனல் கடன் கொடுப்பவர்களுக்கு இந்த நியாயம் புரிகிறதா? கடன் வாங்க வந்து விடுகிருர்கள்! அப்போது அவர்களை ஏமாற்ற அவர் ஒருத்தியுடன் ஜோடி சேர்ந்து நடனமாடுகிருர்! ராக் என் ரோல் பாணியில் ஆடும் நடனத்துடன் ''முறைச்சு பாக்காதே!'' என்ற பாடலும் வருகிறது! பாலையாவும் சந்திரகாந்தாவும் ஆடினர்கள்.

''தர்மபத்தினி'' இப்போது வேகமாக வளருகிறது. இவர்களுடன் மனேகர், சகஸ்ரநாமம், ஜமுன, சௌகார் ஜானகி முதலியோர் நடிக்கும் இப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

சென்றபதினெட்டாம் தேதியன்று நெப்டியூனுக்குப் போயிருந்தேன். அங்கே ஒருவர் என்னிடம் வந்து இனிப்புகள் வழங்கினர். இதென்ன ஆச்சரியம், என்று நான் பிரமித்து நிற்கும்போது ஜூபிடர் பிக்சர்ஸ ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர் 'வாருங்கள்' என்று வரவேற்றர். அவருடன் பேசிய பிறகுதான் விஷயம் புரிந்தது. எம். ஜி. ஆர். பூரண குணம் பெற்ற பின் அன்று ''அரசிளங்குமரி'' படப் பிடிப்பில் கலந்து கொள்ளுவதை முன்னிட்டே இந்த அமர்க்களம். அன்று எம். ஜி. ஆர்., தங்கவேலு, எம். சரோஜா நடிக்கும் நாடகக் காட்சியொன்றும் படமாக்கப் பட்டது.

எம். ஜி. ஆருக்கு ஜூபிடர் - நெப்டியூன் சார்பில் மாலைகள் அணிவிக்கப் பட்டன. தங்கவேலு, எம். ஜி. ஆரை வரவேற்றுப் பேசினர். எம். என். நம்பியார், ஆர். என். ஆர்., அசோகன், பத்மினி, ராஜசுலோசன, மதுரம் முதலியோர் நடிக்கின்றனர். இதை ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்கிருர்.



விஜய சாமுண்டீஸ்வரி காமிராவை இயக்கி ஆரம்பித்து வைத்த சுதந்திரா மூவீஸ் ''சியாமளி'' ஆரம்ப விழாவில் தயாரிப்பாளர், டைரக்டருடன் கலைஞர்கள். வலது கோடியிலிருப்பவர்தான் புதுமுகம் வசந்தி.

ஐந்து மாத கால

ஓய்வுக்குப் பிறகு,

படவுலகில் பணியாற்ற

வந்திருக்கும்

எம். ஜி. ஆர்....

புத்துணர்ச்சி பெற்ற புது மனிதர்



"இன்று நான் உங்கள் முன் நிற்கக் காரணமாயிருந்தவர் இவர்" என்று டாக்டர் நடராஜனை அறிமுகப்படுத்தினர்.

"திரு எம்.ஜி ஆரிடம் இருந்த தன்னம்பிக்கை எங்கள் வேலையைச் சுலபமாக்கி விட்டது" என்றார் டாக்டர் நடராஜன்.



பல்லாவரத்தை அடுத்துள்ள ராமாவரம் என்ற இடத்தில் சோலைகள் சூழ்ந்த பெரிய நிலப்பரப்பில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஒரு சிறு பங்களாவைக் கட்டியிருக்கிறார். அதிலேயே ஒரு அழகிய நீச்சல் குளமும், படம் பார்க்க ஓலை வேய்ந்த சிறு கொட்டகையும் கட்டியிருக்கிறார் அவர்.

இந்தப் பங்களாவில் பத்திரிகை நண்பர்களை எம். ஜி. ஆர். சமீபத்தில் சந்தித்தார். பத்திரிகை நண்பர்களும், புரட்சி நடிகரும் சந்திக்கும் வாய்ப்பை, எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் ஸ்தாபனத்தார் ஏற்படுத்தி யிருந்தார்கள். கால் எலும்பு முறிந்து, சிகிச்சை பெற்று குணமடைந்து, படப்பிடிப்பில் கலந்து கொள்ள எம். ஜி. ஆர். புறப்பட்டதை யொட்டி, அவர்கள் ஏற்பாடு செய்திருந்த 'மகிழ்ச்சி விருந்து' இச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. மகிழ்ச்சி விருந்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தனது புதிய மாளிகையைச் சுற்றிக் காட்டினர். எம். ஜி ஆர். படக் கொட்டகையில் மதுரையில் அவருக்கு தங்கவாள் பரிசளிப்பின் போது எடுத்த படத்தையும் ஒரு ஆங்கிலப் படத்தையும் திரையிட்டுக் காட்டினர்.

எம். ஜி. ஆர். மீண்டும் படவுலகில் பணியாற்ற வந்தது குறித்து 'பேசும் - படம்' சார்பில் நல்வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கிறார் நமது உதவி ஆசிரியர் கே. என். பார்த்தசாரதி



மகிழ்ச்சி விருந்தில் எம். ஜி. ஆர். பேசி-னார். அவர் பேசிய போது தனது எதிர்கால திட்டங்களைப் பற்றி விளக்கமாகக் கூறினார். அத்துடன் பத்திரிகையாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களுக்கும் பதில் தரும் வகையில் சில விளக்கங்களைத் தந்தார்.

எம். ஜி. ஆர். பேசிய போதும், மற்றவர்கள் பேசிய போதும் அவரது முக பாவம் எப்படி இரு-ந்தது என்பதை அடுத்த பக்கப் படங்கள் காட்டுகின்றன.





போட்டோக்கள் : சந்தாமியான்

அமைப்பு : ஸாரதி

தான் கட்டியிருக்கும் நீச்சல் குளத்தை தனது மருத்துவ நிபுணர்களுக்குக் காட்டுகிறார் எம். ஜி. ஆர். "நீங்கள் செய்த உதவியால்தான் நீச்சலடிக்கும் சந்தர்ப்பம் மீண்டும் கிடைத்தது" என்று எம். ஜி. ஆர்., அவர்களிடம் சொல்லி யிருப்பார்.

"கலைஞன் என்ற அளவில் என்னைப் பற்றி செய்திகள் வெளியிட்ட பத்திரிகைகளுக்கு என் நன்றி........"

எனக்கு முற்றுப் புள்ளி இவ் விபத்து என்றார்கள் சிலர். மீண்டும் நடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது.

ஐந்து மாத ஓய்வில் நான் பல விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தேன். பயனுள்ள விவாதங்களை நடத்தினேன்.

என் சம்பந்தப்பட்ட படப் பிடிப்பை வரையறுத்தேன். என் படம் இரண்டு மாதத்துக்கு ஒன்றாக வெளிவரும்.

நான் புத்துணர்ச்சி பெற்ற புது ராமச்சந்திரனாக இப்போது மாறியிருக்கிறேன் என்றார் எம். ஜி. ஆர்.

மகிழ்ச்சி விருந்தில் சில பத்திரிகை நண்பர்கள் செய்த பேச்சையும் ஊன்றிக் கவனித்தார் எம். ஜி. ஆர்.

"சிறு குழந்தைகளின் உள்ளங்களில் கூட இன்று எம். ஜி. ஆர். ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கிறார்......"

முன்னை விட இப்போது இன்னும் அழகாக, வயது குறைந்தவராகக் கூட எம். ஜி. ஆர். காணுகிறார்.......

"அவர் என்றும் கதாநாயகனாகவே நடிக்க வேண்டும்" என்றபோது எம். ஜி. ஆர். இப்படிக் காட்சியளித்தார்.


அன்று நினைத்தேன்

மாலை வெய்யிலின் மஞ்சள் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

நான் பிறந்து, வளர்ந்து, படித்து ஆளாகிய செங்கற்பட்டில், நகருக்கு சற்று அப்பால் தள்ளி இருந்த மைதானத்தில் நான் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் கைகள் இரண்டும் அருகில் இருந்த புல்லைக் கிள்ளிக் கிள்ளிப் போட்டுக் கொண்டிருந்தன. என் சிந்தனையோ இனம் தெரியாத ஒரு இன்ப சூழ்நிலையில், எனது எதிர்காலத்தைப் பற்றிக் கற்பனை செய்து கொண்டிருந்தது.

முந்திய தினம் நடந்த சம்பவம்தான், எனது சிந்தனையை மகிழ்ச்சிப் பாதையில் முட்ட முட்ட விரட்டிக் கொண்டிருந்தது.

இன்று நடந்தது

எழுதியவர் :

ஸ்ரீதர்

இளம் வயதிலிருந்த எனக்கு கதை கட்டுரைகளைப் படிப்பதிலும், எழுது வதிலும் அதிக ஆர்வம் இருந்தது. பள்ளியில் நான் படித்து வந்த நாட்களில் பாடப் புத்தகங்களை விட, இவற்றைத்தான் அதிகம் படித்து வந்தேன். இதனுல் பாடப் புத்த கங்களை வெறுத்து ஒதுக்கினேன் என்பது அல்ல; பரீட்சையில் நான் தேருமல் இருந்ததும் கிடையாது.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் இந்திய மக்களின் பெரும்பாலோனேரின் நிர்ணயப்படி நானும் வேலைக்குச் சென்றேன். செங்கற்பட்டிலிருந்த கூட்டுறவு சங்கமொன்றில் எனக்கு குமாஸ்தா வேலை கிடைத்தது.

குமாஸ்தா வேலையிலும் முதுகு வலி எடுக்கும் அளவுக்கு எழுத்து வேலை இருந்தது. ஆனுல் நான் விரும்பிய எழுத்து வேலை அல்ல. ஆயினும் இடையிடையே எனக்கு ஓய்வு கிடைத்த நேரத்தில் வீட்டில் எதையாவது எழுதிக் கொண்டே தான் இருந்தேன்.

என் அருமைத் தாயார் நான் விழுந்து விழுந்து எழுதுவது கண்டு ''என் இந்தப் பேனுவையும் பேப்பரையும் கட்டிக்கொண்டு மாரடிக்கிருய்? நாளைக்கு இதுவா உனக்குச் சோறு போடப் போகிறது?'' என்று கேட்பார்.

அவரது அக்கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் ஒரு புதிராக இருந்து வந்தது எனது வாழ்க்கை.

ஒரு சமயம் ஆங்கில நாடகமேதை ஷேக்ஸ்பியரின் கதை யொன்றைப் படித்தேன். நான் படித்த கதை மூன்றே பக்கங்களில் முடிந்திருந்தது. அதை விரிவுபடுத்தி, மூன்று மணி நேரம் ஓடக்கூடிய நாடகமாக்கி நடித்தேன். சம்பாஷணைகளையும் நானே எழுதினேன். இது இரண்டாம் படிவத்தில் படிக்கையில் நடந்தது.

நான் கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி வந்தபோது 'உலகம் சிரிக்கிறது' என்ற நாடகத்தை நடத்தி, நானும் நடித்தேன்.

நாடகத்திற்குத் தலைமை வகிக்க, சங்கத்தின் பிரதம அதிகாரியை அழைத்திருந்தோம். தலைமை வகித்த அவர் எனது திறமையைப் பெரிதும் பாராட்டி ''எதிர்காலத்தில் சிறந்த அளவில் வருவாய்'' என்று மனங்குளிர ஆசிர்வதித்தார்.

அவர் அன்று சுமத்திய புகழ் மாலையை என்னுல் தாங்கவே முடியவில்லை!

இதையெல்லாம் எண்ணி எண்ணி, என் மனதிற்குள்ளேயே மகிழ்ந்து கொண்டிருந்த எனக்கு கதிரவன் மறைந்து, தாரகைகள் விண்ணில் முழு நிலவுடன் கைகோர்த்து வந்தது பிறகுதான் தெரிந்தது.

கற்பனை உலகிலிருந்த நான் சுய நினைவுக்கு வந்தேன். வீடு திரும்பினேன்.

அடுத்த பத்து நாட்கள், காரியாலயத்திற்கு நான் தவருமல் போய்க் கொண்டிருந்தாலும், எனது வேலைகளைமட்டும் ஒழுங்காகச் செய்யவே முடியவில்லை. நாடகத்தின்போது கூட்டுறவு சங்க பிரதம அதிகாரி என்னைப்பற்றிச் சொன்ன வார்த்தைகள் தான் என்னை சதா வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

பதினேராவது நாள் நான் காரியாலயத்திற்குச் சென்றேன்.

பிரதம அதிகாரி என்னை அழைப்பதாகச் சொன்னுர்கள்.

கடிதத்தைப்பற்றி ஏதாவது சொல்வார் என்று நினைத்து, ஆவலுடன் அவரது அறைக்கு விரைந்தேன்.

என்னிடம் அவர் ஒரு கடிதத்தை நீட்டினுர்.

'பத்து நாட்கள் நான் ஒழுங்காக வேலை செய்யாது இருந்த காரணத்தால் என்னை வேலையிலிருந்து நீக்கியிருப்பதாக' அதில் இருந்தது.

நான் மௌனமாக என் இடத்திற்குத் திரும்பினேன்.

பத்து நாட்களுக்கு முன்பு அவர் சூட்டிய புகழ்மாலையைத் தாங்க முடியவில்லை என்று சொன்னேன். அவர் கொடுத்த இந்த அதிர்ச்சியையும் என்னுல் தாங்க முடியவில்லை.

அவர் கொடுத்த காகிதம் லேசானதுதான்; ஆனுல் அது என் இதயத்தில் இரும்புத்திரை என அழுந்தியது!

'சென்னைக்குச் சென்று ஏதேனும் முயற்சித்துப்பார்' என்று எனது நெருங்கிய நண்பர்கள் சொன்னார்கள்.

'லட்சியவாதி' என்று நான் எழுதியிருந்த நாடகத்துடன் சென்னைக்கு வண்டி ஏறினேன்.

எனக்கு விலாசம் தெரிந்த படக் கம்பெனிகள் எல்லாவற்றுக்கும் நான் சென்று, "கதை எழுதியிருக்கிறேன், தேவையா?" என்று கேட்டேன்.

இப்போது என்னைக்கண்டு புன்முறுவல் பூக்கும் பல படமுதலாளிகள் அன்று என்னை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. சிலர் படி ஏறி உள்ளே வரும் கஷ்டத்தைக்கூட எனக்கு வைக்காமல் இருந்தனர்!

சென்னை, தியாகராய நகரில் நீண்ட காலமாக இருந்து வரும் பிரபல படக்கம்பெனியில் 'லட்சியவாதி' என்ற என் நாடகத்தின் கதைச் சுருக்கத்தைக் கொடுத்தேன்.

மேலெழுந்த வாரியாக அதைப் படித்துப் பார்த்த அவர்கள், "இதை விட நல்ல கதையாக எழுதிக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லி, என்னை அனுப்பி விட்டார்கள்.

இச்சமயத்தில்தான், பிரபல சினிமாப் பத்திரிகையான "பேசும் பட"த்தில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வரும் எனது நெருங்கிய நண்பரைக் கண்டேன்.

"டி. கே. எஸ். சகோதரர்களிடம் சென்று உனது நாடகத்தைக்கொடு. நல்ல நாடகமாக இருந்தால் அவர்கள் நிச்சயம் அரங்கேற்றுவார்கள். அதன் மூலம் சினிமாவுலகில் எளிதில் புகமுடியும்" என்று 'படவுலகில் புகும் வழி'யைச் சொல்லி, டி. கே. எஸ். சகோதரர்களிடம் என்னை அனுப்பினார்.

திரு. டி. கே. ஷண்முகம் அவர்களை நான் சந்திக்கச் சென்றபோது, மயிலை ரசிக ரஞ்சனி சபையின் காரியதரிசியிடம் அவர் பேசிக்கொண்டிருந்தார்.

பைஜாமாவும் சட்டையும் அணிந்திருந்த என்னைக் கண்டதும் "என்ன தம்பி, என்ன வேண்டும்? என்று ஷண்முகம் கேட்டார்.

'தம்பி' என்று அவர் அழைத்தபோது ஒரு அண்ணனின் பாசத்தை அதில் கண்டேன்.

நான் வந்த விவரத்தை அவரிடம் சொன்னேன். 'லட்சியவாதி' என்ற எனது கதையின் சுருக்கத்தை அவரிடம் நீட்டினேன். அதை வாங்கிக் கொண்டார் அவர்.

"தம்பி! என்று அவர் மீண்டும் அழைத்தார்.

அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆர்வத்துடன் அவரைப் பார்த்தேன். அவர் முகவாய்க் கட்டையில் தன் கையைத் தடவியபடி, "என்னிடம் இப்போது இருநூற்று ஐம்பது கதைகள் இருக்கின்றன. உன்னுடையது இருநூற்று ஐம்பத்தொன்றாவதாகத்தான் இருக்கும். என்ன சொல்கிறாய் நீ?" என்று கேட்டபடி, நான் கொடுத்த கதைச் சுருக்கத்தின் முதல் பக்கத்தைப் புரட்டினார்.

கதையின் மேலே நான் கொட்டை எழுத்துக்களில், "மனிதன் பிறக்கும் போதே அயோக்கியனாகப் பிறப்பதில்லை. சூழ்நிலையும் சந்தர்ப்பமும்தான் ஒருவனை நல்லவனாகவோ அயோக்கியனாகவோ செய்து விடுகிறது" என்று எழுதியிருந்தேன்.

கதையைப் பிரித்து, அதன் தலைப்பைப் படித்த திரு. ஷண்முகம் இந்த மூன்று வரிகளையும் படித்தார். அவருக்கு என்ன தோன்றியதோ என்னவோ முதல் பக்கத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

"தம்பி! மாலை ஏழுமணிக்கு என்னை வந்து பார். கதை என்னிடமே இருக்கட்டும்" என்று சொன்னார் அவர்.

என் மனதில் ஒரே குருவளி. "அவர் எதற்காக மாலை வரச். சொன்னார்? என்ன சொல்லப் போகிறார்?" என்றெல்லாம் என் மனதில் கேள்விக் குறிகள் எழுந்து கொண்டே இருந்தன!

ஏழு மணிக்குச் சில நிமிஷங்கள் முன்பாகவே நான் திரு. டி. கே. ஷண்முகம் அவர்களிடம்சென்றேன்.

என்னைக்கண்ட அவர், தன் அருகில் அமரச் சொன்னார்.

'என்ன சொல்லப் போகிருரோ?' என்று என் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

''தம்பி......'' என்று திரு. ஷண்முகம் அழைத்தார்.

நான் நிமிர்ந்து பார்த்தேன்.

''இந்தக் கதையை நீதான் எழுதினுயா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றேன்.

''உண்மையிலேயே நீதான் இதை எழுதினுயா?'' என்று இரண்டாம் முறையாகக் கேட்டார் அவர்.

''உண்மையிலேயே நான்தான் எழுதினேன்'' என்றேன்.

என் முகத்தைப் பார்த்தபடி, சில வினாடிகள் மௌனமாக இருந்தார் அவர்.

''அப்போது இதற்கான சம்பாஷணைகள் எல்லாம் எழுதி வைத்திருக்கிருயா?'' என்று கேட்டார் ஷண்முகம்.

''எழுதியிருக்கிறேன். அவற்றை என் ஊரான செங்கற்பட்டில் வைத்திருக்கிறேன். நானே வேண்டுமானல் கொண்டுவருகிறேன்'' என்றேன். கொண்டு வரும்படிச் சொன்னார் அவர்.

மறுநாள் 'லட்சியவாதி' வசன புத்தகத்துடன் அவ்வையகத்துள் புகுந்தேன். திரு. ஷண்முகத்தைச் சந்தித்து அதைக் கொடுத்தேன்.

இந்தச் சந்திப்பில் மகிழ்ச்சி இல்லை. ஏதோ தகராறு ஏற்பட்டிருப்பதை இருவரது முகபாவமும் விளக்குகிறதே! ஜுபிடர் பிக்சர்ஸாரின் ''அரசிளங்குமரி'' தமிழ்ப் படத்தில் நாகேந்திரராவ், எம். ஜி. ராமச்சந்திரன்.

'லட்சியவாதி' என்ற கதையை நான் திரைக்கு ஏற்ற வகையில் அப்போது எனக்குத் தெரிந்திருந்த வரையில் எழுதியிருந்தேன். அதைப் படித்துப் பார்த்த திரு. ஷண்முகம், கதையில் சில சம்பவங்களை மாற்றச் சொன்னார். சிலவற்றைப் புதிதாகப் புகுத்தினார்.

உச்ச கட்டத்துக்குத் தன் வீட்டிலேயே வசனமெழுதச் சொன்னார். எழுதிக் கொடுத்தேன்.

எனது வசனத்தைப் படித்துப் பார்த்த அவர், ''தம்பி! உண்மையிலேயே நீதான் இவற்றை எழுதுகிறாயா என்று சோதனை செய்து பார்க்கவே உன்னை நான் இங்கேயே எழுதச் சொன்னேன். உண்மையிலேயே நீயேதான் எழுதியிருக்கிறாய். உன்னிடம் உண்மையிலேயே திறமை இருக்கிறது'' என்று சொன்னார். என்னால் மறக்க முடியாத சம்பவம் அது. ''லட்சியவாதியை மேடைக்கேற்ற நாடகமாகப் புதுப்பித்துக் கொடுத்தேன். திரு. டி. கே. எஸ். அவர்கள் அதற்கு 'ரத்த பாசம்' என்று புதிதாகப் பெயர் தந்தார். நாடகம், மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் அரங்கேறியது. சகோதரர்கள் நடத்திய, முதன் முதலாக நான் பார்த்த நாடகமும் 'ரத்த பாசம்' தான்!

அரங்கேற்ற தினத்தன்று என் மனதில் துள்ளி ஓடிய மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

நாடகம் இரண்டு நாட்கள் நடந்தது. இரண்டாவது நாள் என்னை ரசிகர்களுக்கு அறிமுகப் படுத்தினார் அண்ணாச்சி. 'ரத்த பாசம்' நாடகம் தொடர்ந்து நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பிலே மகிழ்ச்சி ததும்புகிறது. இந்த உலகத்தையே இன்னும் ஒரு வினாடியில் அவர்கள் மறந்துவிடப் போகிறார்கள்! உமா பிக்சர்ஸ் ''சித்தூர் ராணி பத்மினி'யில் சிவாஜி கணேசன் - வைஜயந்தி.

'மனிதன்' நாடகத்தை சகோதரர்கள் நடத்தினார்கள். முதன் முதலாக அந்த நாடகத்தைப் பார்த்தேன் நான்.

அதில் வரும் கதாநாயகி மணம் செய்து கொண்டு கணவன் சென்ற பின், சந்தர்ப்பம் வழி விட, கற்பைப் பறி கொடுத்து விடுகிறாள்.

சாவித்திரியின் பாத்திரம் என்னை அன்றிரவெல்லாம் உறங்கவே விடவில்லை. கதாநாயகியின் பெயர் இது.

சாவித்திரியை 'மனிதன்' நாடகத்தில் முதல் தடவையாக கண்ட போது முதல் இதே மனோநிலையில் தான் இருந்தேன்.

சாவித்திரி பண்புள்ளவள்.

சாவித்திரி மணமானவள்.

சாவித்திரிக்குக் கிடைத்தவன் குணவான்.

சாவித்திரி மனதாரக் குற்றம் செய்தறியாதவள்.

சாவித்திரி தவற விரும்பவில்லை.

சாவித்திரியைக் கைவிட்டது சூழ்நிலை.

சாவித்திரியைப் பழி வாங்கியது சந்தர்ப்பம்.

சாவித்திரி தவறி விடுகிறாள்.

"இப்படி ஒரு பெண் உலகத்தில் இருந்தால் இதற்கு நேர் எதிர் மாறான குணங்களைக் கொண்ட ஒரு பெண்ணும் உலகத்தில் ஏன் இருக்கக் கூடாது?" என்று மனம் வாதாடியது.

"இருக்கக் கூடாது என்று யார் சொன்னார்கள்?" என்று என் உள் மனம் எதிர்க் கேள்விப் போட்டது,

என் சிந்தனை அத்தகைய பெண்ணொருத்தியைச் சுற்றிவட்டமிட்டது.

அவள் காதலிக்கிறாள்.

அவள் காதலில் 'விதி' குறுக்கிடுகிறது.

அவள் 'இதய புருஷன்' இறந்து விடுகிறான்.

அவள் மணக்கிறாள் - காதலித்தவனின் தந்தையை.

அவள் 'இதய புருஷன்' மீண்டும் வருகிறான்.

அவள் கனவோ என ஐயுறுகிறாள்.

அவள் காதல் தெரிந்து விடுகிறது.

அவளது கணவன் சம்மதிக்கிறான், மறுமணத்திற்கு.

அவள் காதலனும் விடு தேடி வருகிறான்.

அவள் இதயக் கதவு மூடி விடுகிறது - காதலனுக்கு.

அவள் இதய கதவு திறக்கிறது -

அவள் காதலனை மகனாக ஏற்க.

இந்த அடிப்படையில் என் சிந்தனை "ஏன் இருக்கக் கூடாது?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்க, 'சுமதி' பிறந்தாள் - 'எதிர்பாராதது' படத்தில்.

"உண்மையைச் சொல்லிவிடு. இல்லாவிட்டால் ஒழித்து விடுவேன்" - ஜுபிடர் பிக்சர்ஸ் "அரசிளங்குமரி"யில் தங்கவேலு - எம். ஜி. ராமச்சந்திரன் தோன்றும் ரசமான காட்சி.

'எதிர்பாராதது' ஒரு வெற்றிப் படமாக அமைந்தது. அதன் மூலம் எனக்கு பெயரும் புகழும் கிடைத்த துடன், திரைப்படவுலகிலும் பல பெரியவர்களின் நட்பு கிடைத்தது. தொடர்ந்து 'ரத்தபாசமும்' வந்தது.

இவ்விரண்டு படங்களும் வெளி வந்து, வெற்றிகரமாக ஓட ஆரம் பித்ததும், ''இனி நமக்கு கவலை இல்லை. திரைக்கதை, வசனம் எழுதித் தரும்படிக் கேட்டு 'நம்மை பல படமுதலாளிகள் வந்து மொய்ப் பார்கள்'' என்று எண்ணினேன். என் எண்ணம் எனக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

'மகேஸ்வரி' படத்திற்கு வசனம் எழுதித்தரும்படிக் கேட்டார்கள். அதற்காக அவர்கள் கொடுப்பதாகச் சொன்ன தொகை மிகமிகக் குறைவு. இருந்தாலும் வேறு வழியின்றி ஒப் புக் கொண்டு பணியாற்றினேன்.

'மகேஸ்வரி' படத்தை முடித்து விட்டுச் சென்னை திரும்பினேன்.

எதிர்பாராத சந்திப்பு! - எதிர் பாராத எதிர்காலத்திற்கு!!

ஆம், நண்பர் திரு. கிருஷ்ண மூர்த்தி என்னைச் சந்தித்தார். ''சொந்தத்தில் நாமே ஒரு படக் கம் பெனி ஆரம்பித்து, படமெடுத்தால் என்ன?'' என்று அவர் கேட்டார்.

எனக்குப் பதில் வரவில்லை; சிரிப்பு வந்தது!

எங்களிடம் படத்தை ஆரம்பிக் கும் அளவுக்குச் சிறிது கூடப் பண வசதி இல்லை.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்க ளாக - 'நடிகர் திலகம்' திரு. சிவாஜி கணேசனிடம் வந்தோம். அவரிடம் எங்கள் எண்ணத்தையும், எங்களது நிலையையும் எடுத்துச் சொல்லி, ''நீங்கள் எங்கள் படத்தில் நடிக்க வேண்டும்!'' என்று கேட்டேன்.

''தம்பி! கலங்காதே. மேலே காரி யத்தை நடத்திக் கொண்டு போ. நான் இருக்கிறேன் எல்லாவற்றை யும் கவனிக்க'' என்று சொன்னார்.

சிவாஜி கணேசன் அளித்த ஊக் கத்தில் வீனஸ் படக் கம்பெனி பிறந்தது. நானும், திரு. கிருஷ்ண மூர்த்தியும், திரு. கோவிந்தராஜனும் அதன் பாகஸ்தர்களானோம். அதன் முதல் வெளியீடாக 'அமரதீபம்' வந்தது. தொடர்ந்து 'உத்தம புத்திரன்' வந்தது.

இந்த ஆட்டமும் அழகியும் பார்ப்ப வர் மனதை கொள்ளை கொள்வது நிச்சயம். - உமா பிக்சர்ஸ் ''சித்தூர் ராணி பத்மினி''யில் வைஜயந்தி.

'உத்தம புத்திரன்' படத்தை வெளியிட்டதும், அப்படம் திரை யிடப்பட்ட பல இடங்களுக்கு நான், நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜன் அனைவரும் சென் றிருந்தோம்.

மதுரையில் நாங்கள் தங்கியிருந்த போது, ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி என்னிடம் வந்தார். எடுத்த எடுப் பிலேயே அவர், ''நமது அடுத்த படத்தை நீ டைரக்ட் செய்யேன்'' என்றார்.

எனக்கு தூக்கி வாரிப்போட்டது. படவுலகில் நுழைந்த நாளிலிருந்தே எனக்கு டைரக்ட் செய்யவேண்டும் என்ற ஆவலும் துளிர்விட்டுக் கொண்டிருந்தது.

''ஸ்ரீதர்! நான் உண்மையாகத் தான் சொல்லுகிறேன். ஏராளமான பணத்தைக் கொட்டி, வயிற்றில் நெருப்பைக் கொட்டிக் கொண்டிருப்பதை விட, குறைந்த செலவில், நல்ல கதையமைப்பு கொண்ட சமூகப் படமெடுப்பது நல்லதெனத் தோன்றுகிறதே. என்னைப் பொறுத்தவரையில் உன்னிடம் திறமை இருக்கிறது. நீ நன்றாக டைரக்ட் செய்வாய் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது'' என்று சொன்னார் அவர்.

எனது பலநாள் விருப்பம் நிறைவேறப் போகிறது என்று நான் ஒருபுறம் நினைத்தேன்; மறுபுறம் இவ்வளவு பொறுப்பு வாய்ந்த வேலையை எப்படி ஏற்பது என்ற கலக்கம்.

நான் டைரக்ஷன் துறையில் குருவாக மதித்து வந்த வட இந்திய டைரக்டர் வி. சாந்தாராம் என் முன் தோன்றினார்; அவரது படங்கள் ஒவ்வொன்றிலும் புதுமை மிளிரும்; அவர் காட்சியை விளக்குவதற்காகச் சித்தரிக்கும் உபமானங்களும் வாழ்க்கையுடன் ஒட்டியதாக-இயற்கைக்கு முரணின்றி அதே சமயம் புதுமை மிளிர இருக்கும். சாந்தாராம் படங்களை நான் பாடப் புத்தகமாக நினைத்தேன்; அவற்றைப் பலமுறை பார்ப்பேன்.

திரைப்படவுலகில் நுழைந்தது முதலே படங்களை டைரக்ட் செய்ய வேண்டும் என்ற ஆவல் எனக்கு நாளுக்கு நாள் வளர ஆரம்பித்தது. சேலத்தில் நான் தங்கியிருந்தபோது இது உச்சநிலையை அடைந்தது. தவிர, நான் அங்கு சில சிறந்த டைரக்டர்களுடன் பழகும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

எனக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம், பிரபல ரஷ்ய டைரக்டர் புடோவ்கின் எழுதிய புத்தகத்தைப் படிப்பேன்.

எப்படி டைரக்ட் செய்யவேண்டும் என்பதைப்பற்றி குறிப்பாக - வரையறுத்துச் சொல்ல முடியாது! அது அவரவர்களின் திறமையையும் - சந்தர்ப்பத்தையும் பொறுத்தது. ஆனால் எப்படியெல்லாம் டைரக்ட் செய்யக்கூடாது என்பதைப்பற்றி வேண்டுமானால் கூறமுடியும்'' என்று அதில் புடோவ்கின் எழுதியிருந்தார்.

அவற்றையெல்லாம் நான் ஊன்றிப்படித்தேன்.

நான் அங்கு தங்கியிருந்த நாட்களில், அங்கு பணியாற்றிய பல டைரக்டர்கள் ஸெட்டில் பணியாற்றுவதைக் கவனித்தேன். அவர்கள் செய்து வந்த ஒவ்வொன்றையும் உன்னிப்பாகக் கவனித்தேன்.

இதேபோல் 'அமரதீபம்', 'உத்தம புத்திரன்' படங்கள் உருவாகி வந்தபோது டைரக்டர் டி. பிரகாஷ்ராவ் ஸெட்டில் வேலை செய்வதை ஊன்றிக் கவனித்தேன். நான் படித்த புடோவ்கின் புத்தகத்தையும் இடையிடையே புரட்டிப் பார்ப்பேன்.

நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னதும் இவையெல்லாம் எனது நினைவுக்கு வந்தன.

நான் பெற்ற இந்தச் சிறு அனுபவமெல்லாம், 'உன்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்று சொன்ன திரு. கிருஷ்ணமூர்த்தியின் ஊக்கமும் எனக்கு ஓரளவு தன்னம்பிக்கையையும் வளர்த்து 'சரி' என்று சொல்ல வைத்தன.

'கல்யாண பரிசு' டைரக்டரானேன் நான்.

கதையின் ஒவ்வொரு காட்சியையும் நான் பல நண்பர்களுக்கு விளக்கமாகச் சொல்லி, அவர்களது யோசனைகளைக் கேட்டேன். ஒவ்வொரு நாள் இரவும் நான் காட்சிகளை எப்படிப் படமாக்கலாம் என்று யோசித்து வருவேன்.

படவுலக நண்பர்களும் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர்.

எங்கள் முந்தைய படங்களை டைரக்ட் செய்த திரு. டி. பிரகாஷ் ராவ் புதிய துறைக்கு நான் காலடி எடுத்து வைப்பதை மனமார வரவேற்று வாழ்த்தினார். 'நடிகர் திலகம்' நல்வாழ்த்துக்களைச் சொரிந்தார்.

''அறிஞர்கள் நுழையப் பயப்படும் இடத்திற்கு, முட்டாள்கள் விரைவில் புகுந்து விடுவார்கள்''- என்ற பழமொழிப்படி ஆகிவிடக்கூடாது என்று நான் பிரதிதினமும் மனதுக்குள் எண்ணிக் கொள்வேன்.

'கல்யாண பரிசு' படம் முடிந்து திரையிட்ட தினம்......

கொட்டகைக்கு நான், எனது நண்பர்களுடன் சென்றிருந்தேன். 'என்ன சொல்லப் போகிறார்களோ' என்று படம் பார்த்து விட்டு வரும் ரசிகர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

'படத்தை நன்றாக எடுத்திருக்கிறார்கள்' என்று, என்னை ஆரம்பமுதல் வளர்த்து வரும் பத்திரிகைகளுடன் பொதுமக்களும் சொன்னார்கள்.

என் புதிய துறையில் எனக்கு வெற்றி கிடைத்து விட்டது என்று எண்ணிக் கொண்டேன். பெரியவர்களின் ஆசீர்வாதமும், இதயங் கனிந்த வாழ்த்துக்களுமே இதற்கும் காரணம் என்று நினைத்தேன்.

பத்திரிகையாளர்கள் எனக்கு உற்சாகமூட்டியதை என்னால் மறக்கவே முடியாது. 'ரத்தபாசம் ஸ்ரீதர்' என்று என்னைக் குறிப்பிட்டுப் பாராட்டி என்னையும் என் திறனையும் அவர்கள்தான் வளர்த்தார்கள். என் குறைகளைக் கண்டித்து திறனைப் பாராட்டி அவர்கள் எழுதி வருவதால்தான் என் திறமை வளர்ச்சிபெற்று வருகிறது.

டைரக்டர் என்ற நிலையில் எனக்குத் தோன்றும் புதுமைகளைப் புகுத்தி, நமது படங்களின் தரத்தையும் மற்றவர்களுடன் சேர்ந்து உயர்த்தவேண்டும் என்பது எனது விருப்பம். இதற்கு உங்கள் ஆசியுடன் ஆதரவு எனும் உரமும் தேவை.



எங்கும்
எப்பொழுதும்
குதூகலமளிப்பது
ஜெராட் ரேடியோ

மாடல் A 96 நிகர விலை 295.
(உள்ளூர் வரிகள் தனி)

ஜெராட் எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ் - 38, தங்கசாலை வீதி - சென்னை-3

ரூ. 300 இனும்

இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கை வசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கை வசம் வைத்துக்கொண்டு தியானம் பண்ணும்போது. இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3.12 நயா பைசே. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத்தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)
JULLUNDUR CITY (Pb)

1960-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுதும் கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிமளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)
JULLUNDUR CITY (Punjab)

வேட்டை நக்ஷத்திரங்கள்

கோபராஜ்

(வேட்டை நக்ஷத்திரங்கள் என்ற தொடரில் முன்பு சிவாஜி கணேசன், ஏ. கருணாநிதி, காலஞ்சென்ற ஹைதராபாத் நாகேஸ்வரராவ் போன்ற நடிகர்களின் மிருக வேட்டை அனுபவங்களை நேயர்கள் படித்தறிந்தார்கள். இவ்விதழில் இளம் நடிகரும் காட்டுராஜாவாக விளங்கியவருமான கோபராஜ் தன் அனுபவங்களைக் கூறுகிறார். ஆ.ர்.)

அப்போது எனக்கு பதினான்கு வயதிருக்கும். என் தகப்பனார் ராமுண்ணி சர்வே ஆபீசராக வேலை பார்த்து வந்தார். அவரிடம் எப்போதும் துப்பாக்கி இருக்கும். நாங்கள் க்ஷத்திரிய வகுப்பினராதலாலும் நான் பள்ளிக்காலங்களில் குறி பார்த்து எய்வதில் சிறந்து விளங்கியதாலும், என் தகப்பனாருக்குத் தெரியாமல் துப்பாக்கியை எடுத்துப் போய் எதையாவது குறி வைத்துச் சுட்டுப் பார்க்க ஆசைப்பட்டேன். அதற்காக தகப்பனார் துப்பாக்கியில் ரவைகளை எப்படிப் போடுகிறார் என்று உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டேன்.

ஒருநாள் தகப்பனாருக்குத் தெரியாமல் துப்பாக்கியைத் தயார் செய்து கொண்டு ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்திற்குச் சென்றேன். 'டொக் டொக்' என்று மரப்பட்டையைக் குத்திக் கொண்டிருந்தது ஒரு மரங்கொத்திப் பறவை. குறி வைத்துச் சுட்டேன். 'பொத்'தென்று கீழே விழுந்தது அது. எனக்குச் சொல்ல முடியாத சந்தோஷம். ஆனால் யாரிடமும் சொல்ல முடியாதே! தகப்பனாருக்குத் தெரியாமல் துப்பாக்கியைத் துடைத்து இருந்த இடத்தில் வைத்து விட்டேன். முதல் முயற்சி வெற்றி என்பதால் நான் அடிக்கடி தகப்பனாரறியாமல் துப்பாக்கியுடன் கிளம்பி விடுவேன். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படத்தானே வேண்டும்? எனக்கும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. என் தகப்பனார் வெளியே சென்றதும் துப்பாக்கியைத் தயார் செய்து கொண்டேன்.



இவர்தான் கோபராஜ்

கோபராஜ் சில வருடங்களுக்கு முன், தான் கொன்ற மலைப் பாம்புடன் நிற்கிறார்.

வழக்கம்போல் ஒரு சில நண்பர்களுடன் வேட்டைக்குக் கிளம்பினேன். நாரை சுடலாம் என்று வயக்காட்டுப் பக்கம் போனோம், புலைய பெண்கள் வெள்ளை ஆடை உடுத்தி கையாலேயே நண்டு, மீன் இவற்றைப் பிடிப்பது வழக்கம். அவர்கள் பிடித்த நண்டு, மீன் இவற்றை தலையிலே மூட்டையாகக் கட்டிக்கொள்வது வழக்கம். ஒருத்தி மீனுக்காக குனிந்து நிமிர்ந்து தேடிக் கொண்டிருந்தாள். நான் அவளது அசைவுகளைக் கண்டு நாரை என்று நினைத்து தூரத்திலிருந்து தலையைப் பார்த்து சுட்டேன். தலை தெறித்தது நாரைக்கு! ''ஹா!'' என்று பெண்ணில் அலறல் கேட்டது. பயந்து ஓடினோம். அவளது தலையிலே கட்டியிருந்த நண்டு மூட்டைதான் என் குண்டுக்கு இரையாகியது. என் குறி தவறவில்லை. தவறியிருந்தால் அவள் உயிர் போயிருக்குமே! அவள் பயத்தால் மூர்ச்சையாகி விட்டாள். தூக்கி வந்து தேற்றினோம். அவள் செய்த கலாட்டாவில் என் தகப்பனருக்கு விஷயம் தெரிந்துவிடடது. கண்டித்தார்; தண்டித்தார். அப்போது எனக்கு பதினைந்து வயதிருக்கும். நாளடைவில் என் ஆர்வம் கண்டு என் தகப்பனர் என்னையும் தன்னுடன் வேட்டைக்கு அழைத்துப் போவார். அப்போதெல்லாம் நான் காட்டுப்பன்றி, முயல், கருங்குரங்கு முதலியவைகளைச் சுடுவேன்.

வருடங்கள் உருண்டன. மலபார் ஸ்பெஷல் போலீஸில் சேர ஆட்கள் தேவை என்ற விளம்பரம் வந்தது. மனுப்போட்டேன். தேர்ந்தெடுக்கப்பட்டேன். சுடுவதில் நான் பெற்ற பயிற்சியும் வெற்றியும் காரணமாக தென்னிந்திய போலீஸ் அதிகாரிகளுக்குச் சுடப்பயிலுவிக்கும் பயிற்சி ஆசிரியர் வேலை என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுடுவதற்கான பயிற்சி முகாம்கள் சாதாரணமாக வனப்பிரதேசங்களில் தான் அமைக்கப்படும். அப்படிப்பட்ட முகாம் ஒன்று வயநாடு அருகே அமைக்கப்பட்டது. ஒரு நாள் ஓய்வு நேரத்தில் ஒரு 'சிவிலியன் கைட்' என்றழைக்கப்படும் வழி காட்டியுடன் காட்டுப்பக்கம் சென்றேன். எனக்கு அப்போது வயது இருபது. குறுகலான பாதை வழியே சென்றோம். யானை ஒன்று மூங்கில் மரத்தை துதிக்கையால் வளைத்தபடி அசையாமல் நின்றிருந்தது. தன்னை நோக்கி வருபவரை இப்படி ஏமாற்றிக்கொல்வது மதம் பிடித்த யானையின் வழக்கம். எனக்கு இதெல்லாம் அப்போது தெரியாது. யானையை பாறை என்று நினைத்து அருகே சென்று விட்டேன். வழிகாட்டி அனுபவமிக்கவன். ஆகவே பின்னாலிருந்து என்னைக் குத்தினன். யானை மூச்சு விடுவதை நானும் கண்டு விட்டேன். இனி அதனிடமிருந்து தப்பி திரும்பி ஓடிவிட முடியாது. அது எங்களைத் தாக்கத் தயாராகி விட்டது. ''நாம் இறப்பது நிச்சயம். முடியுமானல் தப்ப முயற்சிக்கலாம்'' என்ற யோசனையோடு, யானையிடமிருந்து தப்ப தற்காப்புக்காக அதன் நெற்றியைக் குறிவைத்துச் சுட்டேன். எல்லாம் கணநேர வேலைதான். யானை எங்களை நோக்கி வந்தது. கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டேன். மடார் என்ற சப்தம் கேட்

டது. கண் திறந்து பார்த்தேன். யானை எனக்கு முன் பத்தே அடி தூரத்தில் கீழே விழுந்து இறந்தது. அதை நான் தற்காப்புக்காகச் சுட்டேன். ஆனல் அதைச் சுட்டால் பரிசு தரவிருந்த கிராமத்தினர் என் வீரப்பிரதாபங்களைப் புகழ்ந்து பாராட்டினர்கள்!

பயிற்சி ஆசிரியர் என்ற அளவில் எனக்கு ஒரு திறமையும் நம்பிக்கையும் உண்டு. நான் குறி வைத்த இலக்கு தவறியதே கிடையாது. இதைப் பரீட்சிக்க விரும்பினேன். கள்ளிக் கோட்டையிலிருந்து சுமார் முப்பது மைலில் எங்கள் பயிற்சி முகாம் இருந்தது. ஒருமுறை சுடப்பட்டு தப்பிய வேங்கையொன்று அந்தப் பக்கம் நடமாடுவதாகக் கேள்விப்பட்டு ஒய்வு வேளையில் வழிகாட்டியுடன் காட்டுப் பக்கம் சென்றேன். நண்பர்கள் வேறுபக்கம் போனர்கள். வழிகாட்டியின் யோசனைபடி துப்பாக்கியை ஈட்டியாகவும் பயன்படுத்தும் நோக்கத்தோடு, ரைபிளில் இருப்பதுபோல நீண்ட கூர்மையான கத்தியொன்றை துப்பாக்கியின் நுனியில் கட்டிக்கொண்டேன். 'ரைபிள்' இதற்கெல்லாம் உபயோகப்படுத்தப் படக்கூடாது.

நானும் வழிகாட்டியும் காட்டு நடுவே சென்று விட்டோம். ஒற்றையடிப் பாதைபோன்ற குறுகலான பாதை. ஒருவர்பின் ஒருவர்தான் போகமுடியும். இருபுறமும் பாறை. பாறையைக் கடக்க நான் காலடி வைத்தேன். 'ஹா' என்று கூவினன் வழிகாட்டி. துப்பாக்கி பாறையில் மோதிற்று. கனமாகவும் இருந்தது. ஒரு வினடிகூட இருக்காது. மேலே பார்த்தேன். அந்த வேங்கை திடீரென்று பாறையிலிருந்து என்மீது பாய்ந்திருக்கிறது. அந்த வேகத்தில் என் துப்பாக்கியில் மோதி யிருக்

"ஏம்மா, எத்தனைநாளைக்குத்தான் என்னை ஏமாத்த முடியும்?" என்று ராஜா வேஷதாரி கேட்கிருர் போலும்! ஜுபிடர் பிக்சர்ஸ் "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" படத்தில் எம். ஆர். சந்தானம், சரோஜாதேவி, ஜெமினி கணேசன்.

கிறது. துப்பாக்கி பாறையில் மோதவே, அதன் நுனியிலிருந்த 'சமயோசித கத்தி' புலியின் கீழ் வாயில் நுழைந்து மேல்வாயில் வந்து வாயைத் தைத்துவிட்டது. என் உடம்பு குப்பென்று வியர்த்தது. ஏதோ ஒரு சக்தி என்னுள்ளே வேலை செய்தது. அப்படியே மடமட வென்று சுட்டேன். கண் இருட்டியது. கீழே விழுந்தேன். மீண்டும் நான் கண்விழித்தபோது நண்பர்கள் என் அருகே இருந்தார்கள். புலி முகம் தெரியாமல் சல்லடையாக்கப்பட்டுக் கிடந்தது. புலியின் சவம் அங்கே இல்லை! எல்லோர் வயிறும் நிரம்பியது! இப்போது நினைத்தாலும் புல்லரிக்கும் நிகழ்ச்சி அது.

நான் புலியைக் கொல்ல வீரமுடன் போனேன். ஆனால் நான் வீரனாக அதை எதிர்த்துக் கொல்லவில்லை. அது என் கத்தியில் மாட்டிக்கொள்ளாமல் இருந்தால் நாங்கள் அதன் வயிற்றுக்குள்ளே இருந்திருப்போம்.

பாலக்காடு அருகே பறையன் மாடு என்ற மலைப்பிரதேசத்தில் அது நடந்தது. ஒரு பெரிய காட்டுப் பன்றி அந்த வட்டாரத்தில் அட்டகாசம் செய்வதாகக் கேள்விப்பட்டுச் சுடுவதற்காகப் போயிருந்தோம். நான்குபுறமும் அதை வளைத்துக் கொண்டோம். ஒருவர் பக்க வாட்டிலிருந்து அதன் வயிற்றில் சுட்டுவிட்டார். அதன் வயிற்றில் குண்டு பாய்ந்து விட்டது. காட்டுப் பன்றி இதனால் செத்து விடாது. அடிபட்டால் ரோஷத்துடன் தான் நிற்கும் பக்கமாகவே ஓடும். அப்படி அது என் பக்கமாக வந்தது. மனிதனின் காலிடுக்கில் புகுந்து இரண்டு புறமுள்ள கோரைப் பற்களால் கால்களை அறுத்துக் கீழே தள்ளிக் கொன்று விடும் இயல்புள்ளது அது. என் பக்கமாக அது திடீ

அஞ்சலி பிக்சர்ஸ் "அடுத்த வீட்டுப் பெண்" படத்தில் ஹாஸ்யத்திற்குப் பஞ்சமே இருக்காது! அதில் டி. ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு, ஏ. கருணாநிதி, பிரண்ட் ராமசாமி, சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்.

இனாம் ! இனாம் !! இனாம் !!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை] ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!

மாய மோதிரம்

இந்த மாயமோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பிய தெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப் படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**
(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

இரவில் தனியாக இருக்கும்
போதுதான் பார்த்துக்
கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறை படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள், 12 படங்கள் கொண்ட சாம்பிள் செட் ரூ. 3.50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

ரென்று வரவே, நான் அனுபவம் காரணமாக துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டு குஸ்திபோடுபவனைப் போல் நின்றேன். பன்றி என்னருகே வந்தவுடன் அதன் முதுகில் இரு கைகளையும் ஊன்றி அதன் பின்புறம் போய்க் குதித்து துப்பாக்கியை எடுத்துக் கொண்டு தயாரானேன். பன்றியால் உடனே திரும்ப முடியாது. சிறிது தூரம் சென்று திரும்பியது. நான் சுட்டேன்! அது சுருண்டு விழுந்தது. பிறகு என்ன? சாப்பிட்டு விட்டோம்!

ஒரு சமயம் ஒரு பைத்தியக்கார வேலை செய்தேன். நான் உத்தியோகம் ஏற்றபின் குளப்பிரம்பு என்ற இடத்தில், இரண்டு மலைகளுக் கிடையே இருந்த சமவெளியில் முகாமிட்டிருந்தோம். எங்கள் முகாமைச் சுற்றிலும் முள்வேலி போடப்பட்டிருந்தது. எதிரேயிருந்த மலையில் தீ மூண்டது. உடனே அங்கிருந்த ஏராளமான காட்டுப் பன்றிகள் எதிர் மலைக்கு ஓட ஆரம்பித்தன. நான் சட்டப்படி அவற்றைச் சுடக்கூடாது. ஆனால் எனக்கோ பன்றி இறைச்சிஎன்றால் பைத்தியம். திடீரென்று ஒரு பன்றிக் கூட்டத்தின் பின்னால் ஓட ஆரம்பித்தேன். என் நண்பர்கள் நான் செய்வது தவறு என்று கூவியபடி பின்னால் ஓடி வந்தார்கள். ஒரு பன்றியை நான் நெருங்கினேன். மற்றவை ஓடி விட்டன. அந்தப் பன்றி ஒரு கிணற்றில் விழுந்தது. ஓடி வந்த வேகத்தில் நானும் விழுந்தேன். அது சேறும் சகதியுமான பாழுங் கிணறு. பன்றி என்னைத் தாக்க ஆரம்பித்தது. சிறிது நேரம் மல்யுத்தம் நடைபெற்றது. நான் அதன் பின் கால்கள் இரண்டையும் பிடித்துத் தூக்கி பத்து சுற்று சுற்றி வீசி, பாறையில் துணி துவைப்பது போல் அடித்தேன். பன்றி மயக்கமாகி விழுந்தது. அதை நண்பர்கள் மூலம் மேலே ஏற்றி, கோடரியால் பிளந்து தின்றுத் தீர்த்தோம்.

ஒரு சமயம் அகமது என்ற நண்பரை நான் காப்பாற்ற நேர்ந்தது. இது மிகவும் ரசமான - ஆபத்தான விஷயம். காளிகாவு என்ற இடத்தில் நாங்கள் வேட்டையாடப் போயிருந்தோம். ஒவ்வொருவர் ஒவ்வொரு பக்கம் பிரிந்தோம். அப்

போது திடீரென்று அகமது அலறும் சப்தம் கேட்டு ஓடினேன். ஒரு கிளைமானின் கொம்பில் அகமது சிக்கிக் கொண்டிருந்தார். அது அவரைத் தூக்கியபின் ஓடவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் தவித்துச் சுற்றிச்சுற்றி வந்தது. சுட்டால் அகமது மேலும் குண்டு பாயலாம். மான் நெற்றியில் சுட்டால்தான் உடனே சாகும். ஒரு கணம் தடுமாறினேன். பிறகு என் தைரியம் என்னைக் கைவிடவில்லை. மானைப் பார்த்துச் சுட்டேன். அது அடிபட்டு விழும்போது அகமது தூக்கி யெறியப்பட்டார். உடனே எழுந்து ஓடி அதன் கழுத்தை இடுப்பிலிருந்த கத்தியால் அறுத்தார். எனக்கு வேடிக்கையாக இருந்தது. சற்று முன் உயிருக்கு மன்றாடியவர் ஆத்திரம்தீர இப்படிச் செய்கிறாரா? சாதாரணமாக முஸ்லிம்கள் எதையும் அறுக்காமல் சாப்பிட மாட்டார்களாம். ஆகவே அவர் அதன் உயிர் பிரியுமுன் அறுக்க ஆரம்பித்தார்! வேட்டையில் எங்களுக்குச் சரியான வேட்டைதான்!

மலைப்புறம் என்ற இடத்தில் ஒரு பெரிய மலைப்பாம்பை நான் கொன்றேன். நாங்கள் இருந்த இடத்திற்கு அடுத்த வீட்டில் தினமும் கோழிகள் திருடுபோக ஆரம்பித்தன. ஒருநாள் இரவு கோழி கூவும் சப்தம் கேட்டு ஓடிவந்தேன். ஒரு பெரிய மலைப்பாம்பு மெதுவாக நகர்ந்து போய் ஒரு பாறை யிடுக்கில் தலையை நுழைத்தது. நானும் நண்பர்களும் சேர்ந்து இழுத்தோம். வரவில்லை. உடனே வாலைத் தூக்கிப் பிடித்து உதறி முறுக்கினேன். அதன் உடல் வளையங்கள் ஒடிந்தன. பாறையை நகர்த்தி சுட்டுக் கொன்றேன்.

எனக்கு இறைச்சி தின்பதிலுள்ள இன்பம் வேறெதிலுமில்லை. மனிதன், பாம்பு! தவிர மற்ற எல்லாவற்றையும் சாப்பிடுவேன்! காட்டில் எதுவுமே கிடைக்கவில்லை என்றால் கருங்குரங்கையாவது சுட்டுத் தின்று விட்டுத்திரும்புவேன். குளப்பிரம்பு என்ற இடத்தில் துப்பாக்கியுடன் சென்றேன். அப்போது நான் போலீஸ் இலாகாவில் இருந்தேன். ஒரு பெரிய சமவெளியின் நடுவே ஒரு கரும்புலி நின்றிருந்தது. அது வேறுபக்கமாக எதையோ பார்த்துக்கொண்டிருந்தது. எனக்குக் கரும்புலி இறைச்சி சாப்பிட வேண்டுமென்ற தணியாத ஆசை ஏற்பட்டு விட்டது! ஆனால் நெற்றியில்தானே சுட வேண்டும்? துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொண்டு, கையைத் தட்டினேன். உடனே புலி திரும்பியது. நெற்றியில் சுட்டேன். அது சமவெளியாதலால் அங்கே நிற்கக் கூடாது என்று வந்து விட்டேன். பிறகு வேறு வேலையாக வெளியூர் சென்று திரும்பினேன். நான் சுட்ட அன்று மறுநாள் இறந்து கிடந்த கரும்புலியை நண்பர்கள் பார்த்து விட்டு, அதிகாரிகளிடம் தெரிவித்து விட்டுப் புதைத்து விட்டதாக அறிந்தேன். எனக்கு ஒரே ஏமாற்றம். நண்பர்களுடன் ஒரு திட்டம் தீட்டினேன். இரவு யாருமறியாமல் சென்று, புதைக்கப்பட்ட இடத்தைத் தோண்டி புலியின் தொடையை அறுத்தெடுத்துத் தின்றோம். என் வாழ்நாளில் அது மகத்தான இன்ப நாள்!

நான் படவுலகில் நுழைந்தபின் அது நடந்தது. 1955-ல் நான் உறவினர் வீட்டுக்கு வால்பாறைக்குச் சென்றிருந்தேன். வெல்லுணி, வால்பாறைக்கு இடையே உள்ள காட்டில் காடர் வகுப்பைச் சேர்ந்தவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தேன். துப்பாக்கி சகிதமாகக் காட்டுக்குள் சென்றோம். திடீரென்று ஒரு ஓநாய்க் கூட்டம் எங்கள் எதிரே நின்றது. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. துப்பாக்கியால் ஒரு ஓநாயைச் சுட்டால், மற்றவை கூட்டமாகப் பாய்ந்து, எலும்புகூட விடாமல் தீர்த்துவிடும். ஓநாய் யாரையாவது பார்த்து விட்டால் 'ரௌடி'யைப் போல் 'பிகில் ஊதும்' சப்தத்தில் சமிக்ஞை காட்டும். உடனே ஆயிரம் ஓநாய்கள் அங்கே குழுமிவிடும். ஓநாயிடம் சாமர்த்தியமாக நடந்து கொள்ள வேண்டும். ஓநாய்க்குக் கண்கள் பெரிது. மண்ணை வாரி இறைத்தாலும் செடிகளைப் பிடுங்கி அசைத்தாலும் அது கண்ணில் படுமே என்று பயந்து ஓடிவிடும். நாங்கள் மண்ணை வாரி இறைத்தோம்.

ஓநாய்களிடமிருந்து தப்பிப் பிழைத்தோம்.

படப்பிடிப்பின்போது ஒரு ரசமான சம்பவம் நடைபெற்றது. தேவர் பிலிம்ஸ் "செங்கோட்டை சிங்கம்" படப்பிடிப்பு நடைபெற்றது. அன்று சிறுத்தைக்கும் காட்டுப்பன்றிக்கும் சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது. அதை சிலர் வேடிக்கை பார்க்க கூண்டுக்குள்ளே நின்றோம். எங்களுக்கு மறைவிடமாக சிறு சிறு குடிசைகள் கட்டப்பட்டிருந்தன. மணி என்ற அந்தச் சிறுத்தையுடன் சண்டை செய்ய மாயவரத்திலிருந்து காட்டுப்பன்றி ஒன்று கொண்டுவரப்பட்டிருந்தது. காட்சி முடிவுற்றது. சிறுத்தையைப் பழக்குபவர் அதைப் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டார். காட்டுப் பன்றியைப் பிடிக்க யாவரும் பயந்தார்கள். நான் தேவரிடம் சென்று நான் பிடிப்பதாகக் கூறினேன். 'வேண்டாம்' அதைச் சுட்டு விடலாம். நீ போய் உயிரை விடாதே 'என்றார். பன்றியைக் கொண்டு வந்தவர்கள், "எங்களாலேயே முடியவில்லை. உன்னால் முடியுமா?" என்றனர். அந்த ஏச்சுப் பேச்சு என் வெறியைக் கிளப்பி விட்டது. காஸ்ட்யூம் கிருஷ்ணனிடம் சொன்னேன். 'தைரியம் இருந்தால் போ!" என்றார். புரொடக்ஷன் மானேஜர் நடராஜனிடம் தயாராக இருக்குமாறு கூறிவிட்டு கயிற்றுடன் கூண்டுக்குள் நுழைந்தேன். பன்றி என்னைத் தாக்கத் தயாராகியது. சிறுத்தையைக் கண்டபின் அது மகா கோபத்துடனிருந்தது. சிறிது நேரம் அதனிடம் விளையாட்டுக் காட்டினேன். பிறகு திடீரென்று பாய்ந்து, அதன் பின் கால்களைப் பற்றிச் சுற்றினேன். "நடராஜா ஓடிவா!" என்று குரல்கொடுத்தேன். கூண்டுக்கு வெளியே இருந்தவர்கள் பிரமித்துப்போய் நின்றிருந்தார்கள். சுற்றிப் போட்டதும் பன்றி மயங்கிக் கிடந்தது. நடராஜன் அதன் கால்களைக் கட்டும் வரை அமுக்கிப் பிடித்தேன். பிறகு அதை வெளியேற்றினோம். தேவர் என்னை மிகவும் பாராட்டினார்.

இதைப்போல் என் வாழ்வில் ஏராளமான அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வசதிப்படும்போது விவரமாகக் கூறுகிறேன். ★

செப்டம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
★	★	★	★	1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	★

செப்டம்பர் மாதம் பண்டிகைகள் பல நிறைந்த மாதம். நவராத்திரி, விஜயதசமி, கிருஷ்ண ஜெயந்தி, ஓணம் பண்டிகைகள் இம்மாதம்தான் வருகின்றன. வட்ட வடிவமாகப் பூ வைத்துப் பூஜிப்பது ஓணம் பண்டிகையின் முக்கிய அம்சம். இங்கு பத்மினி அதைச் செய்து காட்டுகிறார்.

அக்டோபர்

ஊரெங்கும் மகிழ்ந்து, ஒன்ருகக் கலந்து உறவாடும், உல்லா
சம் பொங்கும் பண்டிகை தீபாவளி. இந்த ராஜசுலோசனு
தீபாவளிப் பண்டிகைத் தோற்றத்தில் காட்சி யளிக்கிருர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31	★	★	★	★	1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29



வருஷத்தின் கடைசி மாதமான டிசம்பரில்தான் கார்த்திகை தீபம் வருகிறது. இருளை விரட்டி ஒளியைக் கூட்டும் இத் திருநாளை இங்கு இ. வி. சரோஜா நமது கண்களின் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார். இம்மாதத்தை அடுத்துப் பிறக்கப் போகும் புது வருடம் மக்களுக்கெல்லாம் புதிய நம்பிக்கையை வளர்க்கும் ஒளியாக இருக்க வேண்டும் என்று கூறுவதைப்போல் இத்திருநாள் அமைந்திருக்கிறது.

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
★	★	★	★	1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

ஸ்ரீராம்
புரொடக்ஷன்ஸ்
ஜீவபூமி
வெளிப்புறக்
காட்சிகள்
PSR

மொகலாயரின் நீதி மன்றத்திற்கு ரஜபுத்ர வீரன் ரதன்சந்தாவத் இழுத்துச் செல்லப் படுகிறான். அவன் கொடுமைப்படுத்தப் பட்டாலும் ரஜபுத்ர குலவிளக்கான அகிலாதேவி அவனை ஆதரிக்கிறாள்.







ராக்ஷஸ பலம் கொண்ட ரதன் இழுத்துச் செல்லப்படுகிறான். அப்போதும் அவன் மனம் கலங்கவில்லை. அகிலாவை மணக்க விரும்புகிறான் மற்றொரு ரஜபுத்ர வீரன். அவள் யாரை மணக்கப்போகிறாள்?





மொகலாய சேனைத் தளபதி
இளவரசனிடம் எதிர்காலம்
பற்றிய திட்டங்களை விளக்கு
கிறான். அவன் இதை ரகசியமா
கச் சொன்னாலும் பகலில் பக்
கம் பார்க்கத் தவறி விடுகி
றான். இது எப்படி முடியுமோ?



ரதனுக்கு ஆப்த நண்பனாக
விளங்கும் மோகன்தாஸ், அவ
னுடைய துணிவு கண்டு பெரு
மகிழ்வும் பயமும் அடைகிறான்.
அவனுக்கும் ஒருத்தியைக்
காதலிக்கத் தெரிந்திருக்கிறது!

செபடமபா

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
★	★	★	★	1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	★

செப்டம்பர் மாதம் பண்டிகைகள் பல நிறைந்த மாதம். நவராத்திரி, விஜயதசமி, கிருஷ்ண ஜெயந்தி, ஓணம் பண்டிகைகள் இம்மாதம்தான் வருகின்றன. வட்ட வடிவமாகப் பூ வைத்துப் பூஜிப்பது ஓணம் பண்டிகையின் முக்கிய அம்சம். இங்கு பத்மினி அதைச் செய்து காட்டுகிறார்.

அக்டோபர்

ஊரெங்கும் மகிழ்ந்து, ஒன்றுகக் கலந்து உறவாடும், உல்லா
சம் பொங்கும் பண்டிகை தீபாவளி. இந்த ராஜசுலோசனு
தீபாவளிப் பண்டிகைத் தோற்றத்தில் காட்சி யளிக்கிறுர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31	★	★	★	★	1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

நவம்பர்

நவம்பர் மாதத்தில் குறிப்பிடும்படியான பண்டிகைகள் எதுவும் இல்லை. எனினும் சாவித்திரி இம்மாதத்தை அலங்கரிப்பதில் ஒரு சிறப்பு உண்டு. ஏனெனில் இதுதான் அவர் பிறந்தமாதம்.

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
★	★	1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	★	★	★



வருஷத்தின் கடைசி மாதமான டிசம்பரில்தான் கார்த்திகை தீபம் வருகிறது. இருளை விரட்டி ஒளியைக் கூட்டும் இத் திருநாளை இங்கு இ. வி. சரோஜா நமது கண்களின் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார். இம்மாதத்தை அடுத்துப் பிறக்கப் போகும் புது வருடம் மக்களுக்கெல்லாம் புதிய நம்பிக்கையை வளர்க்கும் ஒளியாக இருக்க வேண்டும் என்று கூறுவதைப்போல் இத்திருநாள் அமைந்திருக்கிறது.

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
★	★	★	★	1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

ஸ்ரீராம்
புரொடக்ஷன்ஸ்
ஜீவபூமி
வெளிப்புறக்
காட்சிகள்

மொகலாயரின் நீதி மன்றத்திற்கு ரஜபுத்ர வீரன் ரதன்சந்தாவத் இழுத்துச் செல்லப் படுகிறான். அவன் கொடுமைப்படுத்தப் பட்டாலும் ரஜபுத்ர குலவிளக்கான அகிலாதேவி அவனை ஆதரிக்கிறாள்.







ராக்ஷஸ பலம் கொண்ட ரதன் இழுத்துச் செல்லப்படுகிறான். அப்போதும் அவன் மனம் கலங்கவில்லை. அகிலாவை மணக்க விரும்புகிறான் மற்றொரு ரஜபுத்ர வீரன். அவள் யாரை மணக்கப்போகிறாள்?

மொகலாய சேனைத் தளபதி இளவரசனிடம் எதிர்காலம் பற்றிய திட்டங்களை விளக்குகிறான். அவன் இதை ரகசியமாகச் சொன்னாலும் பகலில் பக்கம் பார்க்கத் தவறி விடுகிறான். இது எப்படி முடியுமோ?





ரதனுக்கு ஆப்த நண்பனாக விளங்கும் மோகன்தாஸ், அவனுடைய துணிவு கண்டு பெருமகிழ்வும் பயமும் அடைகிறான். அவனுக்கும் ஒருத்தியைக் காதலிக்கத் தெரிந்திருக்கிறது!

நவம்பர்

நவம்பர் மாதத்தில் குறிப்பிடும்படியான பண்டிகைகள் எதுவும் இல்லை. எனினும் சாவித்திரி இம்மாதத்தை அலங்கரிப்பதில் ஒரு சிறப்பு உண்டு. ஏனெனில் இதுதான் அவர் பிறந்தமாதம்.

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
★	★	1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	★	★	★

காட்சி 1

கருணையின் வடிவம்

அது ஒரு பெரிய அரண்மனை போன்ற மாளிகை. அதன் சொந்தக்காரர் பலகோடி. அவர் மகள் கலா. நாகரீகம் என்று அநாகரீகச் செய்கைகளின் பிரதிநிதியாக விளங்குபவள் அவள். கலாவின் தாய் தாயம்மாள் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டுப் படுக்கையில் கிடக்கிருள். நோயாளியான அவளிடம் கலா உள்பட யாவருக்கும் வெறுப்பு, ஒரே ஒருத்தியைத் தவிர. அந்த ஒருத்தி... அந்த வீட்டு வேலைக்காரியும் தாயம்மாளிடம் தாயன்பு செலுத்தும் ஒரே ஜீவனுமான முத்தம்மாதான். தாயற்ற அவளை ஆளாக்கி, அவள் அத்தான் நல்லானிடம் ஒப்புவிப்பதாக, அவள் தாயிடம் செய்து கொடுத்த சத்தியத்திற்காகவே தான் உயிர் வாழ்வதாக தாயம்மாள்கூட அடிக்கடிச் சொல்வதுண்டு.

அன்று வெள்ளிக்கிழமை. ஆகவே திருவிளக்கு ஏற்றிவிட்டு அந்தத் தீப தேவியிடம் வேண்டுகிருள் முத்தம்மா.

முத் : காலை மலர்ந்தது போல் என்னை வளர்க்கும் இந்த அன்னை அகத்தில் ஆனந்தமும் சுகமும் மலர்ந்து எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதுதான் தாயே என் ஆசை. திருவிளக்கான தேவியே, இருளகற்றும் ஜோதியே...

தாய : முத்தம்மா முத்தம்மா...

முத் : இதோ வந்துட்டேன் அம்மா. இந்தாங்கம்மா, வெள்ளிக்கிழமையும் அதுவுமா எடுத்துக்குங்கம்மா.

தாய : சருகாகிப் போன எனக்கு ஏனம்மா இந்தச் சம்பரதாயமெல்லாம்? முத்தம்மா, ரோஜாப்பூ போன்ற உன் முகத்திலே மாதுளை வர்ணப் பொட்டு எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? பெண் குலத்துக்கே நீ ஒரு முத்தம்மா. முத்து! ராத்திரி ஐயா வீட்டுக்கு வந்தாரா...?

முத் : நீங்க சீக்கா விழுந்த பிறகு எந்த ராத்திரி அம்மா ஐயா வீட்டுக்கு வந்துருக்காரு? இப்பதான் வந்தாரு. வந்தவுடனே வயலூரு கிராமத்துக்குப் புறப்பட்டுக்கிட்டு இருக்காரு.

பாத்திரங்கள்

ஜெமினி கணேசன்	நல்லான்
பத்மினி	முத்தம்மா
ராகினி	ரூபா
சுகுமாரி	கலா

கதை-வசனம் :

இராம அரங்கண்ணல்

டைரக்ஷன் :

ஏ. பீம்சிங்

தயா : வயலூருக்கா...?

முத் : ஆமாம்மா அங்கே பண வசூலுக்குப் போருரு.

தாய : ம்...வேறு எதுக்குப் போவாரு? முத்தம்மா! நீபோயி ஐயாவை வரச்சொல்லு.

முத் : ஆகட்டும்மா.

முத்தம்மா மாடியிலிருந்து இறங்குகிறுள்.

பல : என்னடி இந்த ஓட்டமும், ஒய்யாரமும்? உல்லாச வனத்து மஹாராணியின்னு நினைப்போ. இப்படி ஓடியாந்தா படி என்ன ஆகும்...?

முத் : அம்மா உங்களே வரச் சொன்னுங்க.

பல : எதுக்கு வரச்சொன்னு? சதா நீ இருக்க பக்கத்திலே. சமையலுக்குத்தான் ஆளிருக்குது...வைத்தியம் செய்யத்தான் டாக்டர் இருக்காரு. என்னெ எதுக்குக் கூப்பிடுரு...?

கலா : அப்பா, எதுக்குத் தெரியுமா அம்மா கூப்பிடருங்க? அவங்கக்கிட்ட இருக்கில்ல சயரோகம், அதை நமக்கு கொஞ்சம் விநியோகம் பண்ணலான்னுதான். அதுனுலதாம்ப்பா அவங்க இருக்கிற ரூம் பக்கமே நான் போறதில்லே.

பல : அதாம்மா புத்திசாலித்தனம். நோயாளிகளும், ஏழைங்களும் ஒரு இடத்துல இருந்தா, சதா தொணத் தொணன்னு உயிரை எடுத்துடுவாங்க.

அவரும் கலாவும் காரிலேறி கிராமத்துக்குப்புறப்பட்டுப்போகிருர்கள். சும்மா போகாமல் தாயம்மாளேயும் முத்தம்மாவையும் திட்டிவிட்டுப் போகிருர்கள். முத்தம்மா வருத்தத்தோடு திரும்புகிருள்.

முத் : அம்மா! ஐயா வந்து...

தாம : எல்லாம் கேட்டுக் கிட்டுத் தாம்மா இருந்தேன்.

முத் : சின்னம்மா கூட...

தாய : என்னெ மதிக்கலே...இதுக்கு நீ ஏம்மா அழறே? கசங்கிப் போன ரோஜாவைப் பன்னீராக்கிப் பயன்படுத்துற உலகம், பிரயோஜனமில்லாத பெண்களே இப்படித்தாம்மா நடத்துவாங்க.

முத் : இதை எல்லாம் பார்க்கப் பார்க்க இங்க என் இருக்கோண்ணு தோணுது.

தாய : எனக்குக் கூடத்தான் இந்த உலகத்துலே ஏன் இருக்கோண்ணு இருக்குது. பத்து வருஷத்துக்கு முன்ஞல பண்ணேயில் பாடுபட்ட உங்க அப்பன் - உன்னே, உன் மாமன் மகன் நல்லானுக்குக் கட்டிக் கொடுக்கச் சொல்லி எங்கிட்ட ஒப்படச்சிட்டுப் போனுன். அந்த வாக்கை நிறை வேத்தணும்னுதான் நான் இந்த உசிரை வச்சிக்கிட்டு இருக்கேன். என்னமோ கிராமத்துக்குப் போனு, அப்படியே உன் மாமனேயும் பாத்துக்கிட்டு வரச் சொல்லலாமுன்னு நெனேச்சேன். முத்து! நல்லான் பணக்காரன் இல்லேன்னுலும் நல்ல பண்புள்ளவன். குடியிருப்பது கீத்து வீடுன்னுலும் மாத்துக் குறையாத மணமுடையவன். நல்லான் ரொம்ப நல்லவன். ரொம்ப நல்லவன்.

வேதனேப்படுகிருள் முத்தம்மா. கூடவே ஒரு இனம் தெரியாத மகிழ்ச்சியும் ஏற்படுகிறது அவளுக்கு!

காட்சி 2

அப்பனும் மகனும்

நாகனின் மகன் நல்லான். தாயற்ற அவன் தனக்கும் தன் அப்பனுக்கும் சோறு பொங்கிவைத்து விட்டு வயக்காட்டை நோக்கிச் செல்வது வழக்கம். அவர்களிருவரும் சொந்த நிலத்தில் பாடுபட்டு உயர்

வதைக் காணச் சகியாத ரத்தனம், அந்த ஊரில் பாதி நிலம் கொண்ட பலகோடி வரும்போது, அவரிடம் நல்லானைப் பற்றித் திரித்துக் கூறுகிறான். நியாயம் பேச முயன்ற நல்லானை நாகன் வந்து அடக்கி விடுகிறான். அவன் பழமையில் ஊறியவன். 'நல்லான் உனக்கு அடிமையாக இல்லாமல் சொந்தமாக நிலம் வைத்திருக்கிறான்' என்று துச்சமாகக் கூறி பலகோடியின் பேராசையைக் கிளறிவிடுகிறான் ரத்னம். வீட்டிலே நாகன் கோபத்துடனிருக்கும்போது சோறு சாப்பிடக் கூப்பிடுகிறான் நல்லான்.

நல் : அப்பா, சாப்பிடுங்கப்பா...

நாக : யாருக்குடா வேணும் உன் சாப்பாடு? ஊர்ல பாதி நிலத்துக்குச் சொந்தக்காரரு, பணக்காரரு, உங்க அத்த மகளைப் பத்து வருஷமா வச்சிச் சோறு போடுறவரு. அவருக்கு எதிரா சரி சமமா நிண்ணு பேசற அளவுக்கு எங்க இருந்துடா வந்தது தைரியம்? எங்க இருந்து வந்ததுண்ணு கேக்கிறேன்?

நல் : நானுவாப்பா போனேன்? அவருதானப்பா என்னக்கிளறிவிட்டாரு முதல்ல...

நாக: அதுனால? அய்யாவுக்குக் குதிச்சுட்டு வந்துட்டதோ, கோபம்? எலே! நமக்கெல்லாம் வரலாமாடா...கோபம்? எனக்கு அஞ்சுமாமாங்கம் வயசாச்சுடா, அஞ்ச மாமாங்க வயசாச்சு. ஊர்ல ஒரு பெரிய மனுஷனுக்கு எதிர்ல நிண்ணு பேசியிருப்பனா? அப்பறம் ஆண்டான் அடிமைங்கறதுக்கு என்ன வித்தியாசமிருக்கு?

நல் : க்கும்...சும்மா போற மாட்டெ அடிச்சா அது கூடத்தான் முறைச்சுக்குது.

நாக : உக்கும்... முறைக்குண்டா முறைக்கும். அப்பறம் கொம்பு அறுத்துச் சூடு போட்றுவேன்.

நல் : போடுவாரு...போடுவாரு... அதெல்லாம் அந்தக்காலம்.

நாக : எலே, அவரத்தான் பேசுனேண்ணு என்னையுமா எதிர்த்து நின்னு பேசறே?நீமுத்திப்போயிட்டேடாமுத்தித் தான் போயிட்ட. உன்னை இனிமேலும் விட்டு வச்சிருந்தா வம்புக்கு மேலே வம்புதான். நம்ப ஐயருல்ல ஐயரு, அவரப் போயி - எலே, முழுக்க கேட்டுட்டுப் போடா! அவசரக் காரப் பயமவன். ஐயா பட்டணம் போறுங்க...ம் ...கல்யாண விஷயமாப்...போறுங்க. ஹா.முழுசுங் கேட்டுக்காமப் போறுனே. ஆனுத் தைரியக்காரப் பயதான். அவர எதிர்த்து நிண்ணு நல்ல, நல்ல கேள்வியெல்லாம் கேட்டான். என்ன இருந்தாலும் என் மகன் பாருங்க...

காட்சி 3

சமதர்மம்

தன் மாமன் மகளை தனக்காக மணமுடிக்கத் தகப்பனார் கிளம்புவதறிந்து ஐயரிடம் நாள் பார்க்கும்படிக் கேட்பதற்காகத் தலைதெறிக்க ஓடுகிறான் நல்லான். அவரே சைக்கிளில் எதிரே வருகிறார்.

நல் : சாமி...சாமி.

ஐய : என்ன...?

நல் : சாமி...

ஐய : என்னடா நல்லான், தலைதெரிக்க ஓடியாறே? என்ன சமாசாரம்?

நல் : ம்...இல்லை சாமி எங்கப்பா சாமி...

ஐய : டேய்...டேய்...என்னடாது வார்த்தைக்கு வார்த்தை சாமி போட்டுண்டு. நேக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு நோக்குத் தெரியுமோல்லியோ! என்னடா மனுஷனுக்கு மனுஷன் சாமி வேண்டியதிருக்கு? என்னடா சொன்னான் நாகன்?

நல் : ஒண்ணுமில்ல சாமி, எங்கப்பன் பொண்ணு பார்க்க...

ஐய : உம், பொண்ணு? உனக்கா? அட்ரா சக்கேன்னுன்...ம்...யார்ரு அது பொண்ணு ?

நல் : அதான் சாமி, பட்டணத்திலே எங்க மாமன் மவ.

ஐய : ஓகோ! மாமன் மக முத்தம் மாளா? பேஷ் நன்னுயிருப்பாடா...உம் நம்பாத்துல பொறக்க வேண்டியவ. ஹிம்...எப்பப் புறப்படப் போருனும், நாகன்...?

நல் : அதுக்குத்தான் சாமி ஒரு நல்ல நாளாப் பாக்கணும்னு உங்களைப் பாக்கறதுக்காக கேட்டாரு...

ஐய : ஏய், நல்ல காரியத்துக்கு நல்ல நாளாவது, கெட்ட நாளாவது? மனசு நல்லா இருந்தா எல்லாம் நல்ல நாளுதான். ஆமா, இப்ப எங்கே போற, ஆத்துக்குதானே போற...?

நல் : ம்...ஆமாங்க, ஆ...ஆ...ஆத்துக்கில்ல சாமி! வீட்டுக்குப் போயிக்கிட்டுருக்குறேன்.

ஐய : ஓகோ ஆத்துக்குண்ணு ஆறுன்னு நெனைச்சுட்ட போலருக்கு. அதுல்லடா, அகத்துக்குங்கிறத எங்களவர் ஆத்துக்குண்ணு மாத்திப் புட்டா, வேறொண்ணுமில்ல.

நல் : ஓஹோ!

ஐய : பழக்கத்தை சுலபமா மாத்த முடியாது பாரு. சரி, சரி பின்னால ஏறிக்கோ. நான் நேற உங்க ஆத்துக்கு, சேச்சே ... உங்க வீட்ல விட்டுட்டுப் போறேண்டா.

நல்லா : ஹெ... என்ன சாமி இது? எனக்கு வேண்டா சாமி.

ஐய : ஏய், என்னடா பயப்பட்றியா? எங்களைப்போல உள்ளவால்லாம் சம சீட்டுக் கொடுக்க ஆரம்பிச்சுட்டான்ன, லோகத்துல ஜாதியாவது- பேதியாவதுன? சும்மா பின்னால ஏறிக்கோ? போலாம். ஏறிக்கோடா ஏறிக்கோ... ஏறிக்கோ.

நல் : உம் ... மெள்ள, நான் புடிச்சிக்கிற சாமி...சாமி.

ஐய : டேய்.
நல் : சாமி...சாமி.

இருவரும் விழுகிருர்கள்.

காட்சி 4

அழிவதும் பெண்ணுலே

நாகனும் நல்லானும் பலகோடியின் வீட்டுக்கு வருகிருர்கள். முத்தம்மாவை மணமுடித்து வைப்பதாகக்கூறி அவர்களை அங்கேயே தங்கச் செய்கிருர் பலகோடி. சுருள் தன் எஜமானர் பலகோடியிடம் வருகிருன். அவனுடன் பகதூர், ரூபா இருவரும் வருகிருர்கள். அவர்களை எஜமானருக்கு அறிமுகம் செய்கிருள் சுருள்.

சுரு : வல்லமை படைத்த ஜான் பகதூர் பிராட்கான். இப்போது நம்பளைத் தேடி வந்திருக்காரு. இந்தப் பல்ப் பிரகாசமா எறியறதுக்குத் திட்டம் போட்டுத் தரக்கூடிய பேட்ரி இவங்க. ரெண்டு பேருமாக்கூடி ஒரு இரண்டாண்டுத் திட்டம் போட்டு, நமக்குத் தந்தா, எஜமான் உண்மையிலேயே நீங்க பலகோடி ஆயிடுவீங்க. இவரு பெருமை சாதாரணமானதல்ல. இந்தியாவுக்குள்ள எந்தப் போலீஸ் ஸ்டேஷனில போய்ப் பார்த்தாலும் இவரு படம் அங்கே தொங்கும். எதுவாயிருந்தாலும் சரி, எல்லாம் இவருக்கு ஆத்துல ஓடற தண்ணி மாதிரி.

பல : சரி, நம்ம பணத்தையும் அப்படித் தண்ணிபோல நினைக்காம ஜாக்கிரதையாப் பாடு படணும்னு எனக்குச் சம்மதந்தான். என்ன, நம்ம செய்யப்போற தொழில் இருக்கே.

பக : ஹ ஹ ஹா ...அதெல்லாம் எங்களுக்குத் தெரியாதா?

நீங்க கொஞ்சம் இடங்கொடுத்தாப் போதும்.

ரூபா : எங்க மகிமையை நீங்க போகப் போக தெரிஞ்சுக்குவீங்க.

பல : நான் அதுக்குச் சொல்லலே. அசந்தர்ப்பமா ஒரு வேளே இந்த போலீசுக்கிட்ட அகப்பட்டுக்கிட்டா, என்பேற நீங்க சொல்லக்கூடாது. அதுதான் முக்கிய நிபந்தனே.

சுரு : ஏன்னு, ஐயா ரொம்பப் பெரிய மனுஷரு. இப்பக்கூட ஐயா தயவுல ஒரு கல்யாணம் நடக்கப்போவுது.

பல : ஏய் சுருள்...!

சுரு : க்...மூடிட்டனே. அப்போ இவங்க...

பல : இண்ணேல இருந்து நம்ம சகா, உனக்கு மாஸ்டர்.

சுரு : மாஸ்டர்.

சுருளும் பகதூரும் மகிழுகிறுர்கள்.

நல்லான் முத்தம்மா கல்யாணம் நடைபெறுகிறது.

நாக : சாமி.

ஐய : ம்...

நாக : நேரமாச்சே, ஆரம்பிக்கலீங்களா?

ஐய : ஆஹா...பேஷா ஆரம்பிச்சட்டாப் போறது...ம் ... நல்லான் முத்தம்மா, நீங்க ரெண்டு பேரும் மனமொத்து இன்றுபோல் என்றும் வாழி. இருவரும் நன்று வாழி. அன்போடு பண்போடு ஆருயிர் தன்மையோடு குடும்ப நலம் புரிஞ்சு பெரியவங்களே மதிச்சு அளவோடு-நன்னுக்கவனிச்சுக்கோடா- அளவோடு பிள்ளேகளேப் பெற்று, சவுக்கியமா வாழணும் ... ம் ... ம் ... கெட்டி மேளம்...கெட்டி மேளம் கெட்டிமேளம்.

நல்லானும் முத்தம்மாளும் மணம் முடித்தபின் தாயம்மாளே வணங்கி ஆசிபெறுகின்றனர்.

குடும்பத்தின் இன்பன்

பலகோடி, முத்தம்மாவுக்கும் நல்லானுக்கும் மணம்முடித்தவுடன், அதற்கு ஏழாயிரம் ரூபாய் செலவானதென்று கூறி, நல்லான் - நாகன் இருவரிடமும் கையெழுத்துப் போடச் சொல்லி, அவர்கள் நிலத்தை அடமானமாக எழுதிக் கொண்டு விடுகிருர். முத்தம்மா அவர்களுடன் கிராமத்துக்கு வருகிருள். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. ஐயர் வருகிருர். குழந்தைக்குப் பெயர் வைக்கும்படி அவரிடம் கூறுகிருன் நாகன். இன்பன் என்று பெயர் வைக்கிருர் அவர்.

இடையே...

பலகோடியை சுருள் ஏமாற்றிக் கடனுளியாக்குகிருன். ரத்னம், நாகன் குடும்பத்தைப் பாழ்படுத்த முனேகிருன். முத்தம்மாவின் யோசனேப்படி ஒரு பகுதி கடனே அடைக்க பலகோடியிடம் பணத்துடன் செல்கிருர்கள் யாவரும். வழியிலே விஷயமறிந்த சுருள், அவர்களே ஏமாற்றி விடுகிருன். அவன் காரிலிருந்து இறங்குகிருள் முத்தம்மா. நாகனும் தள்ளப்படுகிருன். நல்லான் அந்தக் கொடியவர்கள் பறித்துச் சென்ற பணமூட்டையைத் திரும்பப் பெறுவதற்காகத் துரத்துகிருன். காரிலிருந்து குழந்தை இறங்கிப்போய் விடுகிறது. குடும்பம் மூன்று பக்கமாகப் பிரிந்துவிடுகிறது. ஒருவழியாக இன்பனே நாகனும் முத்தம்மாவும் கண்டுபிடிக்கின்றனர். இன்பன் தவறு செய்ததாக நினேத்து அவனே அடித்துவிடுகிருன். நாகன் பிறகு தவறுணர்ந்து அடிந்துக் கொண்டு விழுகிருன். முத்து, குன்டம்மா இருவரும் அவர்களே அழைத்துச் செல்கின்றனர்.

முத்தம்மா வருகிருள்

நாகனுக்கு காய்ச்சல் வரவே பலகோடியிடம் பணம் கேட்கப்போகிருள் முத்தம்மா. அதற்குச் சற்று முன்புதான், முத்தம்மாளிடம் சேர்ப்பதற்காக அவள் தகப்பனுர் பாங்கியில் போட்டிருக்கும் இரண்டு

லட்ச ரூபாயை அவளிடம் சேர்ப்பதற்காக விவரம் கேட்டு வந்தார் பாங்கிகுமாஸ்தா. ஆகவே முத்தம்மாளுக்கு ராஜோபசாரம் செய்கிருர் பலகோடி. குமாஸ்தாவிடம் அவள் இன்ருரென்று கூருமல் மழுப்பி அனுப்பி விடுகிருர். முத்தம்மாளை உபசரிக்க ஆரம்பிக்கிருர். முத்தம்மாவை ஒரு காகிதத்தில் கையெழுத்து போடச் சொல்கிருர். அவள் பழைய நினைவு வந்து மறுக்கவே உள்ளே அடைத்துப் பூட்டி விடுகிருர்.

காட்சி 5

ஆவி பிரிந்தது

நாகன் படுக்கையில் கிடக்கிருன். இன்பன் அவனுக்காக வெற்றிலை பாக்கு இடித்துக்கொண்டுவருகிருன்.

இன் : தாத்தா வெற்றிலை கேட்டியே இந்தா.

நாக : வெற்றிலை கொண்டு வந்துட்டியா ? கொண்டு வா.

மிரள விழிக்கிருன்.

இன் : அங்கே என்ன தாத்தா பாக்கறே ? இங்கே இருக்கேன்.

நாக : எங்கடா இருக்கே? எங்க இருக்கே? (**இன்பனைக் கட்டிப் பிடித்து**) வந்துட்டியாடா, அப்பா எங்கடா?

இன் : இல்லே...

நாக : இன்னும் வரலே, அம்மா எங்கேடா ?

இன் : ஒனக்கு ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்கப்போயிருக்கு.

நாக : எனக்கு ஒடம்பு சௌகரியமாப் போச்சே. எனக்கு எதுக்குடா மருந்து? எனக்கு மருந்து வேண்டாண்டா.

இன் : என்னைப் பொய் சொல்லக் கூடாதுன்னு சொல்லிப்புட்டு, இப்ப நீ மாத்திரம் பொய் சொல்லலாமா ?

நாக : எனக்கு ஒடம்புக்கு இனிமே ஒண்ணுமே வராது.

இன் : அப்படின்னு நீ இனிமே, ஆ ஊன்னு, கத்தாமே இருப்பியா?

நாக : ம்...கத்தமாட்டேன், கத்தவே மாட்டேன். நிம்மதியா கண்ணை மூடிக்கிட்டு தூங்குவேன். நம்ம ஊரையும், அங்க உள்ள நெலத்தையும் நெனைச்சிக்கிட்டே யிருப்பேன்.ம்...இன்பா, அந்த நெலந்தாண்டா ஒங்க தாத்தாவை நிம்மதியா வாழவச்சது. அது பொன்னு வெளையும் பூமியிடா. நீ படிச்சு பெரிய ஆபீசராளுக்கூட, அந்த நெலத்தை மறந்திடாதே. எங்க தாத்தா விவசாயி, அவரு உழைச்சி பொழைச்சாருன்னு பெருமையா பேசிக்குவியா ?

இன் : ஓ...

நாக : எனக்கு அது போதுண்டா கண்ணு, எனக்கு அது போதும். ஒன் கையாலே தாத்தாவுக்கு கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொண்டுவர்றியா ?

இன்பன் போகிருன்.

நாக : நான் நிம்மதியா கண்ணை மூட நேரம் நெருங்கிடுச்சு. ம்...நான் செத்துப் போயிடப் போறேன்னு எனக்கு கவலை யில்லை. ஆனா, எந்த மண்ணுல பொறந்து, வளந்து, ஒழச்சி, நான் மனுஷனுனேனே, அந்த மண்ணு எனக்குக் கொடுத்துவைக்கலையேங்கிற கொறைதான்.

அப்படியே விழுந்து இறந்து விடுகிருன்

காட்சி 6

ரூபா வருகிருள்

பலகோடி முத்தம்மாவை வீட்டிலடைத்து வைத்தாலும் அவள் ஜப்பான் உதவியால் தப்பி விடுகிருள். அதேசமயம் நல்லான் இன்பனைக் கண்டு பிடித்து அவனுடன் பலகோடியிடம் வருகிருன். பலகோடியும் ரூபாவும் நல்லானை ஏமாற்றி,

முத்தம்மாவைப்போல ரூபாவை நடிக்கச் செய்து பாங்கியிலிருக்கும் இரண்டு லட்ச ரூபாயை வாங்கி வந்து விடுகிருர்கள். ரூபா நல்லானிடம் வருகிருள்.

நல் : என்ன...யாரு...?

ரூபா : என்னைத் தெரியலையா உங்களுக்கு?

நல் : யாரு...?

ரூபா : நான்தான் முத்தம்மா.

நல் : முத்தம்மாவா? என்னம்மா இது வேடிக்கை!

ரூபா : பாங்கிலே முத்தம்மான்னு சொல்லி, கை நாட்டுப் போட்டு நான் தானே பணம் வாங்கிக் கொடுத்தேன்.

நல் : நீங்களா? மன்னிச்சுடுங்க. எனக்கு அடையாளமே தெரியலேம்மா. நீங்க செய்த உதவிக்கு ரொம்ப நன்றிங்கம்மா...

ரூபா : நான் அம்மா இல்லே. எம் பேரு ரூபா!

நல் : ஓ...நீங்க இல்லேன்னு எனக்கு இவ்வளவு பணம் கிடைச்சிருக்காது. எங்க குடும்பமே உங்களுக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கு.

ரூபா : அதெல்லாமிருக்கட்டும். நான் இப்போது எதுக்காக உங்ககிட்டே வந்திருக்கேன், சொல்லுங்கோ?

நல் : தெரியலீங்க.

ரூபா : இதோ பாருங்க, இப்போ உங்ககிட்டே நிறையப் பணம் இருக்கிறதுனலே, நீங்க ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும். அதனலே, உங்க கூடவே இருந்து முத்தம்மா மாதிரி உங்களைப் பாதுகாக்க வேண்டியது....

நல் : என்னங்க முத்தம்மா மாதிரி, தயவுசெய்து மறுபடியும் அந்த வார்த்தையைச் சொல்லாதீங்க.

ரூபா: இதோ பாருங்க, நீங்க தப்பா நினைக்காதீங்க. அவ்வளவு நம்பிக்கையானவன்னு சொல்லவந்தேன். இந்தப் பலகோடியிருக்காரே, அவரை நீங்க நம்பவே கூடாது.

நல்: ஹூம்... அவரைப்பத்தி எனக்கு முன்னமே ரொம்ப நல்லாத் தெரியும். எங்க குடும்பமே சீர் குலைஞ்சு போனதுக்கு காரணமே அந்தப் புண்ணியவான்தான். இதே பங்களாவுலே என்னையும், எங்கப்பனையும் ஏமாத்திக் கை நாட்டு வாங்கி, அநியாயமா எங்களை அடிமையாக்கிட்டாரு.

ரூபா : அதே பலகோடியை நீங்க அடிமையாக்க இப்போ ஒரு அருமையான சர்தர்ப்பம் வந்திருக்கு. இன்னும் கொஞ்சம் நேரத்திலே இந்த வீட்டையும் சொத்துக்களையும் ஏலம் போடப் போருங்க.

நல் : என்ன...?

ரூபா : ஆமா, அதைச் சொல்லத்தான் நான் ஓடி வந்தேன். எந்த பங்களா ஒங்க குடும்பத்தை செதறும்படிச் செய்ததோ, அதே பங்களாவிலே நீங்க ஆனந்தமா இருக்கணும். எந்த சீமான் உங்கசொத்துக்களை எல்லாம் சுரண்டினரோ, அந்தச் சொத்துக்களெல்லாம் உங்க காலடியிலே கிடக்கணும். அதற்கான சந்தர்ப்பம் கீழே வந்து காத்திருக்கு. சீக்கிரம் கிளம்புங்க...ம்... கிளம்புங்க(**நல்லான்புறப்படுகிருன்**).

அமீனவுடன் கடன்காரர்கள் பலகோடியின் வீட்டின் வெளியில் நிற்கிருர்கள்.

அமீ : ஏலம் போட்டு இவங்க பணத்தை வசூல் செய்து கொடுக்கச் சொல்லி இதோ கோர்ட்டார் உத்தரவு. உம்...என்ன சொல்றீங்க?

(நல்லான் வந்துகொண்டே பேசுகிருன்)

நல் : உம். நான் சொல்றேன், இவரு கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்க நான் தயாராக இருக்கேன்.

அமீ : ம்... நீங்க யாரு ?

நல் : நான் யாராயிருந்தா உனக்கு என்னய்யா ? கையில் பணத்தை வாங்கிட்டு, நான் சொல்றமாதிரி இந்த பங்களா சொத்துக்களை எல்லாம் எழுதிக் கொடுங்க.

அமீ : ரொம்ப நல்லதாய்ப் போச்சு.

பருத்தி புடவையாக் காச்ச மாதிரி. உம் வாங்க.

எல்லோரும் போகிறார்கள். வீட்டின் உட்புறத்தில் நல்லான், பலகோடி, அமீனா, கடன் கொடுத்தவர்கள் அனைவரும் இருக்கிறார்கள்.

நல் : உம்...விவசாயி நாகன் மகன் நல்லான் மனைவி முத்தம்மா... அப்படின்னு விவரமா எழுதியிருக்கா ?

அமீ : எப்படி எழுதணுமோ அப்படி எழுதியிருக்கு.

நல் : எங்கே?

அமீ : இந்தாங்க.

நல் : இதுலெ எஜமான் கை நாட்டுக் காணுமே...எஜமான்!

பல : அதுதான் கை நாட்டுப் போட்டிருக்கேப்பா.

நல் : அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு வேண்டியது கை நாட்டு. போட்டுக்கொடுங்க.

பல : எனக்கு போட்டுப் பழக்கமில்லேப்பா...

நல் : ம்...பேட்டுப் பழக்கமில்லையா? கொடுங்க உங்க கையை.

என்று பலகோடியின் கையை இழுத்து, கைநாட்டுப் போட வைக்கிறான்...

நல் : உம்...நீங்களெல்லாம் போகலாம்.

சாய : இனிமே இவரைப் போலவே நீங்களும் இருக்கணும். அடிக்கடி நம் மள்ட்டே கொடுக்கல் வாங்கல் வச்சிக்கிருங்...நம்மள் வர்ரான்.

ஜப் : ஆ...ஆ...சுவாமிகளே! நீங்களெல்லாம் வரவேண்டாம். போனுப் போதும். போங்க...போங்க...

கடன்காரர்கள் போகிறார்கள்.

பல : நல்லான்! நீதாம்பா சர்குணன், கர்ணன், தர்மவான்! உண்மையாச் சொல்றேன். வேற யாராவது வாங்கியிருந்தால் நான் இவ்வளவு உரிமையோட இங்க இருக்க முடியுமா? இந்நேரம் எங்களை வெளியே அனுப்பியிருக்க மாட்டான்?

நல் : ஜப்பான்! அய்யாவோட பெட்டி படுக்கை யெல்லாம் கொண்டு வந்து வை.

பல : எதுக்கப்பா இதெல்லாம்?

கலா வருகிறாள்.

கலா : எங்கேயாவது உல்லாசப் பிரயாணம் போகவா இருக்கும். அப்பா! நானும் வரட்டுமா?

நல் : நிச்சயமா, நீங்க இல்லாமலா? எசமான் ரெண்டு பேரும் வெளியே கிளம்புங்க சீக்கிரம்.

பல : நல்லான்! என்ன குரல் மாறுது? எங்கே போகச் சொல்றே?

நல் : இந்த பங்களாவை விட்டு வெளியே போங்க.

பல : நல்லான் ... நல்லான் ... நான் என்ன தப்புச் செய்திருந்தாலும் மன்னிச்சிக்கப்பா. ஊர்மெச்ச வாழ்ந்தவன், உன்னைக் கெஞ்சுகிறேன்.

நல் : ஊர் ஊராத் திரிஞ்சவன் நான் சொல்றேன், வெளியே போங்க.

பல : நல்லான்! இந்த நிலைமையில் என் பொண்ணை அழைச்சிக்கிட்டு நான் எங்கே போவேன்? எங்கே போயிருப்பேன்?

நல் : சந்திலெ நில்லுங்க. அப்பத்தான் முந்தி செஞ்ச அக்கிரமமெல்லாம் தெரியும். இருக்க இடமில்லாம தெருத் தெருவா அலைங்க. அப்பத்தான் எவ்வளவு பாவம் செய்தோங்கறது தெரியும். எசமான்! எளச்சவன்னா ஏறிக் குத்தி மாவிளக்குப் போட்டீங்களே அதை மறந்துட்டீங்களா?

பல : நல்லான்...நல்லான்.

நல் : ய்... நல்லான் ... நல்லானுக்கு உங்களைப் பழிவாங்கிற ஆசை இல்லே. பூமியிலே இருந்து பொன் விளையச் செய்துவிட்டுப் புழுவாத் துடிக்கிறானே அவன் வயித்துல அடிச்சு வம்பு செய்கின்ற உங்களைப் போன்ற ஈவு, இரக்கமற்றவங்களுக்கு இது ஒரு எச்சரிக்கையா இருக்கட்டும். பழய பாதையை மறக்கட்டும். புதிய பாதையெ நினைக்கட்டும்! ஜப்பான்.

ஜப் : எஜமான்! பெட்டி படுக்கை ரெடிங்க.

கலா : அப்பா.

நல் : உம் ... நடங்க வெளியே! அதோ வீதி.

பல : போம்மா! விதியத்தவன்லாம் விரட்டற காலமாயிடுச்சு.

நல் : ம்...

பல : ஈஸ்வரா! குபேரனையும் படச்சி குசேலனேயும் ஏண்டா கூடப் படைச்சே? போம்மா.

ஐப்பான் வேகமாக வருகிருன். அவன் கையில் தாயம்மாளின் படம் இருக்கிறது.

ஜப் : நில்லுங்க ... நில்லுங்க ... நில்லுங்க ... போற இடத்திலேயாவது இந்தப் புண்ணியவதியை நெனேங்க. சின்னம்மா வாங்கிக்கிங்க.

கலா வாங்க மறுக்கிருள்.

ஜப் : படத்தைத் தொட்டா. சயரோகம் ஒண்ணும் ஒட்டிக்காது.

பலகோடி கலாவுடன் வீட்டை விட்டு வெளியேறுகிருர்.

காட்சி 7

நல்லானுக்கு விடுதலே

நல்லான் பலகோடியையும் கலாவையும் அனுப்பிவிட்டாலும் கூட, பகதூரும், சுருளும் அவனே விடவில்லே. வந்து மிரட்டுகின்றனர்.

சுரு : வாங்கிவிட்டோம் சொத்தை எல்லாம் என்று ஆனந்தப்படலாம்; பலகோடியை விரட்டி விட்டோம் என்று அகமகிழலாம். ஆனல் இப்போது நீ அடைந்திருக்கும் இந்தச் சொத்துக்கு அதிபதி, சொந்தக்காரி யார் தெரியுமா உனக்கு?

நல் : எனக்குத் தெரியாதாய்யா? அவளேயாய்யா நான் மறந்திடுவேன்? சீக்கிரமே அவளேக் கொண்டு வந்து இந்த வீட்ல குடி வைக்கப் போறேன். என் முத்தம்மாவைக் கண்டு பிடிக்க இப்பவே புறப்படுகிறேன்.

பக : இந்த முத்தம்மாவுக்குப் பதில் சொல்லாமலா?

நல் : எந்த முத்தம்மா?

சுரு : இதோ இருக்கிருளே, இந்த முத்தம்மா.

நல்லானே ரூபாவிடம் தள்ளுகிருன்.

சுரு : அதைத்தான் நானும் உன்னேத் திருப்பிக் கேட்கிறேன், சர்க்கார் அதிகாரிகளின் முன்னிலேயில் இவளேத் தான் முத்தம்மா என்று கூறியிருக்கிருய். இவளேத்தான் என் மனேவி என்று ஒப்புக்கொண்டிருக்கிருய். கையெழுத்துப் போட்டு பணம் வாங்கியது இவள். இதை மறந்தால் - இவள் என் மனேவி முத்தம்மா இல்லே என்று மறுத்தால், வந்த சொத்தை வந்தபடியே கொண்டு போய் கொடுத்து விடுவோம். சர்க்காரிடம் பாங்கியை மோசடி செய்தாய் என்று சொல்லி இப்போதே கொண்டு போய் ஜெயிலில் தள்ளவும் முடியும் எங்களால். பிறகு உன் மகன், உன் மனேவி...

நல்லானேத் தள்ள அவன் கீழே சாய்கிருன். இன்பன் ஓடிப்போய் நல்லானேக் கட்டிக்கொள்கிருன்.

இன் : அப்பா...அப்பா.

நல் : இப்போ நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்?

சுரு : எதுவும் செய்ய முடியாது. போலீசுக்குப் போனல் பூட்டுவார்கள் விலங்கை. வேறு யாரிடமாவது இந்த ரகசியத்தை கூறி உதவி பெற நினேத்தால் இந்தக் கத்தி...

நல்லான் சோர்ந்த முகத்துடன் அமர்ந்திருக்கிருன். இன்பனுடன் ஆகாரங்கள், அனேத்தும் அப்படியே இருக்கின்றன. ரூபா கேட்கிருள்.

ரூபா : எல்லாம் அப்படியே இருக்கே?

நல் : உம்.

ரூபா : சாப்பிடலே?...உம் ... சாப்பிடுங்க.

நல் : வேண்டாம் ரூபா ... கனவைப் போல வந்தது கனவாப் போச்சுன்னு வச்சுக்கோ. என்னே என் முத்தம்மாக் கிட்டே அனுப்பு ரூபா, எப்படியாவது அனுப்பு ரூபா...அனுப்பமாட்டியா?

ரூபா : உங்களைப் பார்த்தா பரிதாபமாயிருக்கு. ஆனு பகதூரை நெனச்சாலோ பயமாவும் இருக்கு. யாரையும் காணேம். இப்ப வேணும்னு நீங்க கிளம்பிப் போயிடுங்க.

நல்லான் போவதற்கு எழுந்திருக்கிருன். பகதூர் உள்ளேயிருந்து வருகிருன்.

பக : ம்...ரெண்டு பேரும் என்ன சதி செய்றீங்க?

ரூபா : அதெல்லாம் ஒண்ணுமில்லே. இவர் முத்தம்மாவைக் கண்டு பிடிக்கணும்னு ஒரே பிடிவாதமாயிருக்காரு. போயித் தேடிப் பார்த்துட்டு வரட்டுமே.

தானுகவே 50 முறை சுடும் பிஸ்டல்

தானுகவே 50 முறை சுடும் லேஸன்ஸ் அவசியமில்லாத அமெரிக்கன் மாடல் பிஸ்டல். சுடும்போது வரும் ஓசை மிருகங்களையும் விரோதிகளையும் நடுங்கச் செய்யும். இதை சினிமா, நாடகங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். இது உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறது. டீலக்ஸ் மாடல் விலை ஒன்று ரூ. 10/50. வி. பி. சிலவு ரூ. 2/50. இலங்கைக்கு ரூ. 4/50. 25 குண்டுகள் இலவசம். தனி குண்டுகள் டஜன் ரூ. 1/- பிஸ்டலின் கேசும், பெல்டும் ரூ. 4/50. ரிப்பேர் செய்ய எண்ணெ ரூ. 1/-

அருமையான புத்தகங்கள்

இல்லறப் படங்கள் 88 கொண்டது. ரூ. 5/- கொக் சாஸ்திரம் ரூ. 3/- காம சூத்திரம் (படங்களுடன்) ரூ. 6/- பெண்களை வசீகரப்படுத்தும் முறை ரூ. 4/. செக்ஸ் அட்லாஸ் (325 படங்களுடன்) ரூ. 5/- செக்ஸ்லைப் (50 படங்களுடன்) ரூ. 4/- செக்ஸ் மர்மங்கள் படங்களுடன் ரூ. 10/- அழகிகள் 50 படங்களுடன் ரூ. 7/- ரதி சாஸ்திரம் ரூ. 3/- நவீனமுறை கர்பத்தடை ரூ. 4/ ஆண் பெண், சேர்க்கை (இரண்டு பாகங்கள்) ரூ. 5/- தேன் நிலவு ரூ. 4/- ரகசியக் காதல் கடிதங்கள் பதிலுடன் ரூ. 4/- வி. பி. சிலவு ஒன்று முதல் 3 புத்தகங்கள் வரை ரூ. 1/25.

GLOBE TRADERS,
(p. p. 500) Post Beat, 19,
ALIGARH

பக : போகட்டும், முத்தம்மா அகப்பட்டா இங்கே நடந்த எதைப்பத்தியும் மூச்சுப் பேச்சு விடக்கூடாது.

நல் : இல் ல...சொல்லமாட்டேன். நான் நிச்சயமாச் சொல்லமாட்டேன்.

போக முயலுகிருன்.

சுரு : சொல்ல மாட்டேங்கறதுக்கு என்ன உறுதி?

நல் : நான் வார்த்தை தவற மாட்டேனய்யா.

சுரு : அதெல்லாம் நம்ப முடியாது. நீ திரும்பி வர்ற வரைக்கும் உனக்கு ஜாமீனுக உன் பையன் இங்கே இருக்கட்டும். ஏதாவது தகராரப் பண்ணேன்னு தெரிஞ்சுது, உன் பையனை நீ பார்க்க முடியாது.

இன் : அப்பா.

நல் : சரி ரூபா, என் இன்பனைப் பத்திரமாப் பாத்துக்கோ. நான் வர்றேன்.

பகதூரும் சுருளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகிருர்கள்.

ரூபா : ம்...நில்லுங்க. ஒரு வேளை முத்தம்மா அகப்பட்டா எதையும் சோல்லாமெ நேர இங்கே கூட்டிட்டு வந்திடுங்க.

நல் : சரி, நான் வர்றேன் ... நான் வர்றேன் கண்ணு.

இன் : அப்பா.

பக : ரூபா!

நல்லான் போய் விடுகிருன்.

காட்சி 8

நல்லான் வருகிருன்

நல்லான் காரில் கிராமத்துக்குக் கிளம்பிப் போகிருன். நாட்டாண்மைக்காரர் ஆள்புரியாமல் திகைக்கிருர்.

நாட் : ம்...யாரு, புதுசா இருக்கே. ஐயா யாரு? எங்கே வந்தீங்க...?

நல் : ம்...ம்....என்னண்ணே, என்னெத் தெரியலையா? இதோ பாருங்க, புரியலையா...? நான்தாண்ணே நல்லான்.

ஒரு : அடேடேடே நல்லான், நாகன், மவன்,

நல் : ஆமாண்ணே, என்ன எல்லாரும் சௌக்கியந்தானே? ஊரெல்லாம் எப்படி இருக்கு...?

மற் : ஊருக்கென்ன, எல்லாம் நல்லா இருக்கு. அது ஒண்ணும் ஓடிப் போயிடல. ம்...மனுஷாளுங்களுக்குத் தான் ஒண்ணும் தலைகால் புரியல்ல. கொடிகட்டி வாழ்ந்துக்கிட்டுக் கடை சில, கூரை குடிசை இல்லாமப் போன வங்க எத்தனையோ பேரு.

வேறொரு : அட இந்தப் பெரிய மனுஷங்கிட்ட என்னண்ணே பேச்சு. அற்பனுக்கு வாழ்வு வந்தான்னு கேள்விப் பட்டதுல்ல.

ஐய : ம்....ம்....ம்....இர்ரு....இர்ரு... என்னடா அங்கே கலாட்டா. யார்ரு...? ஆ நல்லான் என்னடாது...?

நல்லானை யாவரும் அலக்ஷியப் படுத்திக் கேலி செய்யும்போது கோபிக்கும் அவனிடம் முத்தம்மா அங்கிருப்பது பற்றிக் கூறுகிறார் ஐயர். அவன் அவளைப் பார்க்க ஓடுகிறான். வீட்டுக்கு அழைத்து வருகிறான்.

காட்சி 9

புருசனும் பொஞ்சாதியும்

நல்லானின் நாகரீகம் கண்டு துணுக்குறுகிறாள் முத்தம்மா. அவனுடைய நாகரீகம் அவளுக்கு உள்ளூறப் பிடிக்கவில்லை.

முத் : அத்தான்...நான் கேக்குறேனேன்னு கோவிச்சுக்க மாட்டிங்களே?

நல் : என்ன கேக்கப் போறே முத்து...?

முத் : இந்த சிகரெட்டு, நீங்க வச்சிருக்கிற கிராப்பு, போட்டிருக்கிற சொக்கா, இதெல்லாம்?

நல் : ரொம்ப அழகா இருக்குதுல்ல எனக்கு?

முத் : இதெல்லாம் இல்லேன்னாக் கூட அழகுதான் நீங்க எனக்கு. வெளி அழகைவிட, உள்ளழகுதான் முக்கியம்னு மாமா சொல்லுவாங்க. ஏங்க, வந்த நீங்க, கையோட பிள்ளையையும் கூட்டிட்டு வந்திருக்கக்கூடாது? எங் கண்ணு எதிரிலேயே நிக்கிறான், இன்பன்.

நல் : யாரு, இன்பன்தானே? அவனுக்கென்ன, கவலையில்லாமெப் பங்களாவிலே இருக்கான்.

முத் : பங்களாவா?

நல் : உம்!

முத் : எது பங்களா?

நல் : பட்டணத்திலே வாங்கியிருக்கிறேனே. நீ வேலைக்காரியா இருந்தியே அதே பங்களாதான்.

முத் : என்ன?

நல் : ஆமா, பலகோடி நாதருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை எறிஞ்சிட்டு, நிலத்தையும் மீட்டேன். அந்த பங்களாவையும் விலைக்கு வாங்கிட்டு, அவரையும் வீட்டிலே இருந்து வெளியே போகச் சொல்லிட்டேன்.

முத் : அத்தான்! நிலாவைப் பிடிச் சுட்டேன்னு சொல்ற மாதிரில்லே இருக்கு நீங்க பேசுறது? உங்களுக்கு ஏது இவ்வளவு பணம்?

நல் : பணமா? கொள்ளையிட்டேன், கொலை செய்தேன், ஊரை ஏமாத்தினேன்.

முத் : ஐயய்யோ, அப்படி யெல்லாம் நான் சொல்லலீங்க. நீங்க எப்போதும் அந்தமாதிரி பழக்க மெல்லாம் செய்ய மாட்டீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும். இருந்தாலும், நாள் முழுக்க உடல் தேய உழைச்சாலும் ஒரு ரூபாய் பணம் கிடைக்கிறதே குதிரைக் கொம்பாச்சே. இவ்வளவு பணம் உங்களுக்கு எப்படி கிடைச்சுதுன்னு கேட்டேன் அத்தான்.

நல் : இதெல்லாம் என்ன கேள்வி முத்து? எப்படியோ கிடைச்சது. என்ன சொல்றே, எப்போப் புறப்படுறே, பட்டணத்துக்கு? இதோ பாரு முத்து, நான் இப்போ பழய பட்டிக்காட்டு நல்லான் இல்லை. பெரிய பணக்காரன்.

முத் : வேண்டாம் அத்தான்! நீங்க பணக்காரரா இருக்க வேண்டாம். எப்போதும், என் அத்தானாகவே இருங்க. மறுபடியும் என்னை அந்தப் பட்டணத்துக்கு கூப்பிடாதீங்க.

நல் : உம்...பயித்தியம். நீ வேலைக்காரியாயிருந்தியே, அந்த வீட்டிலேயே எஜமானியா இருக்கிறதை என் கண்ணாலே பார்க்கணும். சேற்றிலே பாடு பட்ட செந்தாமரை போன்ற உன் உடம்பு, சிங்காரமா இருக்கணும். ஊரா ரெல்லாம் பார்த்துப் பொருமைப் பட்ற மாதிரி ஒய்யாரமா வாழணும்.

முத் : நீங்க சொல்லச் சொல்ல எனக்குத் தலைசுத்துது அத்தான்.

பட்டணத்துல இருக்கிற பங்களாக் களைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும். மாடி உயரமா இருக்கும். ஆனா அதுல உள்ளவங்களோட மனசுலே மாசும் அதிகமா இருக்கும். ஆடம்பரமா இருப்பாங்க. அதே சமயத்திலே யாரு குடியைக் கெடுக்கலாம்னு திட்டம் போட்டுக்கிட்டு இருப்பாங்க.

நல் : அப்போ இந்தப் பட்டிக் காட்டி லேயே வந்து இருக்கச் சொல்றியா? நாம நல்லா யிருக்கிறதைப் பார்த்து பொருமைப்படுற இந்த நாகரீகமில்லாத நாட்டான்க மத்தியிலே நாம இருக் கவே கூடாது. இந்தக் குப்பங்காட்ல நாம கொஞ்சங்கூட சுகத்தைக் காண முடியாது முத்து, சுகத்தைக் காணவே முடியாது.

முத் : நொண்டிங்குறதுனாலே பெத்த தாயை வேண்டாம்னு சொல் லித் தள்ளிடுவாங்களா அத்தான்? பேசாத ஊமைங்கிறதுனாலே பெத்த குழந்தைங்க வேண்டான்னு சொல்லிடு வோம். தாய்க்குத் தாய், குழந்தைக்கு குழந்தை, உயிருக்கு உயிரா இருந்த இந்த பூமி. இதை விட்டுட்டுப் போக உங்களுக்கு எப்படி அத்தான் மனசு வந்தது?

நல் : ம்... இருட்டினா பயந்து, விடிஞ்சா வேலைக்கு ஓடி இங்கேயே கிடந்து சாகணும்கிறியா?

முத் : இல்லெத்தான், ஆனந்தமா வாழலான்னு சொல்றேன்! என் இன்பம் இங்கதான் எனக்காகக் காத்துட்டு இருந்தது. நம்ப இன்பனும் இங்கேதான் பிறந்தான். சம்பாதிச்சதை இங்கே தான் சந்தோஷமா வச்சிக்கிட்டு இருந் தோம். பறிச்சுக்கிட்டது அந்தப் பட்ட ணம். படாத பாடுபடுத்தினது அந்தப் பட்டணம். அங்கே யிருக்கிற பகட் டான வாழ்வும் வேண்டாம்; அந்த அட்ட காச உலகத்து நடவடிக்கையும்வேண் டாம்.

நல் : ம்...அப்போ, நீ கண்டிப்பா வரமுடியாதா முத்து?

முத் : ஆமாத்தான்! நானும் வரமாட் டேன். நீங்களும் அங்கே போகக் கூடாது. உங்களைக் கெஞ்சிக் கேட் டுக்கிறேன். காலையிலேயே போய் பிள்ளையைக் கூட்டிக்கிட்டு வந்திருங்க. கூழானாலும் சேர்ந்து குடிச்சு, குச்சு வீடானாலும் பயமில்லாம, குப்பங் காடா னாலும் நல்ல மனசோட, நிம்மதியா இருப்போம். என்னத்தான் ஒண்ணுமே பேச மாட்டேங்கறீங்க?

நல்லான் இரவில் யாரும் அறி யாமல் பலகோடி வீட்டின் முன் வருகிறான். நல்லானின் குரல்.

நல் : சரி. உள்ளே போனால் திரும்பி வரமுடியுமா? ம்...முடியாது... முடியாது...இந்தத் திருட்டுப் பசங் களுக்குத் தெரியாம எப்படியாவது இன்பனை அழைச்சிக்கிட்டுப் போற தைத் தவிர வேறு வழியே இல்லை.

நல்லான் மாடியில் ஏறி பையனைத் தூக்கிச் செல்கிறான். ஆனால் சுருள் அவனை மடக்கித்தள்ளி விடுகிறான்.

நல் : ஐயா! சொத்து வேண்டாம், சுகம் வேண்டாம், பங்களா வேண்டாம் என் பத்தரை மாத்துத் தங்கமான உன் னிடத்தில் சேர்ந்தால் போதும், இந்த உலகத்தில் அதைவிட இன்பம் வேறில்லை, என்று ஆசையோடு வந்த என்னை ஆக்ரமித்து விட்டார்களே முத் தம்மா! இந்தப் பாவிகள் எனக்கு இருந்த ஒரே ஒரு நம்பிக்கைப் பாதையையும் நாசமாக்கி விட்டார்களே. இன்பனை அழைத்துக்கொண்டு எப்படியும் வரு வேன், என்று காத்துக் கொண்டிருப் பாயே, என் தங்கமே. எனக்கு ஒன் றுமே புரியவில்லையே. நான் என்ன செய்வேன்? *(படுக்கையில் சாய்கி றான்)* ஆம், அதுதான் சரி, நீ என் னுடன் வராததுதான் நல்லது. முள்ளை, முள்கொண்டு எடுப்போமே! கீராமல், அதைப்போல, இவர்களது வஞ்சனையை வஞ்சகத்தாலேயே வென்றுவிட்டு, வாடா மலரான உன்னிடம் எப்படியும் வந்து சேருவேன். உன் அத்தான் எப் படியும் வந்து சேருவான்.

அப்போது ரத்னம் அங்கே வந்து ரகசியமாக அழைக்கிறான். அவ னிடமே பணத்தையெல்லாம் கொடுத்தனுப்புகிறான் நல்லான். ரூபாவுடன் நல்லான் இருப்பதறிந்து அங்கே வருகிறாள் முத்தம்மா.

முத்தம்மாவை விரட்டுகிறாள் ரூபா. நல்லானும் ரூபாவுக்கு சாதகமாக நடித்து முத்தம்மாவை அங்கிருந்து அனுப்பிவிடுகிறான். விவரம் புரியா மல் மனவேதனையுடன் போகிறாள் முத்தம்மா. ஜப்பான் இது பற்றிக் குறிப்பிட்டு நல்லானை கண்டிக்கி

ருன். முத்தம்மா அங்கிருந்து கொண்டு ஆபத்தில் சிக்குவதைத் தவிர்க்கவே நல்லான் அந்த யுக்தி செய்தான்.

காட்சி 10

சண்டையும் முடிவும்

நல்லானை வீட்டிலேயும் முத்தம்மாவை பரங்கிமலைப் பாழ்வீட்டிலேயும் ஒழித்துக்கட்ட பகதூர், சுருள் யாவரும் முடிவுகட்டுகின்றனர். அன்று முதல் இன்றுவரை துரோகிகளாக மாறியிருந்த சமதர்மமும், ரத்னமும் இதை யறிந்து, நல்லான் குடும்பத்துக்கு உதவுகின்றனர். நல்லான் யாவரையும் அடித்துப் போட்டுவிட்டு, முத்தம்மாவைத் தாக்கப்போகும் பகதூரைத் தொடருகிருன். விவரமறிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களைத் தொடருகிருர். நல்லானை கிணற்றடியில் அடித்துப்போட்டுவிட்டு முத்தம்மாவைத் தாக்கப்போகும் பகதூரை இன்ஸ்பெக்டர் சுட்டுவிடுகிருர். நல்லான் முத்தம்மாவிடம் கதறுகிருன்.

நல் : முத்தம்மா! முத்தம்மா! என்னை மன்னிச்சுடு முத்தம்மா. நியாயமா உனக்குக் கிடைக்க வேண்டிய பணம் எங்கே பறிபோயிடுமோன்னு அதைத் தவருன முறையில் கையாண்டேன். படிக்காத என் கையிலே அந்தப் பணம் கிடைச்சதுனலே, எப்படிப் பயன் படுத்துறதுன்னு தெரியாமப் போயிடுச்சு. பிறத்தியாரைப் பழி வாங்கணுங்கற வேகத்திலே, நீகூட, நான் துரோகம் செய்கிறேன்னு நினைக்கிற அளவுக்கு இப்படியெல்லாம் ஆயிடுச்சு முத்தம்மா.

முத் : துரோகமா? எனக்கு எப்போதுமே நீங்கள் செய்ய மாட்டீங்களே அத்தான். எனக்குத் தெரியாதா உங்களை?

சம : இந்தா இந்தா! இங்கே பேசறதுக்கு நேரமே கிடையாது. மாமா! வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போங்க. இந்தாம்மா.

பல : வாம்மா போகலாம்.

சம : இன்ஸ்பெக்டர் சார், நல்ல உருவம் ஒண்ணு கொடுத்திருக்கிறேன். இதை அழகா மியூசியத்திலே எடுத்து வைக்கணும்! கொலைகாரப்பயலே கொலைக்காரப்பயலே! நல்லா இருப்பியாடா நீ?..ஓ...செத்துப் போயிட்டானு.

போகிருர்கள். பலகோடி வீட்டில் அவரும் மற்றவரும் இருக்கின்றனர்.

நல் : ஆமாங்க, நான் என்னுடைய அறியாமையினலே ஏதாவது தவறு செய்திருந்தாலும் உங்க பழைய நாகன் மகன் நல்லான்னு நெனச்சு மன்னிச்சுடுங்க எஜமான்.

பல : எஜமான், ஏழைங்கிற வார்த்தைக்கு இனிமேல் இடமில்லை நல்லான். முத்தம்மா! இந்த பங்களாவிலே நான் சீமானுக இருந்து பணத்தாசையினலே சீரழிஞ்சது போதும். இருங்க நானும் உங்களோட வந்துட்றேன்.

ஜப் : அ ... ஆ...அ...எல்லோருமே இந்த பங்களாவை விட்டுப் போயிட்டா இந்த பங்களாவோட கதி ... அப்புறம் எனக்கு வழி?

சம : இந்த மாதிரி பங்களாவைச் சரி பண்றதுக்கு இந்த சமதர்மம் இருக்கேன். மேலே ஒரு ஸ்கூல், கீழே ஒரு ஆஸ்பத்திரி. மேலே கலா மானேஜர். கீழே அடியேன் மானேஜர். இந்த ரெண்டுக்கும் செக்ரெட்டரி ரத்னம். காரணம் அவருக்கு குழந்தை குட்டி இல்லை.

ஐயர் சுந்தரியுடன் அங்கே வருகிருர்.

ஐய : யார்ரா சொன்னது? ... டேய் ரத்னம்! நீ வந்ததிலிருந்து உன் ஆம்படையா மூணுமாசமாம். அதோ வந்திருக்கா.

ரத் : அப்படியா சுந்தரி ... சுந்தரி... இதுக்கெல்லாம் காரணம் லேகியம்; தெர்லே.

எல்லோரும் ஊர் திரும்புகிருர்கள். அவர்கள் பொன்னு விளையும் பூமியிலே உழைக்கப் பிறந்தவர்களல்லவா? பொன் விளையும் பூமியை விட பணம் உயர்வைத் தந்துவிடாது என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்த நல்லான் மனைவி முத்தம்மாவின் பேச்சை இனி தட்டிப் பேசுவானு என்ன?



இரும்புத்திரை

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஜெமினியிலிருந்து ஒரு சமூகப் படம் வெளிவருகிறது. தொழிலாளி முதலாளி இவர்களிடையே இருக்கும் உறவு முறைபற்றிய கதையமைப்பு கொண்ட இப்படம் ஏராளமான பொருட் செலவில் மிக பிரம்மாண்டமானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டின் புகழ்பெற்ற நடிகர்

களான, 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், எஸ். வி. சுப்பையா, தங்கவேலு, வைஜயந்திமாலா, பி. சரோஜாதேவி, இவர்களுடன் வசுந்தராதேவி, வனஜா. முதலியோரும் இப்படத்தில் நடித்து வருகிருர்கள்.

பொங்கல் புதுநாளன்று வெள்ளித்திரைக்கு வரும் இந்த படத்தை எஸ். எஸ். வாசன் டைரக்ட் செய்து வருகிருர்.



டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANTOL
TOILET POWDER
T.S.R'S
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

PSR
விஸ்வசாந்தியின்
பாலநாகம்மா
காட்சிகள்



விஸ்வசாந்தியின் ''பால நாகம்மா'' விரைவில் திரைக்கு வரப்போகிறது. என். டி. ராமராவ், ரங்க ராவ், அஞ்சலிதேவி, ராஜ சுலோசன, ரேலங்கி, சூர்யகலா முதலியோர் நடித்திருக்கிருர்கள். ரங்க ராவ் இதிலே பயங்கர மந்திரவாதியாகத் தோன்றி மிகச் சிறப்பாக நடித்திருக்கிருர். நாடறிந்த கதை பாலநாகம்மா.



கேள்வி-பதில்

கே. கண்ணன், மதுரை

சினிமாவின் சக்தி எத்தகையது?

ரயில் பெட்டியின் கதவை உடைத்து, திருடிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட ஒருவன், போலீசுக்குக் கொடுத்த வாக்கு மூலத்தில் 'ஒரு ஆங்கிலப் படத்தைப் பார்த்தே இதை நான் கற்றுக் கொண்டேன். இதற்காக மூன்று முறை பம்பாயில் அப்படத்தைப் பார்த்தேன்' என்று சொல்லி யிருக்கிறான். சினிமாவின் சக்தி இப்போது புரிகிறதா?

காதல் எங்கே பிறக்கிறது?

சினிமாவைப் பொருத்தவரை அது வினோதமான சூழ்நிலையில் பிறக்கிறது. சேற்றை அள்ளி முகத்தில் குதிரை அடிக்க எம். கே. ராதாவுக்கும் - ராஜகுமாரிக்கும் 'சந்திரலேகா'வில் காதல் பிறந்தது; தபால் பட்டுவாடா செய்யப் போய் அது காதலாக சிவாஜி கணேசனுக்கும் - பத்மினிக்கும் இடையே முளைத்தது, 'புதைய'லில். குளத்தில் விழுந்தவனைக் கரையேற்ற ஸ்ரீராமுக்கும்-குமாரிக்கும் காதல் மூள்கிறது, 'யானை வளர்த்த வானம்பாடி' படத்தில். இப்படியாக காதல் படவுலகில் பிறக்கிறது!

ச. சி. லிங்கய்யா, சத்தியமங்கலம்

ஏராளமான நடிகர்களைக் கொண்ட நாடு எது?

அமெரிக்காவில்தான் ஏராளமான நடிகர்கள் இருக்கிறார்கள்.

புலித்தேவன் கட்டபொம்மன் பிரச்னை தற்போது அவசியம்தானா?

சிலருக்கு அது அவசியத் தேவையாக இருக்கிறது.

ஷேக் முகம்மது, இலங்கை

'கல்யாண பரிசு' ஸ்ரீதரின் டைரக்ஷனில் வளரும் படங்கள் எவை?

மீண்ட ஸ்வர்கம், சியாமளி, தேன் நிலவு, கல்யாண பரிசு - ஹிந்தி, தெலுங்கு, பிரபுராம் தயாரிப்பு, தீபச்சுடர் முதலியன.

நா. சுந்தரம், பனங்காட்டங்குடி

கமால் சகோதரர்களில் 'தெய்வப் பிறவி'யில் சிவாஜி கணேசனுடன், எஸ். எஸ். ஆர். நடித்து வருகிறாரா?

படத்தில் சிவாஜியின் மைத்துனராக வருகிறார் அவர்.

சிட்டடெல் ஸ்டுடியோவில் தயாராகி வரும் "விஜயபுரி வீரன்" படத்தில் காதல் ஜோடியாக வரும் ஆனந்தன் - ஹேமலதா.

அசு. அப்துல்ஹை,
அரகண்ட நல்லூர்

அண்ணியில் நடித்த சேது எங்கே சார்?

படவுலகம் கைவிட்டு விட்டது; ஆனால் ஒரு பத்திரிகை காரியாலயம் பிடித்துக் கொண்டுவிட்டது!

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பது என்ன?

'குறள்' போல விஷயம் இருக்க வேண்டும் என்பதுதான்!

திரைப்பட விமர்சகர்களில் எட்டுப் பேரைத் தேர்ந்தெடுத்து ஒரு படம் தயாரிக்கச் செய்தால்?

கழுதையைச் சுமந்த கிழவன்-பையனின் கதையாகி விடும்!

பி. எம். அமீர், பொள்ளாச்சி

சினிமாவினால் சில குடும்பங்கள் அழிந்து போவதாகச் சொல்வது சரியா?

பல குடும்பங்கள் பிழைக்கின்றன என்பதுதான் உண்மை.

சரோஜாதேவி எப்போது அமெரிக்கா செல்வார்?

அமெரிக்கப் படத்தில் நடிக்க அழைப்பு வரும்போது. சொந்த செலவில் அவர் செல்ல விரும்ப மாட்டார். பணத்தின் மதிப்பை அறிந்தவர்களில் அவரும் ஒருவர்.

நடிகர் வி. ஆர். ராஜகோபால் திருமணமானவரா?

அதுமட்டுமல்ல; 'அப்பா பட்டம்' பெற்றவரும் கூட!

வி. ராகவன், பெங்களூர்

வடஇந்திய நடிகை சந்தியா சாந்தாராமின் படங்களில் மட்டுமே நடிக்கக் காரணம் என்ன?

"என் வாழ்நாளில் நான் விரும்பியது இரண்டு. ஒன்று நடிகையாக வேண்டும்; இரண்டு சாந்தாராமின் படங்களில் நடிக்க வேண்டும். இரண்டும் நிறைவேறிய பின், நான் ஏன் மற்றவர்கள் படத்தில் நடிக்க ஆசைப்பட வேண்டும்?" என்று கேட்கிறார் சந்தியா.

ஜனக் ஜனக் பரமசாமி,
அம்பத்தூர்

தமிழ் நாட்டில் அதிக பணம் வாங்கிய நடிகர் சிவாஜிதான் என்று நான் சொல்லுகிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ஒப்புக்கொள்கிறேன். மற்ற கதாநாயகர்களை விட அவருக்கு அதிகப் படங்கள் இருக்கின்றன அல்லவா?

நாகேஸ்வரராவின் அடுத்த தமிழ் தயாரிப்பு என்ன?

ஒரு வங்கக் கதையை அடிப்படையாகக் கொண்டது.

வி. முனுசாமி,
அலமேலுமங்காபுரம்

எம். ஜி. ஆர். கால் எலும்பு முறிவுற்று படுத்திருந்தபோது, சிவாஜி கணேசன் அவரை சென்று பார்த்தாரா?

பார்த்தார் - மருத்துவ மனையில்.

'இவன் எங்கே இங்கே வந்தான்?' என்று அவள் திடுக்கிட, அந்த ஆள் கிழவரின் பிடியில் சிக்கித் தவிக்கிறான்! ஸ்ரீகணேஷ் மூவிடோன் "வைஜயந்திமாலா"வில் எம். ஏ. கணபதி, ராமராவ், எம். என். ராஜம்.

துரை. முருகேசன், காரமடை

திரை உலக ரசிகப் பெருமக்களுக்குக் கிடைத்திருக்கும் புத்தாண்டுப் பரிசு எது?

திரைப்பட விழாக்களுக்கு தமிழ்ப் படம் செல்வது.

'1950 — 60' பற்றி கனவு கண்ட கலைவாணர் இன்று நம்மிடையே இருந்திருந்தால்......?

தன் கனவு பகற்கனவாகிப் போனதன் காரணங்களை விளக்கிப் பாடி ஒரு படத்தில் நடித்திருப்பார்!

''நான் வியாபாரியைப்போல் தோற்றமளித்தாலும் என் கத்தியால் முன் பக்கம் குத்தினுல் முதுகுப் பக்கம் வந்துவிடும்'' என்று சூசகமாகக் கூறுகிறுர் இவர். ஜுபிடர் பிக்சர்ஸின் ''எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' படத்தில் ஜெமினி கணேஷ்.

என். எஸ். நடராஜ், ராஜ்காட்

'ஓர் இரவு' படத்தில் நடித்திருப்பது கே. ஆர். ராமசாமி - லலிதாவா? அல்லது ஏ. நாகேஸ்வரராவ் - பத்மினியா?

நான்கு பேர்களும் 'ஓரிர'வில் வருகிறுர்கள். பத்மினி லலிதாவுடன் ஒரு நடனத்தில் மட்டும் இதில் தோன்றுகிறுர்.

வி. நாராயணன், புத்தூர், திருச்சி

நான்மட்டும் நடிகனுனல் என்று சிலர் பிதற்றுவது ஏன்?

அம்மாதிரி வரமுடியாது என்று தீர்மானமாகத் தெரிவதால்தான்!

எம். ஜி. ஆர். தருமனுகவும், சிவாஜி-பீமனுகவும், ஜெமினி - அர்ஜுனனுகவும், பிரேம்நசீர் - நகுலனுகவும், எஸ். எஸ். ஆர். சகாதேவனுகவும் நடித்து பாரதத்தை வெளியிட்டால்...?

தூக்கம் கலைந்த பின் கனவில் கண்ட காட்சிகளும் மறைந்துவிடும்.

எஸ். ஸ்டேன்லி துரைராஜ், கோவை

அயல் நாடு சென்ற என் அபிமான நடிகை மாலாவைப் பற்றியோ அல்லது புகைப் படமோ 'பேசும் பட'த்தில் வெளி வரவில்லை? இது உங்கள் ஓர வஞ்சனை தானே?

அல்ல. மாலா ஒரு கிணற்றுத் தவளையாக வைக்கப்பட்டிருப்பது தான்.

டி. எஸ். சுகவனம், சேலம்

'நவ்ரங்'கில் சந்தியா ஆடும் நடனங்கள் எந்த வகையைச் சேர்ந்தவை?

'முர்தகிருத்தியா' - என்ற வகையைச் சேர்ந்தவை.

'பேசும்-படம்' எவ்வாறு ஒரு ஆண்டின் சிறந்த நடிக நடிகையரைத் தேர்ந்தெடுக்கிறது?

நமது ஆண்டு மலரிலேயே அதை விளக்கியிருக்கிறேமே.

இவ்வருடம் வசூலில் சிறந்து விளங்கிய படங்கள் எவை?

'க' வில் ஆரம்பிக்கும் இரண்டு படங்கள்!

'பேசும் படம்' கேள்வி பதில் பகுதிக்கு ஒருவர் எத்தனை கேள்விகள் எழுதி அனுப்பலாம்?

சென்ற மாதம் மட்டும் ஒருவர் நாற்று ஐம்பத்தேழு கேள்விகளை பம்பாயிலிருந்து அனுப்பியிருக்கிறுர்.

வி. தேவநாதன், மதுரை

சாவித்திரி தன் கணவரை எப்படி அழைக்கிறார்?

'அத்தான்' என்று.

படப்பிடிப்புக்குச் சரிவர வராமல் தொந்தரவு கொடுக்கும் சில நடிகர்கள் தமிழ்ப் படவுலகில் இருப்பதுபோல் சீரான திட்டங்கள் பல கொண்ட ஹாலிவுட் படவுலகிலும் இருக்கிறார்களா?

ஹாலிவுட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ்ப் படாதிபதிகளைப் போல நடிகர்களைக் கண்டு பயந்து, அடங்கி நடக்கும் படாதிபதிகள் அங்கும் இருக்கிறார்கள். மர்லின் மன்ரோ என்ற நடிகை இதில் முதல் இடம் வகிக்கிறார். ஆரம்ப காலத்தில் ஒழுங்காகப் படப்பிடிப்புக்கு வந்த இவர், நாளடைவில் நேரம் கழித்து வர ஆரம்பித்தார்; எடுத்த காட்சிகளையே, டைரக்டர் திருப்திகரம் என்று சொல்லியும், எடுக்கும்படி வற்புறுத்தினார். காரணம் காட்டாமல் சகநடிகர்களுடன் சண்டை பிடிக்கவும் ஆரம்பித்து விட்டார் அவர். இவை யெல்லாம் அவரது சமீபத்திய படமான 'ஸம் லைக் இட் ஹாட்' என்ற படப்பிடிப்பின்போது நடந்தது.

இவர்கள் இருவருமே தமிழ் நாட்டின் மானம் காக்கப் புறப்பட்டவர்கள் அல்ல! —ஸ்புட்னிக் பிக்சர்ஸாரின் "வீரமங்கை வேலுநாச்சியார்" படத்தில் வளையாபதி முத்துகிருஷ்ணன், கே. கண்ணன்.

அமெரிக்க விஜயத்தின்போது, ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் ஹாலிவுட்டுக்குப் போயிருந்தாரா?

போனதுமட்டுமல்ல; 'கேன் கேன்' என்ற படத்தின் நடனக்காட்சி படமாக்கப்படுவதையும் பார்த்தார். குருஷ்சேவ் பார்ப்பது போன்ற இக்காட்சி படத்திலும் வரப்போகிறது.

ஞானசிகாமணி, திருமணி

தற்சமயம் சர்க்கரை கிடைக்காத காரணத்தால் என் வீட்டில் 'டீ' போடுவது இல்லை. ஆனால் என் மகன் ஒரே தொந்தரவு செய்கிறான். எனவே ஹாஸ்ய நடிகர் தங்கவேலுவிடம் சொல்லி, 'கல்யாணபரி'சில் அவர் விற்ற சீனியும் பாலும் கலந்துள்ள 'சூப்பர்-டீ'யை அனுப்பி வைக்கச் சொல்லுகிறீர்களா?

சீனி கிடைக்காத காரணத்தால், சீனி கலந்த 'சூப்பர் டீ'யின் விலையை தங்கவேலு ஏற்றி விட்டாரே. அந்த விலை கொடுத்து உம்மால் அதை வாங்க முடியுமா?

ஐ. ஆர். சுப்புராமன், ஹைதராபாத்

இந்தியாவில் திறமையாகவும் புரட்சிகரமான கருத்துக்களைப் பரப்பியும் வெற்றிகரமாக ஓடக்கூடிய படங்களை வெளியிட்டு புகழை அடையும் படங்கள் எம்மொழியில் அதிகம் வருகின்றன?

ஹிந்தி மொழியில் தான். வருத்தத்தோடு தான் இந்த உண்மையைச் சொல்லவேண்டியிருக்கிறது.

'ராக் - என் - ரோல்' நடனங்கள் பரதநாட்டிய நாட்டிற்கு அவசியந் தானா?

கவலைப்படாதீர்கள். வந்த சுவடு தெரியாமல் அது தானாகவே மறைந்து விடும்.

ராதாகிருஷ்ணன், பம்பாய்

எம். எஸ். திரௌபதி எங்கே காணோம்?

சினிமாவின் 'தாயகம்' நாடகம் என்ருல், அவர் பிறந்த வீட்டை தஞ்சமடைந்து விட்டார் என்று சொல்லலாம். இப்போது அவர் சில படங்களில் நடித்து வருகிருர்.

நடராஜ் - சகுந்தலா ஜோடி எங்கே?

நடராஜ் சைக்கிளில் போய்க் கொண்டிருக்கிருர். சகுந்தலாவை நான் பார்த்து நீண்ட நாட்களாகின்றன.

'பார்த்திபன்' இன்னுமா 'கனவு' காண்கிருன் ?

பூபாளம் பாட வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!

'சிவகாமி' படத்தில் பாகவதர் பூராவும் நடித்து முடித்து விட்டாரா?

இல்லை. அவர் நடிக்க இருந்த சில காட்சிகளை, மாற்றியமைத்து படமெடுத்து வருகிருர்கள்.

தமிழ் நாட்டின் ஜான்சி ராணி யார்?

'வேலு நாச்சியார்' என்று ஸ்புட்னிக் பிக்சர்ஸார் சொல்கிருர்கள்!

மின்னல் தயாரிப்பு என்ருல் என்ன?

பெரிய நக்ஷத்திரங்களைப் போட்டு, நீண்டகாலம் காத்திருந்து படங்களை எடுப்பதற்குப் பதில், புதிய நடிகர்களை வைத்து, விரைவில் வெளிவரும் படங்களைத்தான் மின்னல் தயாரிப்பு என்று சொல்லுகிருேம். ஆனல் இப்போதெல்லாம் மின்னல் தயாரிப்பு படங்கள்கூட பெரிய படங்களைப் போலத்தான் நீண்ட காலம் கழித்து வருகின்றன.

கட்ட பொம்மன் படத்தை நேரு பார்த்தாரா ?

இன்னும் பார்க்கவில்லை.

'அவள் யார்' படத்தில் என்ன புதுமை ?

நீண்ட வசனங்கள் பேசாமல், துண்டு துண்டாக ஆங்காங்கே பேசி, பின்னணியில் இசை முழங்காமல், சிவாஜி கணேசன் அறுநூறு அடிகளுக்கு மேல் ஒரு காட்சியில் உணர்ச்சியைக் காட்டி நடிக்கிருர். ஒரு நடிகர் இத்தனை அடிகளில் வருவது தமிழ்ப் படவுலகிற்கு ஒரு புதுமை தானே ?



''என்னை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று கும்பிடு போடுகிருரா தாடிக்காரர்? ஆர். எஸ். ஆர். மூவிடோனின் 'தர்மபத்தினி'யில் மனேகர் - சகஸ்ரநாமம்.

89697

ச. ஜெயராமன், கடலூர்

சிவாஜி கணேசன் தான் நடிக்கும் எல்லாப் படங்களில் அவரது நண்பர் ஒருவருக்கு சந்தர்ப்பம் பெற்றுத் தருகிருர். யார் தெரியுமா அவர்?

சந்தர்ப்பத்தைப் பெறுபவரானல் அவரும் 'ச' என்ற நடிகராகத்தான் இருக்க வேண்டும்.

கே. எஸ். சீதாராமன், பரமத்தி

தமிழ்ப் படவுலகின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

நீங்கள் கவலைப் படும்படியாக நிச்சயம் இருக்காது!

தமிழ்ப் படவுலகிலே வாரிக் கொடுக்கும் வள்ளல் யார்?

வள்ளல் இல்லை. வள்ளல்'கள்' தான் இருக்கிருர்கள்!

சம்பு-ராது, பம்பாய்

'கௌரவ நடிகர்' என்ருல் என்ன?

படத்திற்குத் தரப்படும் 'டானிக்' என்று பெயர்.

சூர்யகுமாரி எந்த ஆங்கிலப் படத்தில் வருகிருர்?

இந்தியாவில் தயாரான 'பம்பாய் பீஸட்' என்ற படத்தில் அவர் நடித்தார். அந்தப் படம் இன்னும் பெட்டிக்குள்ளேயே இருக்கிறது.

ராஜனும் லக்ஷ்மியும் மகிழ்ந்திருக்கிருர்கள், ஒரு தோட்டத்திலே! வீட்டார் அறியாமல்தான்! - சுபாஷ் மூவீஸின் ''ஆளுக்கொரு வீடு'' படத்தில் சத்யன் - விஜயலக்ஷ்மி.

புரியும் வகையில் கதையை எடுத்துச் சொல்வதுதான் திரைக் கதாசிரியரின் வேலை. வித்தியாசத்தை நீங் களே தெரிந்து கொள்ளலாமே.

வசனகர்த்தா தமிழ் வாணனை பற்றி உங்கள் கருத்து என்ன?

சாமர்த்தியக்காரர்!

ஆர். மாரிஸ், பாண்டிச்சேரி

பாலய்யாவுக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள்?

ஒரு வீடு போதா தென்று இரண்டு வீடு வைத்துக் கொள்ளும் அளவுக்கு இருக்கிருர் கள்!

தங்கவேலு என்ன செய்து கொண்டிருக்கிருர்?

படப்பிடிப்பு போக மீதி நேரத்தில் தன் குழந்தையுடன் விளையாடி வருகிருர்.

நாவர்தாசன், அரகண்டநல்லூர்

திரையுலகில் 'இமிடேஷன்' என்பதற்கு என்ன சொல்லலாம்?

'மேக்-அப்' என்று சொல்லலாம்.

கவிஞர் கண்ணதாசன் கூடவா படத்தில் நடிக்க இருக்கிருர்?

நடித்திருக்கிருரே!

பண்பிலிருந்து பிறப்பது எது?

நல்ல செயல்கள்.

மாமியார் வீட்டை சொர்க்கமாக எண்ணுபவன் யார்?

திறமை இல்லாத ஆண்.

கு. ரா. கிருட்டினன், சிதம்பரம்

பாகவதர் - கலைவாணரைச் சந்தித்து என்ன பேசி யிருப்பார்-அந்த உலகில்?

'நன்றி கெட்ட உலகம்' என்று மதுரம் ஒரு படத்தில் பேசி யிருக்கும் வசனங்களை, பாகவதர் ஒப்பித்திருப்பார்.

நாவலாசிரியருக்கும் திரைக்கதை ஆசிரியருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தான் நாவலைப் படிப்பவர்கள். அவர்களுக்குப் புரியும் வகையில் நாவலாசிரியர் எழுதினல் போதும். ஆனல் படிக்காத பாமரர்களுக்கும்

புளுலாம்ப், மதுரை

திரைப்பட விளம்பர ஆர்ட்டிஸ்ட் ஏ. கே. கோபால், பிரபல ஆர்ட் டைரக்டர் ஏ. கே. சேகரின் மைந்தரா?

ஆமாம்.

திறமை வாய்ந்த, தலைசிறந்த கலைஞர்களை நாம் பறிகொடுத்துக் கொண்டே வருகிருேமே, இதைத் தடுக்க வழியே கிடையாதா?

உண்டு. இறந்த கலைஞர்கள் செய்த தவறுகளைப் புரிந்துகொண்டு அவற்றைச் செய்யாமல் இருப்பதன் மூலம்.

வார ஓட்டம், வசூல் இவற்றைக் கொண்டு மதிப்பிடாமல் கலை அம்சங்களை அடிப்படையாக வைத்து மதிப்பிட்டால் 'நாடோடி மன்னன்', 'கட்டபொம்மன்' இவற்றில் சிறந்த படம் எது?

நாடோடி மன்னன்.

B & W NEGATIVE

POSITIVE

AGFACOLOR

SOUND

DUPLICATING

Agfa

35mm and 16mm Raw Cinefilm for all purposes

AGFA PICTURE NEGATIVE FILMS.
PANKINE K and ULTRARAPID

AGFA SOUND RECORDING FILMS:
Tf 4 and Tf 6

AGFA FINEGRAIN RELEASE POSITIVE FILM

AGFA DUPLICATING NEGATIVE FILM
AGFA DUPLICATING POSITIVE FILM

"AGFACOLOR" Negative Type B. 333 & G. 334
"AGFACOLOR" Positive Type 4. 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

For particulars please write to:
The Sole Importers & Distributors

REGE CINEFILMS PRIVATE LTD.
198, Jamshedji Tata Road, Bombay-1

Branches:
31, Chittaranjan Avenue, Calcutta-13
202, Mount Road, Madras-2

ஆதவனைக் கண்டு தாமரை
மலருவது உண்மையானால் - மழை
முகில் கண்டு மயில் தோகை விரிக்கும்
என்பது உண்மையானால் - இதோ
உங்கள் மதிமுகம் கண்டு என் இதயமலர்
விரிகிறது, அத்தான்!
மதுரம் பிக்சர்ஸ் "மீண்ட சொர்க்கம்"
படத்தில் ஜெமினி கணேசன் - பத்மினி.

தபால் பெட்டி

*ஊக்கம் தேவை

பிரத்தியேகக் கண்ணாடியின்றியே திரையில் உருவங்களை முப்பரிமாணத்தில் காணலாம். ''எக்ஸிஸ்டாவிஷன்'' என்ற இந்த நூதன முறையை பம்பாய் அனுபம் சித்ராவைச் சேர்ந்த எம். எஸ். மிர்ஸா என்ற தொழில் நிபுணர் கண்டு பிடித்திருக்கிறுர் என்ற செய்தியைப் படித்தேன்.

நாம் இங்கே நக்ஷத்திர உபாசனை செய்து கொண்டிருக்கிறோம். நாம் தொழில் நுணுக்க நிபுணர்களைப் பெருமளவில் ஊக்குவிக்க வேண்டியது மிகமிக அவசியம். நக்ஷத்திரங்களைப்போல் இவர்களும் படவுலகிற்கு உயிர் நாடியாகும். நக்ஷத்திரத்தால் வருமானம் என்றால் தொழில் நிபுணரால் தரம், கலை உயர்வு ஆகும். நாம் மேனாட்டுப் படங்களுடன் போட்டியிடுவதானால் அவர்கள் முதலில் கவனிப்பது கலை நுணுக்க அம்சம்தான். நாம் கலை நுணுக்கத்தில் சிறந்த படங்களைத் தயாரிக்கும் போதுதான் மேனாட்டுப் படங்களுடன் போட்டியிட முடியும். ஆகவே கலை நுணுக்கத் துறையிலுள்ளோருக்கு வசதி செய்து தர வேண்டும்.

இதயன்,
தொரப்பாடி.

**சிலை வேண்டாம்

கலைஞர்களில் பலர் மரணமடைந்ததும் சிலை வைப்பது பற்றிப் பேசுகிறார்கள், மற்ற கலைஞர்கள். இது வேண்டாம். காலஞ்சென்ற கலைஞர்கள், மக்கள் மனதிலே இடம் பெற்றவர்கள். அவர்களை யாரும் மறந்து விடுவதில்லை. இறப்பவர்களின் குடும்பங்கள் அவதியுறுகின்றன. அவர்கள் புதுவாழ்வு பெற திட்டம் வகுக்க வேண்டும். தென்னிந்திய நடிகர் சங்கம் ஒரு நிதியை ஏற்படுத்தி, காலஞ் சென்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு உதவ வேண்டும். நடிகர் சங்கத்தின் பெயரில் ஒரு ''ஸ்காலர்ஷிப்'' ஏற்படுத்தி, காலஞ் சென்ற கலைஞர்களின் மக்கள் படித்து முன்னேற இதிலிருந்து உதவ வேண்டும். சிலை வைத்து விட்டு, கலைஞர்களை அத்துடன் மறப்பதைவிட, குடும்பத்தினருக்கு உதவுவதே நல்லது.

கனக் சுப்பிரமணியம்,
சென்னை.

நடிகனும் நாடும்

நடிகன் நாட்டின் பிரஜைகளில் ஒருவன். நாட்டு நலத்தில் நாட்டங் கொண்டவன். தனக்கென ஒரு அரசியல் கொள்கையை வகுத்துக்கொள்ள அவனுக்கு உரிமையுண்டு. ஆனால் அரசியல் ஆர்வம் காரணமாக தனிப்பட்ட அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் கலையில் புகுத்துவது தவறு. கலை, உலக அடிப்படையில் அரசியலுக்கு அப்பால் நின்று வளரக்கூடியது. ஹாலிவுட் நடிகர்கள் கிரேக்க வீரனாகவும், அரபு நாட்டவனாகவும் பிரஞ்சு மன்னனாகவும் நடித்து, அந்தந்த நாட்டுச் சூழ்நிலையைப் பிரதிபலித்து உலக அரங்கிலே புகழ் பெறுகிறார்கள். தமிழ்நாட்டு நடிகர்களும் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்க வேண்டும். கலைத்திறன் வெளிப்பட வேண்டுமானால் எதனாலும் அதற்குக் கட்டுப்பாடு இருக்கக்கூடாது. அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நடிகர்கள் இதை

---

* முதற் பரிசு ரூ. 15.   ** இரண்டாம் பரிசு ரூ. 10

மனதில் கொள்வது கலையுலகிற்கு அவர்கள் செய்யும் மகத்தான பணியாகும்.

ரிச்சர்ட் ஜே. தாமஸ்,
சென்னை.

மந்திரியின் யோசனை

அண்மையில் ஒலிபரப்பு இலாகா மந்திரி கனம் கேஸ்கர், பிற்பகல் காட்சிகளால் மாணவர்கள் வகுப்புகளுக்கு ஒழுங்காகச் செல்வதில்லையாதலால் பகல் காட்சிகளைத் தடை செய்யுமாறு ராஜ்ய சர்க்கார்களுக்கு யோசனை கூறியிருப்பதாகச் செய்தி படித்தேன். பள்ளிக்கு மாணவர்கள் செல்லாமல் தினசரியா பகல் காட்சி பார்க்கிறார்கள்? அவர்கள் நலனில் பெற்றோருக்கும் பள்ளிகளுக்கும் அக்கறையில்லையா? பள்ளிக்கு காரணமின்றி வராவிட்டால் ஆசிரியர்கள் கடுமையாகத் தண்டிக்கலாமே! இந்த மாணவர்கள் இரவுக் காட்சிகளுக்கு மட்டும் போக மாட்டார்களா? ஆகவே மாணவர்கள் பள்ளிக்குப் போகாததற்கும் பகல் காட்சிக்கும் சம்பந்தமில்லை. புத்தகங்களைவிட படங்கள் நல்ல பிரசார சாதனம் என்றுதானே செய்திப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன? தொழிலுக்கு அர்த்தமில்லாத கட்டுப்பாடுகள் விதிப்பதை விட்டு, நல்ல போதனைப் படங்களை எடுக்க அரசாங்கம் உற்சாக மூட்டலாமே! "உங்கள் நண்பன்" போன்ற போதனைப் படங்களை சினிமா நடிகர்களைக்கொண்டு தயாரிக்கும் அரசாங்கம் படத் தொழில் வளர்ச்சிக்கு இடைஞ்சல் செய்வானேன்?

எல். ஆர். ஸ்வாமி,
திருகோகர்ணம்.

வேண்டாம் ஸ்டன்ட்!

இப்போது பெரும்பாலான படங்களில் ஸ்டன்ட் காட்சிகள் இடம் பெறுகின்றன. சமூகப் படமானாலும், சங்கீதப் படமானாலும், புராண சரித்திரப் படங்களானாலும் ஸ்டன்ட் காட்சிகள் இடம் பெறுகின்றன. எப்படியும் கதாநாயகன் ஒருவனே இருபது பேரை அடித்து நொறுக்குகிறான்! கண்ணாடி, மேஜை, நாற்காலி, புஷ்பத்தொட்டி எல்லாம் தூள்தூளாகின்றன. இந்தக் கண்ணராவி, அர்த்தமில்லாமல் பெரும்பாலான படங்களில் இருக்கிறது. கதைப்போக்குக்கு ஏற்றதாக இருந்தால் மட்டுமே ஸ்டன்ட் காட்சிகள் இடம் பெறலாம். அல்லாமல்,



இந்த இரண்டு பேரும், அவ்வளவு நல்லவர்களல்ல என்றுதான் தோன்றுகிறது. மிதிலா பிக்சர்ஸ் பூரண உலக உரிமை பெற்றுள்ள ஆர்.எஸ்.ஆர். மூவிடோனின் "தர்ம பத்தினி"யில் டி. எஸ். பாலய்யா, எம்.என். நம்பியார்.

புகுத்த வேண்டும் என்பதற்காகவும், 'ஸ்டன்ட்' நடிகர் கதாநாயகனாக நடிப்பதால் அவசியம் இருந்தாக வேண்டும் என்பதற்காகவும் இவற்றைப் புகுத்துவது ஏற்றதல்ல.

அ. செல்வராஜ்,
யாழ்ப்பாணம்.

நன்றி கெட்ட உலகம்

எம். கே. தியாகராஜ பாகவதர் காலமாகி விட்டார். அவரது உடல் மறைந்தது. ஆனால் புகழ் அழியாதது; அழிக்க முடியாதது. "பாகவத

சோல் ஏஜெண்டுகள் :

தாதா & கோ.,

86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை - 3.

ரைப்போல் உயர்வுடன் வாழ்ந்த கலைஞன் யாருமே கிடையாது. இன்று மிகப் புகழ் பெற்ற நடிகர்களின் மகத்தான படங்கள் ஐம்பது நாள் ஓடிவிட்டால் தியேட்டர்காரர்கள் பிரமாதப்படுத்தி விடுகிறார்கள். இதே தியேட்டர்கள் பலவற்றில் பாகவதரின் படங்கள் திரையிடப்பட்டால் தியேட்டர் முதலாளிகள் பல மாதங்கள் வரை அடுத்த படம் பற்றிக் கவலைப்படாமலிருப்பார்கள். அப்படியெல்லாம் பாகவதர் படத்தை ஒட்டிக்கொழுத்த பெரும்பாலான தியேட்டர்காரர்கள், அந்த மாபெரும் கலைஞன் மறைந்ததற்கு துக்கம் கொண்டாட ஒரு காட்சியைக் கூட நிறுத்தவில்லை. இது நன்றி கெட்ட செயலல்லவா? நடிகர் சங்கம் இதற்காக முயற்சி எடுக்க வேண்டாமா?

எம். என். வெங்கடராமன்,
மதுரை.

நல்ல தீர்ப்பு!

சமீபத்தில் "திரைப் படங்களில் பிச்சைக்காரர்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளை அனுமதிக்க முடியாது" என்று ஒரு மந்திரி கூறியிருக்கிறார். இவர்கள் காலத்தில்தான் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக... பிச்சைக்காரர்களாக வாழ்கிறோமே, படத்தில் வேறு காட்டுவானேன் என்ற அபிப்பிராயமோ என்னவோ! மதுவிலக்கு அமுலில் இருக்கும் இந்நாளில் குடிப்பது போன்ற காட்சிகளை அனுமதிக்கும் இவர்கள், 'பிச்சைக்கார'க் காட்சியை மட்டும் தடுப்பானேன்?

கு. ரா. கிருட்டினன்,
சிதம்பரம்.

விஷயம் புரிகிறது!

சென்னையில் சமீபத்தில் நடந்த தி. மு. க. மகா நாட்டில் 'கட்ட பொம்மன்' இசைத் தட்டுகளை ஒலி பரப்பியபோது, கழகத் தோழர்கள் அதை நிறுத்தும்படிச் சொன்னார்கள். ஒலி பரப்புவதும் நிறுத்தப்பட்டது. ஆனால் இம்மாதிரிச் செய்தது தவறு என்பதைக் கண்டித்து யாரும் அங்கு பேசவில்லை. தி. மு. க.

வின் வளர்ச்சிக்கு ஓரளவு நடிகர்களும் காரணமாயிருந்து வருகிறார்கள். ஆனால் அன்றைய மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட எந்த நடிகரும் இதை 'நடிகர் சமுதாயத்துக்கு இழைக்கும் கேடு' என்று கண்டிக்க மறந்து விட்டனர். தி.மு.க. மகாநாட்டில் கண்டிக்கா விட்டாலும் (அரசியல் மகா நாட்டில் தேவையில்லாதது) நடிகர் சங்கமாவது இச் செயலைக் குறித்து கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கலாம். அதுவும் செய்ய மறந்து விட்டது. தவிர, மற்றொரு விஷயமும் புரிகிறது. சிவாஜி கணேசனின் சுவரொட்டிகளில் சாணி அடிப்பதும், அவரது உருவத்தைக் கிழித்தெறிவதும் தமிழகமெங்கும் நடைபெறுகிறது. பிடிக்காத ஒருவர் மீது தனது வெறுப்பைக் காட்ட இம்மாதிரி செய்வது வழக்கம். ஆனால் 'அந்தப் பிடிக்காதவர்கள் யார்?' என்பதை யாரும் தீவிரமாக யூகிக்க முடியவில்லை. ஆனால் தி.மு.க. மகாநாட்டில் சிவாஜியின் 'கட்டபொம்ம'னை வேண்டாம் என்று ஒதுக்கி வெறுத்திருக்கும் தோழர்களின் செய்கையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது விஷயம் ஓரளவுக்குப் புரிகிறது! எது எப்படியிருந்தாலும் வீண் ஆராய்ச்சியில் இறங்காமல், செய்ய வேண்டியதைச் செய்ய 'நடிகர் சங்கம்' முன் வரவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

வெங்கட்ராமன்,
சென்னை.

[இதைப்போன்ற கடிதங்கள் ஏராளமாக நமக்கு வந்திருக்கின்றன. சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறோம். ஆ-ர்.]

கௌரவம்

சில ஆண்டுகளாகவே, ஜனாதிபதியின் தங்கப்பதக்கம் வங்க, ஹிந்திப் படங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ்ப் படங்களுக்குச் சரியான கௌரவம் கிட்டவில்லை. சிறந்த தமிழ்ப்படம் எதுவும் வெளியிடப்படவில்லை என்று கூறினார்கள். இந்திய சுதந்திரத்திற்காக முழக்கமிட்ட வீரன் ''கட்டபொம்ம''னின் வரலாற்றை அரிய முறையில் ஏராளமான பொருட் செலவில் தமிழில் தயாரித்திருக்கிறார்கள், பத்மினி பிக்சர்ஸார். சிவாஜி கணேசன் அற்புதமாக நடித்திருக்கிறார். அரசியல் தலைவர்களில் பெரும் பாலோர் பார்த்து, படத்தையும் கணேசனையும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தப் படத்திற்கு தமாஷா வரியிலிருந்து விலக்களிக்க சென்னை சர்க்கார் முன்வரவேண்டும். அத்துடன், சிவாஜி கணேசனுக்கு ''பத்மஸ்ரீ'' பட்டமளித்து, கலைக்குக் கௌரவமளிக்கும்படி ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்ய வேண்டும். வடக்கு தெற்கு என்ற பேதமில்லாமல்



வி. எஸ். ராகவன் மகாலிங்கத்திடம் ஏதோ சமாளித்தபடி சொல்வதை புஷ்பலதாவும் சொக்கலிங்கமும் ஆவலோடு கவனிக்கின்றனர். சத்திய நாராயண புரொடக்ஷன்ஸின் ''நானே உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன்'' என்ற படத்தில்.



பிள்ளை சுகமில்லாமே போனதாலே தள்ளாத வயசிலே நானே எல்லாப் பாடும் படவேண்டி யிருக்குது - ஜெயலக்ஷ்மி பிக்சர்ஸ் "நடமாடும் தெய்வம்" படத்தில் எம். ஆர். சந்தானம்.

கலைக்குக் கௌரவமளிக்கப்பட வேண்டும்.

டி. டி. துரைராஜன்,
சென்னை.

நல்லசெய்தி

சாதாரணமாக, தென்னிந்திய மொழிகளில் தயாராகும் படங்கள், ஹிந்தியில் தயாரிக்கப்பட்டால், வட இந்திய இசையமைப்பாளரை, இசையமைப்புக்கு ஒப்பந்தம் செய்வது தென்னிந்திய படாதிபதிகளின் வழக்கமாக இருந்து வருகிறது. இதனால் தென்னிந்திய இசையமைப்பாளர்கள், வட இந்திய இசையமைப்பு முறை அறியாதவர்கள் என்பதுபோன்ற தவருன அபிப்பிராயமும் நிலவுகிறது. ஆனல் அஞ்சலி பிக்சர்ஸார் இதை உடைத்தெறிந்து விட்டார்கள். அவர்களது ஸ்வர்ணசுந்தரி மூன்று பாஷைகளில் தயாரிக்கப்பட்டது. மூன்றுக்கும் இசையமைப்பாளராகப் பணியாற்றியவர், தயாரிப்பாளர் ஆதிநாராயணராவ் தான். அவரது இசையமைப்பில் ஹிந்திப்படம் பல இடங்களில் மகத்தான வெற்றிபெற்றது. பத்திரிகையாளர்களும் அவரை சென்ற 1958-ம் ஆண்டின் சிறந்த இசையமைப்பாளர் என்று தேர்ந்தெடுத்தார்கள். இது நமக்குப் பெருமை; இதற்குமுன் நாம் செய்த தவறுக்குச் சவுக்கடி. இனியாவது, நம் இசையமைப்பாளர்களையே மற்ற மொழிப் படங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ள யாவரும் முன் வரவேண்டும்.

ரா. வெங்கட
சுப்பிரமணியம்,
திருச்சி.

இவர்கள் சொக்கட்டான் ஆடுகிருர்கள். இதில் ஆட்டத்தில் தோல்வி அவளுக்கு. ஆனல் வாழ்வில் வெற்றி கிடைக்குமா? சிட்டடெலில் "விஜயபுரி வீரன்" படத்தில் அசோகன், காமினி.

ஒத்துழையுங்கள்

சமீபத்தில் பத்திரிகையாளர் முன் பேசுகையில், தன்னிடம் பாதி வசன முள்ளதும் பாதி வசன மற்றதுமான கதை படமாக்கப்படத் தயாராக உள்ளதென்றும், தயாரிப்பாளரின் ஒத்துழைப்பு கிடைத்தால் அதைப் படமாக்கப் போவதாகவும், எஸ். பாலசந்தர் கூறினர். 'அந்தநாள்' படத்தை பாலசந்தர் உருவாக்கியதை யாரும் மறக்க முடியாது. இந்த அறி

வுப் பொக்கிஷத்தைத் தக்கபடி பயன்படுத்தி ஊக்கமளிக்க படாதிபதிகள் முன்வரவேண்டும். நம் படங்கள் கலை நுணுக்க அம்சங்களில் சிறந்து விளங்க வேண்டுமானுல் பாலசந்தர் போன்ற மேதைகளுக்கு படாதிபதிகளின் ஒத்துழைப்பு தேவை. கிடைக்கும் என்று எதிர் பார்க்கலாமா?

ஏ. கே. பிரசாத்,
சென்னை.

பிழைப்பு தேவை!

சினிமாத் தொழிலுக்குப் பலவிதத்திலும் சர்க்கார் முட்டுக்கட்டை போட்டு வருகிறது. கிராமப்புறங்களில் நடைபெறும் டூரிங் தியேட்டர்களுக்குப் பாதகமான சட்டங்கள் பல வருகின்றன. கொட்டகையில ஒவ்வொரு பக்கமும் அறுநூறு அடி திறந்தவெளி தேவை என்ற சட்டம் வந்து, பல முறையீடுகளுக்குப்பின் நூற்று இருபதடி இருந்தால் போதும் என்று மாறியது. ஒரு கிராமத்தில் கொட்டகை இருந்தால், பஞ்சாயத்துக்கு சுமார் நாலாயிரம் ரூபாய் தமாஷா வரியாக ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கிறது. அப்படியிருக்க, ஒரு ஆண்டு படம் ஓடினுல் அடுத்த ஒரு ஆண்டுக்கு இடைவெளி விட்டுப் பிறகுதான் ஓட்டவேண்டும் என்று சட்டம் வந்திருக்கிறது. இத னுல் கொட்டகைத் தொழிலாளருக்கு வேலைபோய் விடுகிறது. முதலாளிக்குச் செலவும் வருமானம் இன்மையும் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துக்கு வரி கிடைக்காமல் வருமானம் குறைகிறது. இத்துடன் உழைத்து விடு திரும்பும் தொழிலாளிகளுக்குப் பொழுதுபோக்கு இருப்பதில்லை. பழையபடி மூன்று மாதம் இடைவெளிவிட்டு பிறகு மீண்டும் ஓட்ட அனுமதிக்க வேண்டும். அப்போது தான் எல்லோருக்குமே நல்லது. செய்வார்களா?

நா. சு. சுகவனம்,
நாகரசம்பட்டி.

'நான் வாழப் பிறந்தவன்' என்ற மமதை இவர் பார்வையில் பிரதிபலிப்பதால் கஷ்டம் மற்றவருக்குத்தான்! ''நடமாடும் தெய்வம்'' படத்தில் வில்லன் எம். என். நம்பியார்.

மாற்றி அமைக்கவும்

சமீபத்தில் ஒரு விளம்பரம் பார்த்தேன். மதுரம் பிக்சர்ஸாரின் படத்திற்கு ''மீண்ட ஸ்வர்கம்'' எனப் பெயரிட்டிருக்கிருர்கள். சென்ற

இந்தச் சந்திப்பில் தூய்மை இருப்பதாகத் தெரியவில்லையே! இவள் ஏன் ஒரு மாதிரி இருக்கிருள்? சிட்டடெலின் ''விஜயபுரி வீரன்'' படத்தில் காமினி, புதுமுகம் ஆனந்தன்.

ஆண்டில் ஏராளமான படங்கள் தமிழ்க் கொலைப் பெயருடன் வெளி வந்தன. இன்றும் அந்தக் கொடுமை தொடரவேண்டாம். ''மீண்டசொர்க்கம்'' என்று பெயரிட்டு எழுதினால் தான் என்ன குறைந்துவிடும்? தமிழைக் கொலை செய்வதுதான் புதுமை என்றால் தமிழர்கள் தலை குனியாது என்ன செய்யமுடியும்? மதுரம் பிக்சர்ஸார் சிந்தித்து ''மீண்ட சொர்க்கம்'' என்றே பெயரிடுவார்களா?

சொ. காளிதாசன்,
நாகர்கோயில்.

நமக்குப் பெருமை

'நடிகர் திலகம்' 'சிவாஜி கணேசன் ஒரு சிறந்த நடிகர். அவர் ஒரு தமிழர் என்பதில், கடல்கடந்துள்ள தமிழர்களுக்கு மிகவும் பெருமை. கணேசன் புகழ் தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் மட்டும் பரவினால் மட்டும் போதாது. உலகெங்கிலும் அவர் புகழ் பரவ நாம் முயற்சி எடுக்கவேண்டும். ஹாலிவுட் படாதிபதிகளுக்கும் டைரக்டர்களுக்கும் நாம் கணேசனைப்பற்றி எழுத வேண்டும். திறமையுள்ளவர்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் தேடிப் பிடித்து உற்சாக மூட்டக்கூடியவர்கள் அவர்கள். கணேசன் அமெரிக்கப் பயணத்தை மேற்கொள்ளும் போது அவரை அவர்கள் வரவேற்று அவர் திறமையை உலகறியச் செய்வார்கள். அப்படிச் செய்வதுதான் நமக்குப் பெருமை.

எஸ். வி. கவண்டர்,
டர்பன்.

நடக்குமா?

வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் சுமார் பத்துகோடி ரூபாய் மூலதனத்துடன் இந்தியாவில் கச்சாபிலிம் தொழிற்சாலை அமைக்கப்பட விருக்கிறது. இந்தத் தொழிற்சாலைக்கான சீதோஷ்ண நிலையுள்ள ஒரே இடம் உதகைதான் என்பதை இங்கு வந்த ஒவ்வொரு தனி நிபுணரும் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் என்ன காரணத்தாலோ அந்தத் திட்டம் தள்ளிப் போடப் பட்டுக் கொண்டே வந்தது. இதனால் தெற்கு வடக்கு மனோபாவம் அரசினருக்கு ஏற்பட்டிருப்பதாக பலமான வதந்தி நிலவி வருகிறது.

சமீபத்தில் தொழில் துறை அமைச்சர் கனம் மனுபாய் ஷா பார்லிமெண்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், 'மூன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தின் இரண்டாவது வருடத்திலேயே கச்சாபிலிம் தொழிற்சாலை உதகமண்டலத்தில் ஆரம்பிக்கப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார். அவரது பேச்சு வெறும் பேச்சாகி விடாமல் இது காரியத்தில் நடக்குமா? அப்படியென்றால் வதந்தி பொய்ப்பிக்கப் படுவதுடன் ஆண்டுதோறும் வெளிநாடு செல்லும் ஐந்துகோடி ரூபாய் நமக்கு மிச்சமுமாகும்.

இரா. பரணிதரன்,
கமுதி.

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள்- வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர் ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க நீலா இளநரை தடுக்க

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு: ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, சென்னை-1.



'பாழடைந்த' கால்வாய் புத்துயிர் பெற்றது

மக்களின் சுய முயற்சிக்கு ஓர் சான்று

ஜம்மு-காஷ்மீரில் ராமஹால் ஜில்லா. கர்ணு பிளாக்கில் 7½ மைல் நீளமுள்ள கால்வாயானது வெகு காலமாக உபயோகப்படுத்தப்படாமல் பாழடைந்து விட்டது.

அப் பிரதேசத்தில் சுமார் 400 பேர் இக் கால்வாயை மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டனர். வண்டல் அகற்றப்பட்டது. கரைகள் உயரமாகவும் அகலமாகவும் ஆக்கப்பட்டு சமப்படுத்தப்பட்டன. நீரோட்டத்தைத் தடுக்கும் பாறைகள் தகர்க்கப்பட்டு தடைகள் நீக்கப்பட்டன. இப்படி பல கிராமங்களில் அதிக அளவு நிலங்களுக்கு சுலபமாக நீர்ப்பாசன வசதி அளிக்கக்கூடிய ஒரு கால்வாயை அவர்கள் தற்போது அடைந்துள்ளனர்.

சுயமுயற்சியும் தானே முன் வந்து செய்யும் முயற்சியும் அதிக வசதிகள் அளிப்பதுடன் நாட்டின் முன்னேற்றத்தையும் துரிதப்படுத்துகின்றன.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்

DA 59/333

நான் ரஸித்த காட்சி

சபாஷ் ராமு

கால் ஒடிந்து கிடக்கும் ராமு, தன் தம்பியின் பரீட்சைக்குப் பணம்கட்டு வதற்காக சைக்கிள் பந்தயத்தில் கலந்துகொள்ள முடிவு செய்கிருன். ஆனுல் டாக்டரின் எச்சரிக்கையை நினைவுப்படுத்தி, "கூடாது" என்று தடுக்கிருர்கள் அவனது தோழர்கள். அப்போது அங்கு வரும் கேடி (ரேலங்கி) தன்னிடமுள்ள இருநூறு ரூபாயைக் கொடுக்க வருகிருன். ராமு அதை ஏற்க மறுக்கும்போது, "இது கொள்ளை யடித்ததல்ல. நேர்மையான முறையில் சேர்த்தது" என்று சொல்கிருன். ரசமான காட்சி இது. கெட்டவனுனுலும் திருந்தி நல்லவனுகி விடுவான் ஒரு நாள் என்பதை விளக்குகிறது இது.

பிரேமா,
சென்னை.

"இதை யெல்லாம் என்னிடம் கொடுத்துவிடு. வாழ்நாளெல்லாம் கஷ்டப் படாமல் நிம்மதியாக இருந்து விடுகிறேன்" என்கிருர் அவர். விருப்பமில்லை அவளுக்கு. ஆர். ஏ. பிக்சர்ஸ் தயாரிப்பான "பண்ணையார் மகன்" படத்தில் எம். எஸ். சுந்தரிபாய், வில்லன் டி. கே. ராமச்சந்திரன்.

கல்லூரியில் படித்து வரும் ராமுவின் சகோதரன், அவனது காதலியை ரிக்ஷாவில் ஏற்றி வந்து, அவள் வீட்டில் விட்டுச்செல்கிறன். அதைப் பற்றி மிகத் தரக்குறைவாக குமார் பேசும் போது, ''படித்தவன் அவன்; ரிக்ஷா ஓட்டியல்ல. படிப்புக்காக உழைத்து ஊதியம் தேடுகிறன்'' என்று அவனது தந்தை சொல்கிறர். கண்ணியத்தை வெளிப்படுத்தும் இக்காட்சி, சிறப்பு வாய்ந்தது.

சிவானந்தம்,
தாம்பரம்.

ராமுவின் தம்பி போலீஸ் அதிகாரியாகிறன். ஆனல் சந்தர்ப்பத்தின் கோளாறினல் ராமுவையே அவன் சந்தேகிக்கும்படி நேரிடுகிறது. குறிப்பாகத் தனது வாழ்க்கைக்காக ராமு ஒரு மங்களகரமான நிகழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் அதே வேளையில், ராமுவை ஒரு கொலைக் குற்றத்திற்காகக் கைது செய்யும்படி நேர்ந்து விடுகிறது அவனுக்கு. இந்தக் கட்டம் நமது உள்ளத்தை உலுப்பி விடுகிறது. கடமையின் சிறப்பை விளக்கும் காட்சியல்லவா?

வி. நாமகிரி,
சென்னை.

சகோதரி

சிங்காரம் தனது காரியாலாயப் பணத்தைக் களவாடி விடுகிறன். இதை அறிந்த ஆனந்தக் கோனர் அவன் வேலைசெய்து வந்த மானேஜரிடம் சென்று, ''யார் யார் எதைச் செய்கிறர்கள் என்பதைக் கவனி

''உம், சொல்லும்மா. என்னிடம் எதற்காக வெட்கப்படுகிருய்? உன் விருப்பத்துக்கு மாருக எதுவும் செய்துவிட மாட்டேன்'' என்கிறர் அவர். ''சொல்லட்டுமா ரகசியத்தை!'' என்று சைகையில் கேட்கிறள் அவள். ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் ''வடிவுக்கு வளைகாப்பு'' படத்தில் சாவித்திரி, எஸ். வி. சுப்பையா.

யாமல், தன்னிடம் வரும் கடிதங்களை யும் கணக்குகளையும் கவனித்துப் பாராமல் கையெழுத்திடுவது தவறு'' என்று சுட்டிக்காட்டி விட்டுப்போய் விடுகிருன். இக்காட்சியில் பண்புள்ள மனிதனின் நடத்தையை ஆனந்தக்கோனுரிடம் காண்கிருேம் நாம்.

சிங்காரம்,
காஞ்சீபுரம்.

ஆனந்தக்கோனுரின் முறைப் பெண் குப்பிக்கு நடனம் கற்பிக்க வருகிருன் ஒரு நட்டுவனுர். 'கலை' என்று சொல்லும் அவனிடம் ''குப்பி இந்த வீட்டில் செய்ய வேண்டிய வேலையே நிறைய இருக்கு. இதையெல்லாம் ஒழுங்காகச் செய்வதே ஒரு கலைதான்'' என்று சொல்கிருன். குடும்பப் பெண்ணின் இலக்கணத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது ஆனந்தக்கோனுரின் சொற்கள். ரசமான காட்சி.

வி. மீனுக்ஷி,
சென்னை.

காசி யாத்திரைக்குப் போவதற்கு முன்னுல், சந்திரனின் வீட்டிற்கு வருகிருர் அவனது தந்தை. அப்போது அவன் வீட்டில் இல்லை. வீட்டுக்கு வரும் மாமனுரையும், ஒரு கடன்காரன் என்று நினைத்து, வெளியே தள்ளி கதவைத் தாளிட்டு விடுகிருள் பங்கஜம். ஆனுல் சந்திரனின் வருகைக்காகக் காத்துக் கிடக்கும் கடன்காரர்களிடம் வந்து, கடனை அடைத்துவிட்டு வந்த



இவர் முகத்தைப் பார்த்தால் கொடுமையின் இருப்பிடம் என்று தெரிகிறதல்லவா? இவர் யாரை என்ன செய்யப்போகிருரோ? - ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ் ''வடிவுக்கு வளைகாப்பு'' படத்தில் டி. கே. ராமச்சந்திரன்.

வழியே போய் விடுகிருர் அவர். நமது நெஞ்சத்தை நெகிழ வைக்கும் காட்சி இது. பெத்த மனசு பித்து என்பதை விளக்கி வைக்கிறது இது.

ஜி. சுப்பிரமணியம்,
வேலூர்.

பங்கஜம் படித்தவள். ஆனல் ஊதாரி. அவளது செய்கையால் ஏற்படும் தீமைகளைப் படம் பார்ப்பவர் எளிதில் மறக்க முடியாது. படித்து பட்டம் பெற்று விட்டால் போதும் என்று நினைக்கும் தற்காலப் பெண்களுக்கு பங்கஜத்தின் பாத்திரம் ஒரு எச்சரிக்கையாக இதில் விளங்குகிறது.

ராமசுப்பன்,
செங்கற்பட்டு.

மீனுட்சியின் வீட்டிற்கு வருகிருர் அவளது தந்தை. வரும் வழியிலேயே அவளது நகைகள் மார்வாடியின் கடையில் அடகு வைக்கப்பட்டிருப்பதை அறிகிருர். மீனுட்சியின் கழுத்தில் எதுவும் இல்லாதிருப்பது கண்டு ஒரு சங்கிலியைக் கொடுக்கிருர். அவள் மழுப்புகிருள். குடும்பப் பெண்கள் தங்கள் கஷ்டத்தை வெளிக்குக் காட்டமாட்டார்கள் என்பதை நன்ருகப் படம் பிடித்துக் காட்டுகிறது இது.

எஸ். வேதவல்லி,
மதுரை.

தங்கம் பெயருக்கேற்றபடி தங்கமானவள். பங்கஜத்திடம் வரும் அவள், கணவனைப்பற்றி அவள் தவருகக் கருதி விட்டதை எடுத்துக்

இவர் ஒரு அற்ப சந்தோஷியாகத்தானிருக்க வேண்டும். அல்லது வில்லனுக்கும் வில்லனே? "வடிவுக்கு வளைகாப்பு" நடை பெற இவர் (வி. கே. ராமசாமி) காரணமாக இருந்தாலும் இருக்கலாம்.

கூறுகிருள். 'தன் கணவன் படுத்த படுக்கையில் கிடக்கும்போது எந்தப் பெண் வேருெருவனிடம் மனதைப் பறிகொடுப்பாள்? நீ கொடுப்பாயா?'' என்று கேட்கும்போது ''இல்லே'' என்று பதில் சொல்கிருள் பங்கஜம். ''அதே நிலேயில் என்னே ஏன் நீ வைத்துப் பார்க்கவில்லே?'' என்று தங்கம் கேட்கும்போதுதான் பங்கஜத்திற்கும் தான் தவறுதலாக நடந்து விட்டது தெரிகிறது. அன்பிஞல் தவறைத் திருத்த முடியும் என்பதை நிரூபிக்கும் அருமையான காட்சி இது.

கோபாலன்,
சிவகிரி.



''நிஜார், கோட்டு, டை அணிந்து மீசை வைத்தால் நானும் துரை மாதிரிதான் இருக்கிறேன்!'' ஆர். எஸ். ஆர். மூவிடோன் தயாரிப்பான ''தர்ம பத்தினி''யில் எஸ். வி. சகஸ்ரநாமம்.

யானே வளர்த்த வானம்பாடி

இந்தப் படத்தில் பெட்ரோ என்ற குரங்கும், யானேயும் குழந்தையை தொட்டிலிலிட்டுத் தூங்கவைக்கும் காட்சி தமாஷாக இருக்கிறது. இதை நான் பெரிதும் சுவைத்தேன்.

மாணிக்கம்,
பெங்களூர்.



'எருமைக் கன்னுக்குட்டி' புகழ் சுப்பையா, ஜெமினியின் ''இரும்புத்திரை'' முதலிய படங்களில் பின்னணியில் பாடியிருக்கிருர்!

அருமை மகள் அபிராமி

வந்தவர் யாராஞலும் ஆதரித்து வளர்க்கும் பண்புள்ளவர் அந்த பாதிரி. அபிராமியும் அவள் தாயாரும் அங்கே பல ஆண்டுகளிருக்கின்றனர். யாவருக்கும் அவர் ஆதரவு தருகிருர். ஆஞல் கடைசியில் அவருக்கு ஒரு உண்மை தெரிகிறது. அபிராமியின் தாய், போலீஸாரை ஏமாற்றி, தூக்கு தண்டனேயிலிருந்து தப்பியவள் என்பதை அவர் அறிகிருர். உடனே போலீஸாருக்கு விஷயம் அனுப்புகிருர். ''அனுதாபம் காட்டி ஆதரவு தருவர் நேர்மையானவர் - பரிசுத்த இருதயம் படைத்தவர்; ஆஞல் தவறு காணும் போது சத்தியம் நிலேப்பதைத்தான் அவர்கள் விரும்புவர்'' என்ற அருமையான உண்மையை விளக்குகிறது இக்காட்சி.

பி. எஸ். கிருஷ்ணசாமி,
சென்னே.

என்னடா, இவனைப் பார்த்தால் 'அயன் ராஜபார்ட்' மாதிரி இருக்கிறதே என்று யோசிக்கிறீர்களா? நம்ம தங்கவேலுதான்! அஞ்சலி பிக்சர்ஸ் "அடுத்த வீட்டுப் பெண்" தமிழ்ப் படத்தில்

வெட்டுங்கள் / வெட்டுங்கள்

அருமை மகள் அபிராமி

அபிராமி மிகவும் நல்ல பெண். அவள் வயது கோளாறு காரணமாக சப் இன்ஸ்பெக்டரின்மேல் காதல் கொண்டு விடுகிறாள். உடலெங்கும் காயம் பட்டுக்கிடந்த இன்ஸ்பெக்டரை அவளது கவனிப்பு, விரைவில் குணமடையச் செய்து விடுகிறது. அவன் உடல்நிலை பூரண குணம் பெற்ற பிறகு அவளிடம், "அம்மா எதிர்பார்த்துக் காத்திருப்பாள். அவளிடம் உத்திரவு பெற்று வந்து உன்னை மணம் செய்துகொண்டு விடுகிறேன்" என்று கூறிக்கிளம்புகிறான். அவன் கடமையில் தவறக் கூடாதவன். அதனால்தான் ஹெட்கான்ஸ்டபிளிடம் தன் நிலையைக் கூறி போலீஸ் பட்டாளத்துடன் வருமாறு கூறுகிறான். ஆனால் அந்தக் கடமையை மறந்து குணமான பின் ஊர் திரும்பாமல் அவளிடம் கொஞ்சிக் குலவுகிறான். போலீஸ் அதிகாரி பெண்ணுக்காகக் கடமையைப் புறக்கணிப்பவர் என்ற தவறான கருத்தை ஏற்படுத்தும் இக்காட்சி வெட்டப்படவேண்டும். "நான் ஹெட்கான்ஸ்டபிளிடம் சொல்லி அனுப்பியபடி இன்று கடமை தவறாது பொறுப்பேற்கச் செல்கிறேன்" என்று அந்த இடத்தில் வசனம் இருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும்.

சுஜாதா,
சென்னை.

போலீஸ் ஹெட்கான்ஸ்டபிள், தன் மனைவியின் பெட்டியைத் திருட்டுச் சாவி போட்டுத் திறந்து ஒரு புடவையைப் பைக்குள் வைத்துக்கொண்டு கிளம்புகிறான். மனைவி அவன் விழிப்பதைக் கண்டு, அவனிடமிருந்து பையை வாங்கிப் பார்க்கிறாள். உள்ளே அவளுடைய புடவை இருக்கிறது. அவன், பெண் வேடமணிவதற்காக அதை எடுத்ததாகக் கூறி அவள் சந்தேகத்தைப் போக்குகிறான். போலீஸார் மாறுவேட மணிவது மிகவும் சகஜம். அவற்காக அவர்களுக்கு எல்லாவித வசதிகளும் அரசாங்கத்தால் செய்து கொடுக்கப்படும்.

அவர் எங்கேனும் வெளியூருக்குப் போயிருக்கிறார் போலும். அதனால்தான் அவர் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறாள் இவள்! - ஆர். ஆர். பிக்சர்ஸ் பெயரிடாத படத்தில் இ. வி. சரோஜா.

ஆனால் இதில் வரும் ஹெட்கான்ஸ்டபிள், ஒரு பெண்ணிடம்-அதுவும் மனைவியிடமிருந்து ஒரு சேலையைத் திருடுகிறான். கள்ளச் சாவி போட்டு பெட்டியைத் திறக்கிறான். போலீஸாரைப்பற்றி கேவலமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் இந்தக் காட்சி உடனடியாக வெட்டப்பட வேண்டும். இதுதான் ஹாஸ்யம் என்றால் நமக்கு ஹாஸ்யமே வேண்டாம்!

சம்பத்,
செங்கற்பட்டு.

அபிராமி குழந்தையாக இருக்கும் போது அவள் சித்தி வருகிறாள். பிறகு அபிராமி வளருகிறாள். காதலிக்கிறாள். அப்போதும் கூட அவள் சித்தியின் இளமை துளிக்கூட மாறாமல் அப்படியே இருக்கிறாள். அவள் சாதாரண மனிதப் பிறவியாக இருக்க முடியாது. ஒருவேளை அவள் தேவலோக மங்கையோ! மேக்-அப் விஷயத்தில் இவ்வளவு அஜாக்கிரதையா? அவள் கொடுமைக்காரி என்பதை முதலிலேயே பார்த்து விட்டோமே! பின் காட்சிகளில் அவள் எதற்கு? வெட்டி விடலாமே!

தர்மி - இந்திரா,
திண்டுக்கல்.

அந்தப் பயங்கரமான காட்டுப் பிரதேசத்திலே சப் இன்ஸ்பெக்டரும் ஹெட்கான்ஸ்டபிளும் காசிம் என்ற பயங்கரவாதியைத் தேடிப் போகிறார்கள். சாதாரணமாக இப்படிப்பட்ட பயங்கரக் கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க இரண்டே பேர் போகமாட்டார்கள். மாற்றுடையில் ஏராளமான போலீஸார் போவார்கள். இருந்தாலும் சப் இன்ஸ்பெக்டர் தான் புகழடைய வேண்டுமென்று கதை இருப்பதால் - ஆசைப்படுவதாக நினைத்துச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம். இன்ஸ்பெக்டர் காசிமை சுட்டு விடுகிறார். அடிபட்டு விட்டது என்று தீர்மானித்துத் தேடுகிறார். ஒரு இடத்தில் சென்று அப்படியும் இப்படியும் பார்த்து விட்டுத் திரும்பி விடுகிறார். இது அபத்தம். அடிபட்டவனைத் தேடிப்பிடிப்பதில் அவர் செயலாற்றியிருக்கவேண்டும். உடனேயே பெரிய பட்டாளத்துடன் வந்து காடு முழுவதையும் சல்லடை போட்டிருக்க வேண்டும். இந்தக் காட்சி ஒரு இன்ஸ்பெக்டரின் திறனை - தரத்தைக் குறைக்கிறது என்பதால் வெட்டப்பட வேண்டும்.

சாரங்கபாணி,
காஞ்சிபுரம்.

பாகப் பிரிவினை

சிங்காரம் மிகமிகக் கொடியவன். அவன் அத்தை அவன் சொல்லை

தாடி, மீசை, தலைப்பாகையெல்லாம் வைத்துக் கொண்டால்கூட, முகபாவமும் பேசும் கண்களும் இவர் நடிகர் திலகம் என்று கூறி விடுகின்றனவே! உமா பிக்சர்ஸ் "சித்தூர் ராணி பத்மினி"யில் சிவாஜி கணேசன்.

நீங்கள் படித்தீர்களா?

★

திக்கற்ற இரு குழந்தைகள்	1.00
கமலாம்பாள் சரித்திரம்	1.00
செயற்கை சந்திரன்	1.50
செவ்வாய் மோகினி	1.00
பறக்கும் தட்டு	2.00

★

விவரங்களுக்கு :

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்.

ஆற்காடு ரோடு, சென்னை-24.

தன் கணவனைவிடப் பெரிதாக மதிக்கிறாள். இது கொஞ்சம் அதிகமானாலும்கூட, 'பரவாயில்லை; ஓரிருவர் இருக்கிறார்கள் இப்படியும்' என்று ஒதுக்கிவிடலாம். ஆனால் அவன் ''பட்ட மரம்போல் நிற்கிறாயே!'' என்று மலடி என்று குறிப்பிட்டுக் கேலியாகப் பேசிவிட்டு அணைத்தபடி மாடிக்குக் கிளம்புகிறான். இதை நிச்சயம் வெட்டிவிட வேண்டும். 'மலடி!' என்று குறிப்பிடப்பட்டு விட்டால், மணமான எவளுக்கும் மனம் விண்டு விடும். அப்படிக் குறிப்பிடுகிறவர் யாராக இருந்தாலும் அவளால் அதைச் சகிக்க முடியாது. இந்த உண்மையை ஒதுக்கும் அந்தக் காட்சியை வெட்டிவிட வேண்டும். ஒருவன் என்னதான் உறவினனாக இருந்தாலும் அவன் அணைப்பில் எந்த அத்தையும் புருடனை அலக்ஷியம் செய்துவிட்டுப் போய்விட மாட்டாள்!

எஸ். பழனிவேலாயுதம்,
கல்லிடை.

அவள் யார்

'அவள் யார்' படத்தில் சிவாஜி கணேசன் முதலில் ஒரு பிரபல வக்கீலாக இருக்கிறார். அப்போது அவருடைய வீட்டிலேயே பஹதூர், இருக்கிறான். அவனே சிறையிலிருந்து வெளிவந்த ஒரு கேடி. இந்த விபரம் ஒரு பிரபல வக்கீலுக்குத் தெரியாததாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்ற காட்சியை நீக்கிவிட்டு பஹதூரின் இருப்பிடத்திலேயே சதித்திட்டங்கள் நடைபெறுவதாகக் காட்டி யிருக்கலாம்.

ஏ.வி.எம். கணேசன்,
சென்னை.

பூபதியும் அவன் காதலியும் 'ஹாய்...ஊய்! என்று ஒரு பாட்டு பாடி நடனமாடுகிறார்கள். இதை பஹதூர் ரசிக்கிறான். ஆனால் நம்மால் ரசிக்க முடியவில்லை. இசை, நடனம் இரண்டும் நன்றாக இல்லை. வெட்டி விட்டால் ரசம் குறையாது.

ராமானுஜம்,
தின்னனூர்.

எம். ஏ. கணபதி

'சிபாரிசும், நட்பும்தான் தற்சமயம் படவுலகில் பலர் நுழையக் காரணமாயிருக்கிறது. திறமைசாலிகளைத் தேடிப் போய்ப் பிடிக்கும் காலம் மறைந்து விட்டது' என்று பலர் சொல்லுகிறார்கள். இது பெரும் அளவு உண்மையே! சமீபமாகப் படவுலகில் பிரபல மடைந்திருக்கும் பல நடிகர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான். இவர்களுக்கிடையே, பரம்பரையாக நடிப்புத் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கும் திறமை மிக்க பல கலைஞர்களிருக்கிறார்கள். அவர்கள் படவுலகிலிருந்த போதிலும் சரியானபடி அறிமுகமாகாமல் இருக்கிறார்கள். இத்தகையோரில் இவ்விதழில் அறிமுகமாகும் எம். ஏ. கணபதியும் ஒருவர்.

நாடகம் சினிமாவுக்குத் தாய் என்கிறார்கள். அந்தத் தாயின் மடியிலே இவரது குடும்பம் தவழ்ந்து வளர்ந்து வாலிபம் பெற்றிருக்கிறது. கணபதி தனது பனிரெண்டாவது வயதிலேயே நாடக மேடையேறி எல்லாப் பாத்திரங்களும் ஏற்று நடித்திருக்கிறார். இன்று அவருக்கு முப்பத்தேழு வயதாகிறது. இந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளில் இந்த வெள்ளி விழா நடிகர் ஏறாத மேடையே தென்னகத்தில் கிடையாது என்று சொல்லலாம்.

சத்தியவான் சாவித்திரி, அல்லி அர்ஜுனா, பவளக்கொடி, தூக்கு தூக்கி போன்ற அந்தக் கால நாடகங்களில் இவர் ஹாஸ்ய நடிகராக நடித்து மாநு மதுரை வட்டாரத்திலே மிகவும் புகழ் பெற்றார். பிறகு இவரே தன் சொத்துக்களை விற்று நாடகக் கம்பெனி ஆரம்பித்து "வீர பாண்டிய கட்டபொம்மன்" நாடகத்தை அரங்கேற்றினார். இவர் ஊமைத்துரையாக வந்து பிரமாத புகழ் பெற்றார். ஆனால் நாடகம் பலரைப் போல் இவரையும் பசியின்றி வாழ விடவில்லை. உள்ளதும் போய் வருவாயும் இன்றி சிரமப்படும்போது பி. ராமமூர்த்தியின் தயவில் சென்னை கலைப் பள்ளியில் சேர்ந்து பலவித கைத் தொழில்கள் கற்றார்.

அப்போது - அதாவது 1944-ல் என். எஸ். கே. ஜெயிலில் இருக்கும் போது கே. ஆர். ராமசாமி, என். எஸ். கே. நாடக சபையின் நிர்வாகியாக இருந்தார். அங்கே சேர்ந்து சுமார் ஏழு வருட காலம் வரை கே. ஆர். ராமசாமியுடனேயே இருந்தார். இவர் கே. ஆர். கிருஷ்ணன் நாடக சபையிலிருக்கும்போது, ராமசாமியின் சிபாரிசால் "வேலைக்காரி" படத்தில் முதன் முதலில் நடித்தார். இதுதவிர, சேலம் வட்டாரத்தில் பல நாடகங்களிலும் நடித்து வந்தார்.

'லக்ஷ்மிகாந்தன்' நாடகத்தில் சிங்கக் குட்டி கோவிந்தனாக எம். ஏ. கணபதி.

அந்த நாடகங்களிலொன்றை மாடர்ன் தியேட்டர்ஸ் டி. ஆர். சுந்தரம் பார்த்துவிட்டு எம். ஏ. வேணு மூலம் வரவழைத்து ஸ்டுடியோவின் நிரந்தர நடிகராக்கிக் கொண்டார். பொன்முடி, திகம்பர சாமியார் (ஊசிப் பட்டாசு தாத்தா நடராஜ பிள்ளையாக), தேவகி, சர்வாதிகாரி, காடு (ஆங்கிலப்படம்) முதலியவற்றில் நடித்தார்.

பிறகு டி. ஆர். எஸ். அவர்களிடம் விடை பெற்றுச் சென்னை வந்தார். அம்மையப்பன், பணக்காரி, ஜமீன்தார், பெண்ணரசி, மாலையிட்ட மங்கை, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, தேடிவந்த செல்வம், நல்ல தீர்ப்பு முதலிய பல படங்களில் நடித்தார். மாடர்ன் தியேட்டர்ஸ் வளையாபதி, திரும்பிப் பார் எங்கள் குலதேவி முதலியவற்றில் நடித்திருக்கிறார். எங்கள்குலதேவி அவர் நடித்துக் கடைசியாகத் திரையிடப்பட்டிருக்கும் படமாகும். பண்டரி, மைனாவதி இருவரது தகப்பனாராக அதில் அவர் நடித்திருக்கிறார்.

திரையிடத் தயாராக இருக்கும் 'ராஜ மகுடம்' படத்திலும் தயாராகி வரும் தியாக இதயம், வைஜயந்திமாலா, உயிர்காப்பாள் உத்தமி, பாவை விளக்கு முதலியவற்றிலும் கணபதி நடித்து வருகிறார். அத்துடன் இன்றும் கே. ஆர். ராமசாமியின் நாடகங்களில் நடித்து வருகிறார். கே. ஆர். ராமசாமியும். டி. ஆர். எஸ். அவர்களும் என் வாழ்வில் விளக்கேற்றியவர்கள் என்று நன்றி ததும்பக் கூறும் கணபதி திறமையிலும் பண்பிலும் சிறந்தவர். சரஸ்வதி என்ற பெண்ணை மணந்த அவர் வாழ்வில் மகிழ்ச்சி தருபவன் சுந்தரம் என்ற நான்கு வயது செல்வன்.



'ரங்கோன் ராதா'வில்.

திறமை மிக்க நடிகர்களைத் தேடிப் போகாவிட்டாலும், 'இதோ இருக்கிறார்' என்றால் ஏற்றுக் கொள்கிறார்கள் படாதிபதிகள் இந்த நிலை வளர ஆரம்பித்திருப்பதால் திறமை மிக்கவர்களை அறிமுகம் செய்வதில் 'பேசும் படம்' மகிழ்ச்சி கொள்ளுகிறது. கணபதியும் இத்தகைய திறமைசாலிகளில் ஒருவர் திறமை இருப்பவர் சிபாரிசு பெறுவது நியாயம். ஆகவே கணபதிக்கு நல்ல எதிர்காலமிருப்பதும் நிச்சயம்.

—சம்பத்து.

'தேடிவந்த செல்வம்' படத்தில் ராஜசுலோசனவுடன்.

நக்ஷத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள்

'சூரியன் உதிக்கும் நாடான' ஜப்பானுக்குச் சென்று, சென்ற மாதம் திரும்பிய சௌகார் ஜானகியை 'பேசும் படம்' நக்ஷத்திரக் காலண்டருக்காகப் படம் பிடிக்கச் சென்றிருந்தபோது, அவரது ஜப்பான் பிரயாணத்தைப் பற்றிப் பேச்சு வந்தது.

நக்ஷத்திர நடிகைகளிலேயே தனது வீட்டை, மிகமிக அலங்காரமாக வைத்திருக்கும் ஜானகி ''ஜப்பானில் என்னை மிகவும் கவர்ந்தது அந்நாட்டு மக்களின் நேர்மைதான்'' என்று சொன்னார்.

''எந்த அடிப்படையில் இதைச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

சௌகார் அப்போது தனக்கு அங்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைக் கூறினார்.

ஜப்பானில் ஒசாகா என்ற நகரத்தில் ஜானகி சில தினங்கள் ஒரு ஹோட்டலில் தங்கி யிருந்தார். பின்னர் அங்கிருந்து கிளம்பி, வேறொரு நகரத்திற்குச் சென்றார். அப்போது தனது விலையுயர்ந்த ஷிபர்ஸ் பேனாவைக் காணமற் போக்கி விட்டார்.

ஜானகி அந்தப் பேனாவை தனது அதிருஷ்டப் பேனாவாகக் கருதி வந்தார். குறிப்பாக புதிய படங்களுக்குக் கையெழுத்திடும்போது அவர் அந்தப் பேனாவைக் கொண்டுதான் கையெழுத்திடுவார். அத்தகைய பேனா காணமற் போய் விட்டது குறித்து ஜானகிக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டு விட்டது.

பேனாவைப் பறிகொடுத்த துயரத்தில் அமர்ந்திருந்த அவருக்கு, திடீரென ஒரு யோசனையும் தோன்றியது. 'ஒருக்கால் ஒசாகாவில் தங்கியிருந்த ஓட்டலில் அதை விட்டு விட்டு வந்திருக்கலாமோ' என்று எண்ணம் தோன்றியது. ஆனால் 'அதை விட்டுப் புறப்பட்டு வந்து சில நாட்கள் ஆகிவிட்டன. எனவே எப்படிக் கேட்பது?' என்று கூடவே ஒரு சங்கோஜமும் வந்து விட்டது.

எதற்கும் கேட்டு வைப்போம் என்று, ஒசாகாவில் தங்கியிருந்த ஓட்டலுக்குப் போன் செய்தார் அவர்.

அடுத்த சில நிமிஷங்களில் ''உங்கள் பேனாவைப் பத்திரமாக எடுத்து வைத்திருக்கிறோம். வந்து பெற்றுக் கொள்ளலாம்'' என்று பதில் வந்தது.

மோகேஷ்வர் சித்ராவின் ''அருந்ததி'' சமூகப் படத்தில் சாக்ரடீஸ் தங்கராசு இப்படித் தோன்றுகிறார்.

தனது 'அதிருஷ்டப் பேனு' கிடைத்து விட்டதே என்ற சந்தோஷத்துடன், ஜப்பானியர்களின் நேர்மையைக் கண்டு ஜானகியின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது.

* * *

'சியாமளி' படத்தின் ஆரம்ப தினத்தன்று வாஹினி ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தேன்.

சாவித்திரி, புதுமுகம் வசந்தி முதலியோர் அன்றைய படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்தனர். படத்தின் கதை, வசனப் பொறுப்புடன் டைரக்ஷன் பொறுப்பையும் இதில் ஸ்ரீதர் ஏற்றிருக்கிருர்.

அன்றைய தினம் படப்பிடிப்பு முடிந்ததும் சாவித்திரி, டைரக்டர் ஸ்ரீதர் மற்று பலரும் பேசி கொண்டிருந்தோம்.

பேச்சின் இடையில் ஸ்ரீதர் என்னிடம் திரும்பி, "இந்த அம்மாமட்டும் வசனம் எங்கே எங்கே என்று என்னைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். அந்தமட்டிலும் அவரிடமிருந்து தப்பினேன்!" என்ருர் சாவித்திரியைச் சுட்டிக்காட்டியபடி.

"ஹூம்! விடமாட்டேன் உங்களை!" என்று பதிலுக்கு சாவித்திரி சவால் விடுத்தார்.



பானை பிடித்தவள் தானே பாக்கியசாலி? இவர் (ராமநாதன்) ஏன் பானையைப் பிடிக்கிருர் என்று தெரியவில்லையே! 'மதுரை மன்னன்'னில்.

"அந்த அம்மாவின் சவால் என்னிடம் பலிக்காது! அவர்களே வசனம் பேசிக்க வேண்டியதுதான்" என்று ஸ்ரீதர் சொன்னுர்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"ஆமாம்! படம் முழுவதும் அவர் ஊமையாகத்தான் நடிக்கிருர். இதற்கு எனக்கு வசனம் எழுதத் தெரியாது. அவங்களே வசனம் எழுதிக்கொள்ள வேண்டியதுதான்!" என்று ஸ்ரீதர் சொன்னதும் தான் எனக்கு விஷயம் விளங்கியது.

* * *

பெயரை மாற்றிக் கொள்வதன் மூலம் தங்கள் அதிர்ஷ்டத்தையும் வரவழைக்கலாம் என்று எண்ணுபவர்கள் பலர் இருக்கிருர்



என்னிடம் மந்திரசக்தி இருக்கும்வரை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. நானேதான் இவ்வுலகின் ராஜா என்ற மமதை இவரிடம் காணப்படுகிறது...

'காலையிலே எந்திரிச்சவுடனே வந்துட்டானே பாவி' என்கிருள் இவள் (எம். சரோஜா) மனேகர் பிக்சர்ஸார் தயாரிக்கும் 'மதுரை மன்னன்' படத்தில்.

கள். பெரும்பாலானவர்களின் விஷயத்தில் இது சரியாகவே அமைந்தும் விடுகிறது.

படவுலகமும் இதற்கு விதி விலக்கல்ல.

பிரமீளா-தேவிகாவானதும், அம்மாஜி - ஜெயஸ்ரீயானதும், அஞ்சனிகுமாரி - அஞ்சலிதேவியானதும், லக்ஷ்மிநரசிம்மன்-மனேகராக மாறியதும் போன்ற பல உதாரணங்களை நாம் எடுத்துக் கூறலாம்.

இந்தப் பட்டியலில் கடைசியாக இடம் பெற்றிருப்பவர் மாலினி.

குசும்குமாரி என்ற இவர் மாலினி என்று பெயர் மாற்றிக் கொண்ட காரணம்பற்றி ஒரு நாள் கேட்டேன்,

"குசும்குமாரி என்ற பெயர் ஏதோ ஹிந்திப் பெயர் போல இருக்கிறது. மாலினி என்பது கவர்ச்சிகரமாகவும், அதே சமயம் உச்சரிக்க எளிதாகவும் இருக்கிறது. இந்தப் பெயர் எனக்குப் பிடித்திருக்கிறது" என்று சொன்னுர் மாலினி.

"இது தவிர, வேறுஏதேனும் காரணம் இருக்கிறதா?" என்று அவரிடம் கேட்டேன்.

"இப்போது என் அதிருஷ்ட எண் பதினைந்து. அதற்கும் இப் பெயர் பொருந்துகிறது! எனது அதிருஷ்டப் பெயராகவும் இது அமைந்து விட்டது" என்று சொன்னுர் மாலினி.

மாலினியின் விஷயத்திலும் பெயர் மாற்றம் நல்லதொரு நன்மையையே செய்திருக்கிறதல்லவா?

இந்தப் பெயர் மாற்றத்திற்குக் காரண புருஷராக இருந்தவர் 'சித்ரா' கிருஷ்ணசாமிதான்!

* * *

விஜயகுமாரியின் வீட்டிற்கு நான் சமீபத்தில் சென்றிருந்தபோது ஒரு ரசமான அனுபவம் ஏற்பட்டது.



...அதன் பலன் இந்தநிலை ஏற்படுகிறது. விஜயகா பிக்சர்ஸாரின் "இரத்னபுரி இளவரசி" தமிழ்ப் படத்தில் நடிகவேள் எம். ஆர். ராதா இப்படி தோன்றுகிருர்.

சிரஞ்சீவியின் மர்ம நாவல்கள்
அனைத்தும் எம்மிடம்
கிடைக்கும்

★

சிரஞ்சீவி எழுதிய
புதிய நாவல்கள்

காட்டுப்பாக்கம்
கண்ணம்மா

இரண்டு ஆஸ்
ஒரு ராணி

விலை ஒவ்வொன்றும்
ரூ. 1-50

★

தபால் மூலம் பெறவிரும்புபவர் புத்தக கிரயத்தை முன்னதாக அனுப்பினால் எமது செலவில் அனுப்பி வைக்கப்படும். வி. பி. கிடையாது.

★

அமர நிலையம்
சென்னை - 24.

89695

'இலட்சிய நடிகை'யின் கையில் ஒரு சிறிய ரேடியோப்பெட்டி இருப்பதைக் கண்டேன். சமீபகாலமாக சிங்கப்பூரிலிருந்து பலர் இம்மாதிரி ரேடியோக்களை வாங்கி வந்து, காரில் போகும் போதும், மற்றும் ஸ்டுடியோக்களில் ஓய்வு கிடைக்கும் போதும் வைத்துக் கேட்பதைக் கண்டிருக்கிறேன்.

அதே போன்ற ரேடியோவாகத்தானிருக்கும் என்று எண்ணிக் கொண்டு, "இந்த ரேடியோவின் விலை என்ன?" என்று கேட்டேன்.

விஜயகுமாரி கலகலவென்று சிரித்தார்.

"கல்யாணப் பரிசு படத்தில் நடித்துக்கொண்டிருந்த சமயம் ஒருநாள் நான் செட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது சிவாஜி கணேசன் அவர்கள் அங்கு வந்தார். என் கையிலிருந்த இதை வாங்கிக் கொண்டு, "இந்த ரேடியோவை எப்படிப் போடுவது?" என்று கேட்டார்.

நீங்களே கவனித்துப் பாருங்கள் என்று அவரிடம் சொன்னேன்.

அவர் அதன் இருபுறமும் உள்ள திருகுகளைத் திருகினார். உடனே மேலே உள்ள கதவு திறந்து கொண்டது. உள்ளே 'மேக்-அப்' சாமான்கள் இருந்தன!

உங்களைப் போலவே ரேடியோப் பெட்டிதான் இது என்று எண்ணி ஏமாந்த கணேசன் அவர்கள் என்னைப் பார்த்தார்.

நான் 'களுக்' கென்று சிரித்து விட்டேன்.

என் 'மேக்-அப்' பெட்டி முதன் முதலாக ஏமாற்றியது அண்ணன் சிவாஜியைத்தான். அன்று முதல் இன்று வரை எத்தனை பேர்களை இது ஏமாற்றியிருக்கிறது தெரியுமா?" என்று முடித்துவிட்டு, விஜயகுமாரி அந்தப் பெட்டியைத் திறந்தார்.

பெட்டியைத் திறந்ததும் அதில் உள்ள 'மேக்-அப்' சமான்கள், ஏமாந்த என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தன!

கதை :	ராஷ்மி, B. A.	வசனம் :	கலைப்பித்தன்
சங்கீதம் :	ரங்கராவ்	கேமிரா :	பாலு
கலை :	P. N. மேனன்	எடிட்டிங் :	G. வெங்கட்ராமன்

REGD. No. M4523
பேசும் பட
ஜனவரி 1960 • 75 கா
விஸ்வசாந்தி யின்
பாலநாகம்மா
டைரக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா
தயாரிப்பு: விஸ்வேஸ்வர ராவ்
VISWA SANTHI PICTURES
MADRAS